MAHARAJA SERFOJI'S SARASWATHI
RECEIVED

அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க !

ஆரியப் பார்ப்பான் அன்றைய தமிழனின்
வேரினை வெட்டி வீழ்த்திய நாள் முதல்
தமிழரின் ஆட்சியைத் தமிழரே நடத்துதல்
அமிழ்ந்த மலையை அகழும் அருஞ்செயல் !

தப்பித் தவறியோர் தமிழன் எழுந்தே
அப்படி இப்படி ஆட்சியைப் பற்றினால்
இன்னொரு தமிழனே எதிர்ப்பதும், அவனின்
பின்னங் காலைப் பிடித்தே இழுப்பதும்,
அடிக்குழி பறித்தே ஆளைச் சாய்ப்பதும்
வடித்து வைத்த வரலாற்றுச் செய்தி !

(தொடர்ச்சி 1-ஆம் பக்கம்)

தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி: 10
ஓலை: 5-6

எரு 75 காசு

நமக்கு வந்த மடல்கள்.

0: 336: இங்கு என்னுடன் பயிற்சிபெறும் தமிழக நண்பர்களில் (60 பேர்) ஓரிருவர் தவிர ஏனையோர் நமது கொள்கையை (விடுதலை) ஏளனத்துடன் பார்க்கின்றனர், அவர்களுடன் சொல்லாடியும் பயனில்லை. மொழியறிவு சிறிதும் அற்ற நிலையில் அவர்கள் பேச்சு அமைகின்றது. பட்டம் பெற்றவர்கள் நிலையே இங்ஙனமெனின், ஏனையோர் நிலைபற்றி என்ன நினைக்க? எவர் என்ன நினைப்பினும் சொல்லினும், தலைவர் பெருஞ்சித்திரனார் அவர்களுடன் தோளொடு தோள் நிற்க என்னை அணியப்படுத்தி வருகின்றேன். நமதியக்கம் விரைவில் வெற்றிபெறும் என்றெனதுள்ளுணர்வு கூறுகிறது. நமதியக்கம் வெற்றிபெறும் வரையில் இறைப்பேராற்றலை வழிபடுவதையும் நிறுத்தியுள்ளேன். —கு. வேங்கடாசலம், கல்கத்தா-4.

0: 337: உங்கள் தென்மொழி இதழ்களை நான் படித்தேன். உங்களை நினைத்தால் மிகவும் இரக்கமாக உள்ளது. தமிழர்களுக்காக உண்மையான தொண்டு செய்யும் உங்களுக்கு ஒரு பயனும் விளையப் போவதில்லை. உங்கள் கொள்கைகளை, தொண்டுகளை மதிக்கத் தக்க அளவுக்குத் தமிழர்கள் இல்லை குருடர்களாக,செவிடர்களாக, எருமைத் தோல் விலங்குகளாக, நடைப்பிணங்களாக தமிழர் உள்ளனர். அதிகாரமும் பணமும் படைத்த தமிழன் உங்களை வாழவிட மாட்டான். தமிழர்கள் உருப்படப்போவதில்லை. தமிழகமும் விடுதலை பெறாது. உண்மை உழைப்பாளியான உங்களை எல்லாரும் ஏமாற்றி விடப்போகிறார்கள். இறுதியில் தனித்து நெஞ்சொடிந்து ஏமாறிக் கவலையுடன் நீங்கள் இறக்கப்போவது உறுதி. அறிவுடன் நடக்கப் பாருங்கள். தென்மொழியில் கவர்ச்சிப் படங்கள், காதல் கதைகள், திரைப்படக்காரிகள் படம் போட்டு வெளியிடுங்கள். ‘ராசி’ பலன் போடுங்கள். இதழ்கள் மிகுதியும் விற்கும். கடன் தொல்லை போகும். ஊதியமும் வரும். தமிழர்களை நம்பி இழிந்து போக வேண்டாம். உங்களைக் கண்டு மிகவும் மனமிரங்கும் ஒரு தமிழன்.

— ந. நிலவன், ஆரணி.

0: 338: தமிழினம் ஒன்றுபடல்வேண்டும், தமிழ் நாடு தனியே பிரிதல் வேண்டும்; புதிய ஒற்றுமைக் குமுகாயத்தினை அமைத்தல் வேண்டும் என்ற உங்கள் கருத்தின் வழியே இயங்குவது அழகப்பர் கல்லூரியின் தமிழியக்கப் பாசறைபாகும். மூன்றாண்டிற்கு முன்னர் தொடங்கப் பெற்ற பாசறை மாணவர்க்குள் ஒருமை உணர்வை ஊட்ட வேண்டுமென்று பேசியும் செயல்பட்டும் வந்தது - இன்றும் அவ்வாறே இத்துணை முயற்சி எடுத்தும் நாம் கண்ட பயன்?

விடுதிச்சார்பாளர் தேர்வுகள் – பேராயக் கட்சி, தி.மு.க பிரிவுகள் இறுதியில் மோதல்கள்! இந்நிலைக்கெல்லாம் காரணியமாயிருக்கும் இம் மாணவர் குமுகாயமா எதிர்கால உலகின் புனைவாளர்கள்? ஐயகோ வெட்கம்! தமிழன்னையே உனை வாழவைக்க வரும் மறவர் கூட்டமா இது? இல்லை மானமில்லா வெறியர் கூட்டம் இது! இக்கயவர் கூட்டத்தினைத் திருத்த வழியில்லையா?

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க]

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

தமிழனைக் கொண்டே தமிழனைச் சாய்ப்பதில்
சிமிழா விழியோடு ஆரியன் செய்யும்
தந்திர மந்திரம் தமிழர்க்குப் பழங்கதை!
முந்தை இரணியன் கதையினை எண்ணுக!

இற்றைத் தமிழனின் ஆட்சியை எதிர்த்தே
ஒற்றை நடிகன் உறுமலும், அவனைப்
பற்றிக் கொண்ட பார்ப்பனர் தூண்டலும்,
வெற்றி காண விளம்பரப் படுத்தலும்,
திரவிடச் சோழனைத் திரவிடச் சேரன்
கரவடங் கொண்டு கழுத்தறுப் பதுவே!

கலைஞர் ஆட்சியைக் காசுக்கு வாங்கிய
விலைஞரைக் கொண்டு வீழ்த்தும் கொடுமையை
உண்மைத் தமிழர் ஒருநாளும் பொறுக்கார்!
கண்மயிர் போலும் கருதுவர் உயிரை!

ஒரேஒரு கல்லில் இருகனி உதிர்க்கும்
இராசாசி எற்றிய இறுதிக் கல்லிது.
கலைஞரை வீழ்த்திக் காம ராசரின்
நிலையினை உயர்த்துவேன் என்பர், இராசாசி!

காம ராசரின் கைகள் உயர்ந்தால்
"காம ராசரோ கருப்புக் காக்கை;
கருப்புக் காக்கையை இருப்புலக் கையினால்
வெருட்டுக, வெருட்டுக" என்பர், இராசாசி!
இராசாசி உள்ளம் தமிழர்க்குப் பள்ளம்!
இராசாசி நினைப்பதோ என்றைக்கும் என்னெனில்,
"இன்றோ நாளையோ எப்படி யோ,ஓர்
ஒன்றிப் பார்ப்பான் உயர ஏறித்
தன்கீழ்க் காலடித் தமிழரைக் கிடத்தி
முன்போல் 'மநுநெறி' மூளவி டானோ"
என்பதே என்க! என்றும் தமிழர்க்குத்
தின்பதே வாழ்வெனில் அதுவும் திகழ்வதே!
நூற்பா ஒன்றினை நினைவினிற் கொள்ளுக!
"பார்ப்பான் நண்பன் தமிழர்க்குப் பகைவன்"

ஆகவே, கலைஞர் ஆட்சியைக் காக்க!
சாகவே நேரினும் தமிழரால் சாக!
பொருட்செல்வம் மானப் பொருட்டன்று! தமிழரே,
அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க!

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 10: ஓலை: 5-6

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

மடங்கல்-துலை தி. பி. ௨௦௦௩ – (செப்-நவ – 1972.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1 தமிழகம்.

கலைஞரின் கைகளை வலுப்படுத்துக!

கண்டிப்பதுவேறு ; காப்பாற்றுவது வேறு. ஒரு வகையில் கண்டிப்பதும் காப்பாற்றுவதே! தி.மு.க. அமைச்சரவையைப் பல நிலைகளிலும் தென்மொழி பலவாறு கண்டித்து ஆசிரியவுரை எழுதியுள்ளது. அவற்றைப் படித்த தி.மு.க. அன்பர்கள் சிலர் (அவர்களை அவ்வாறு தென்மொழி மதிப்பிடவில்லை) அவ்விதழையே சுக்கல் நூறுகக் கிழித்தெறிந்து விட்டு, மேற்கொண்டு தென்மொழியையே தொடுவேதில்லை என்று சூளுரைத்ததெல்லாம் தென்மொழிக்குத் தெரியும். தென்மொழியின் தமிழ் வளர்ச்சிக் கொள்கைக்காகவும் பேராயக்கட்சி அமைச்சரவையை அது தாக்கி எழுதிய வன்மைக்காகவும், அதனை ஏராள

மாக விற்பனை செய்து வந்த தி.மு.க. முகவர்கள் சிலர் (இப்பொழுது அம்முகவர்களெல்லாரும் எந்தத் தலைவரின் (!) பின் சென்றுள்ளாரோ, நம்க்குத் தெரியாது) தென்மொழி இதழையே இனி விற்பதில்லை என்று முடிவு கட்டி வழக்கமாகப் பெற்ற தென்மொழி இதழ்களையே திருப்பி அனுப்பியதையும் தென்மொழி மறந்துவிடவில்லை. மேலும் தென்மொழியின் வளர்ச்சியில் மிக நம்பிக்கை கொண்டவர்கள்போல் தங்களைத் தென்மொழியன்பர்களிடம் அறிமுகம் செய்து கொண்டவர்கள் சிலர்—தென்மொழிக்குப் பக்கம் பக்கமாகக் கடிதங்கள் எழுதித் 'தி.மு.க. வைத் தாக்க வேண்டா; அவ்வாறு தாக்கினால் தென்மொழி வளராது ; வாழாது; என்று கருத்தறிவித்தவர்களெல்லாரும் இன்று' 'தி.மு.க. வையே ஆட்சியினின்று இறக்கிவிட்டுத்தான் மறுவேலை' - என்று வெளிவந்த மலையாள நடிகருடன் கமுக்கமாகக் கைகுலுக்கிக் கொண்டிருப்பதும் நமக்குத் தெரியும். இப்படிப்பட்ட அரசியல் தூறல்களைப் பற்றியும் ஆட்சிப் புயல்களைப் பற்றியும் கவலைப் படாது, துளியும் நடுக்க மற்ற உள்ளத்துடனும், நடுநிலையான நெஞ்சுடனும், தமிழரின் நலமே கருதும் நோக்குடனும், நசையற்ற போக்குடனுமே தென்மொழி நடந்து கொண்டதால், அவ்விதழ் இழந்த உறுப்பினர்கள் நூற்றுக் கணக்கானவர்; அது விற்பனை தவிர்ந்த ஊர்கள் பல; அது பெறத் தவறிய பொருள் வருவாய் சில ஆயிரங்கள். ஆனால் தென்மொழிக்குத் தெரியும் ; நடந்துவரும் அரசியல் என்ன என்பதும், நடக்க வேண்டிய அரசியல் எதுவென்பதும், ஆட்சியமைப்பு என்பது எவ்வாறு அமையவேண்டும் என்பதும். அதனால் அது தன் இழப்புகளையும் ஏந்துகளையும் பொருட்படுத்தாது, நடுநிலையான கண்ணோட்டத்துடன் எந்தச் சூழ்நிலையாலும் பரபரப்படையாது தான் சரியென்று கருதியவற்றையே துணிந்து சொல்லும்-சொல்லிக் கொண்டிருக்கும் மதுகை பெற்றிருந்தது; இருக்கிறது. எப்பொழுதும் காற்றடித்த பக்கம் இணக்கம் கொள்ளுவதும் கப்பல் போகும் பக்கம் ஏறிக் கொள்ளுவதும், கப்பலில் இடமில்லையானால் கடலை முறைத்துக் கொள்ளுவதும் தென்மொழிக்குப் பழக்கமில்லை. தென்மொழியின் ஆசிரியவுரைகள் எந்தக்கட்சிக்கும் விளம்பர வண்டியாக என்றும் பயன்பட்டதில்லை. அதன் பக்கங்களில் எதுவும் எந்த ஒரு தனிக் கட்சியுன் சுவரொட்டிகளையும் ஒட்டிக் கொள்ள இடந்தந்ததில்லை. மொத்தத்தில் சொல்வதானால், அதன் கருத்துரைகள் எந்தத் தனி ஒருவருக்கும் தமிழ் நலன், தமிழர் எழுச்சி, தமிழக விடுதலை யுணர்ச்சி-இம்மூவகை நோக்கத்திற்கும் அப்பாற்பட்டு வெளிப்படுத்தப்பட்டு விடவில்லை. வாயவிழ்ப்பாகவோ, கைநெகிழ்ப்பாகவோ அஃது எந்த ஒரு தனிச் சொல்லையும் நழுவ விட்டு

விடவில்லை. தனக்குத் தேவையான பொழுது எவரையும் தலைமேல் தூக்கி வைத்துக்கொள்வதும், தன் உட்கிடை நிறைவேற வில்லை யானால் அவரைக் காலில் போட்டு மிதித்துக் கொல்வதும் தென்மொழிக்குப் பழக்கமில்லை. அறிஞராயினும் சரி; அரசராயினும் சரி; அகன்ற செல்வராயினும் சரி; தென்மொழிக்கு ஒரே சொல்தான்; ஒரே நிறைதான்: ஒரே போக்குத்தான். இரண்டு உருபா கொடுத்த வரையும் அது பாராட்டியிருக்கின்றது; இரண்டாயிர உருபா கொடுத்தவரையும் அது பாராட்டியிருக்கின்றது. இரண்டாயிர உருபா நன்கொடையையும் அது தலைதாழ்த்திப் பெற்று நன்றி நினைத்தது; இரண்டு காசு நன்கொடையையும் அது தலை தாழ்த்திப் பெறக் காத்திருக்கின்றது. காசால் அதன் ஒரு வரியையோ, எழுத்தையோ கைப்பற்றியவர்கள் இன்று வரை இல்லை. எனவேதான் அது கருத்துகளை எப்பொழுதும் நிமிர்ந்து சொல்லுகின்றது ; துணிந்து சொல்லுகின்றது; தகாதவற்றைத் தூற்றிப் புறந் தள்ளுகின்றது; தக்கவற்றைப் போற்றிப் புரந்து கொள்ளுகின்றது. இதன் அடிப்படை உண்மைகளைச் சரிவர உணர்ந்து கொள்ளாதவர்களே- உணர்ந்து கொள்ள முடியாதவர்களே, அல்லது வேண்டாதவர்களே ஒரு கையில் பசைச் சட்டியையும், ஒரு கையில் காழ்ப்புச் சுவரொட்டியை யும் வைத்துக்கொண்டு கண்ட கண்ட ஊர்களுக்குப் போய் அங்குள்ள தென்மொழி யன்பர்களை வலிந்து தேடிச் சென்று அவர்கள் நெஞ்சுகளிலும் முதுகுகளிலும் தென்மொழிமேல் பொருமை வரிகள் எழுதப் பெற்ற அச்சுவரொட்டிகளை ஒட்டிவிட்டுத் 'தடபுடலாக'- மிகப் பெருமிதத்துடன் அங்காந்து அளாவியும், ஒப்பாய்வு செய்து கொண்டு உளமகிழ்ந்தும் திரிகின்றனர். அவரனைவரின் எண்ணங் களும் தவிடு பொடியாகும் காலம் விரைவில் வரத்தான் போகின்றது. தென்மொழி அன்றுபோல் என்றும் நிமிர்ந்து நிற்கத்தான் போகின்றது. இவ்வரிகளைப் படிக்கும் எதிர்கால வரலாற்றறிஞர்களே அதுபற்றிச் சரியான தீர்ப்புக் கூறுபவர்களாகையால் முடிவை அவர்களுக்கே விட்டு விடுவோம். தென்மொழி இக்கால் தன்னைப்பற்றி இத்துணை விரிவாக முன்னுரை சொல்ல வேண்டிய தேவை என்னவெனில், அ:்து இதுவரை எந்தத் தி.மு.க. வைக் கண்டித்து எழுதிக் கொண்டு வந்ததாகப் பலர் - மிகப் பலர்- எண்ணிக் கொண்டு வந்தார்களோ அந்தத் தி.மு.க. வைப் போற்றிப் புரக்க - கட்டிக்காக்கத் தொடங்கி யுள்ளது. இந்தக் கடமை நோக்கப் போக்கில் எவரும் மாசு கற்பித்து விடக் கூடா தென்பதாலும், அப்படிக் கற்பித்துப் பேசுவதே நம் அரசியல் துண்டர்களின் 'அரசியல் அறிவு' என்பதால் அவர்கட்கு எச்சரிக்கை கொடுத்து எழுதவேண்டுமென்பதாலும் என்க. முன்பொரு முறை 'தென்மொழி பட்டத்திற்கும் பதவிக்கும் ஆசைப்படுகிறது'

என்று குரல்நெறி யேறக்கத்தியவர்களெல்லாரும், இன்று மலையாள நடிகருக்குத் தொலை பேசி வழித் தம் ஒப்புதலைத் தெரிவித்துக் கொள்ளும் இந்த நேரத்தில், தென்மொழி தன் இன நல முத்திரையை இப்பொழுதுள்ள அரசியல் சூழலின்மேல் குத்தித் திசைதப்பிப் போகவிருக்கும் தமிழ்த் தம்பிகளுக்குக் கைகாட்டத் தொடங்கி யிருக்கின்றது. இவ்வாசிரியவுரை உண்மையான மொழி நலமும் இன நலமும் நாட்டு நலமும் கருதும் தென்மொழியன்பர்களுக்கு மருட்சி யாக இருக்காது; மகிழ்ச்சியாக விருக்கும். அவ்வாறல்லாத பிறர்க்கு இகழ்ச்சியாக மட்டுமன்று; எரிச்சலாகவும் இருக்கும். தென்மொழிக்கோ இரண்டு நிலைகளும் இப்பொழுதும் எப்பொழுதும் ஒன்றுதான். அதன் முழுநோக்கமும் இராசாசிக்கு இருப்பதுபோல் ஒரே நோக்கந்தான். 'இந்தத் தமிழினம் எப்படியாவது-எப்பொழுதாவது முன்னேறி விடாதா' — என்பதே அது- மற்றப்படி அவருக்கிருக்கும் காழ்ப்புணர்வு போல் நமக்கு என்றும் ஏற்பட்டதில்லை.

தி.மு.க.வுக்கு - குறிப்பாக - கலைஞருக்கு நம்மைப் பிடிக் கின்றதோ இல்லையோ, நமக்கு என்றுமே தி.மு.க. பிடிக்காமல் இருந்த தில்லை. அது தமிழை வாழ்த்தி விழா வெடுத்த பொழுதெல்லாம் நாமும் அதை வாழ்த்தி வரவேற்றிருக்கின்றோம். அது திருக்குறளைத் தன் கைகளில் உயர்த்திப்பிடித்து உலகத்திற்குக் கேட்குமாறு அதன் சிறப்புகளையெல்லாம் உரக்கக் கூறிய பொழுதெல்லாம் அதன் குரல் நரம்புக்கு வாழ்த்துப் பாடி வலுவேற்றியிருக்கின்றோம். அது தெருவெல்லாம் தமிழ்ப்பெயரை ஒளியேற்றிய பொழுதெல்லாம் அதன் உருவத்திற்கு உயிருணர்வு நிலைக்கும்படி ஊட்டங்கொடுத் திருக்கின்றோம். ஆனால் அஃது எந்தக் குரலால் தமிழைப் பற்றிப் பேசியதோ அதே குரலால் உண்மைத் தமிழறிஞர்களை வாழ்த்தும்படி வேண்டியிருக்கின்றோம். எந்தத் துணிவொடு தமிழுக்கு உலகம் வியக்க விழா வெடுத்ததோ அந்தத் துணிவொடு அதே தமிழுக்கு அடிப்படையான ஓர் அகரமுதலி - செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி - ஆக்கிப் படைக்க முன் வர வேண்டும் என்றும், அப் பணிக்குத் தமிழ்த்தாயின் தவச்செல்வன் – தலைமாணாக்கன்– தனித்தமிழ்ப் பெரும் பேராசிரியன் - மொழி முதல்வன் - மூலச்சொல் காணும் மூதறிஞன் - மொழி விளக்கங் காட்டிய ஒளி ஞாயிறு-ஞா. தேவநேயப் பாவாணரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டு மென்றும் கேட்டிருக்கின்றோம். இவ்வாறு பாராட்டியதும் தென்மொழி தான். பணிசெய்யக் கேட்டதும் தென்மொழிதான். அவ்வாறு செய்யா விடத்துக் கண்டித்ததும் தென்மொழிதான். கண்டித்தது என்றால் அதிற் கனிவில்லாமலில்லை. கருத்துக்கூறியது என்றால்,

அதிற் கரணியமில்லாமலும் இல்லை. ஆனால் அது தி. மு. க, வைக் கண்டித்தது என்பதற்காக, அது தி.மு.க. வை. மக்களிடமிருந்து துண்டித்தது என்று பொருள் தர எவராலாகிலும் முடியுமா? மேலும் அக்கண்டிக்கும் நிலையைத் தென்மொழி இன்னும் விட்டுவிடவில்லையே! ஆனால், அதற்காக கலைஞர் ஆளும் இவ்வரசுக்கு, எந்தமிழர் நிறுவிய இவ்வாட்சிக்கு, ஏதாகிலும் ஓர் ஏதம் வந்தது எனில் அதைத் தாங்கிக் கொள்ளும் பொறுமை தென்மொழிக் கில்லை. அதற்கும் கரணியங்கள் உண்டு.

இக்கால் தி.மு.க.வின் மேல் சாற்றப்படும் பழி அதன் செயல் முறைகளைப்பற்றிக் கூறப்படுவதாக இல்லை. நடைமுறைகளைப் பொறுத்துக் கூறப்படுவதே. அது மக்களுக்குத் துளியும் நன்மை செய்யவில்லை என்பதோ, அதன் எதிர்காலத் திட்டங்களில் அது தன் நம்பிக்கையை இழந்து விட்டது என்பதோ, அத் திட்டங்களைச் செயலாற்றும் வல்லமையில் அது குறைந்து வருகின்றது என்பதோ அதன்மேல் உள்ள குற்றச் சாட்டுகளல்ல. அதன் தலைவர்கள், குறிப்பாகக் கலைஞரும் அவரைச் சார்ந்த ஓரிரண்டு அமைச்சர்களும் கையூட்டு வாங்கித் தம் சொத்துகளைப் பெருக்கிக் கொண்டார்கள் என்பதே தலையாய குற்றமாக இவ்வாட்சியின்மேல் சுமத்தப் பெறுகின்றது. இத்தகைய குற்றச் சாட்டு கலைஞர் மேல் மட்டுமா சுமத்தப் பெறுகின்றது? வேறு மாநிலங்களில் எழுப்பப் பெற்ற- பெறுகின்ற- இதுபோன்ற குற்றச்சாட்டுகளுக்கும், நேரடியாக இந்திராமேல் எழுப்பப் பெற்ற-பெறும் இதையொட்டிய பல குற்றச்சாட்டுகளுக்கும் முதலில் அவரவர்களிடம் விடையைப் பெற்றாக வேண்டும். மக்களரசு முறையில் இந்தியாவின் ஆட்சி அமைந்திருப்பதால் ஓர் அரசுக் குற்றவாளியை அவரே அக் குற்றத்தை மனச்சான்றுப்படி ஒப்புக்கொண்டு விலகினலொழிய – இறுதியாகக் கோட்டுத் தீர்ப்புக் கூற வேண்டியது மக்கள் மன்றமே. அஃதாவது பொதுத் தேர்தலே. அத்தேர்தல் முறைகளிலேயே ஓட்டை உடைசல்கள் உள்ள பொழுது, ஓர் ஆட்சியின்மேல் எந்தக்குற்றமும் சாட்டி எந்தச் சட்டத்தின் படியும் அதனைக் கீழிறக்கி விட முடியாது. அவ்வாறு செய்ய முற்படும் பொழுது மக்களரசமைப்பும் கைநழுவி வல்லதிகாரப் படையமைப்புக்கு நாட்டைக் கொண்டு போய் நிறுத்தி விடும். இதுதான் இன்றுள்ள மக்களரசமைப்பால் உலகுக்குக் கிடைத்த பட்டறிவு. மேலும் நம் நாட்டுச் சட்ட அமைப்பிலேயே இன்னும் அடைக்கப்பெற வேண்டிய ஓட்டைகள் பலப்பல. அவற்றையெல்லாம் முறையே அடைக்காத வரை முந்திராக்களும், தர்ம

தேசாக்களும் பட்டப் பகலிலேயே கோடி கோடியாய்க் கொள்ளை யடிக்க, இராக்காலத்தில் எங்கோ நடக்கும் ஓரிரண்டு திருட்டுகள் பற்றி என்ன பேச்சு, வேண்டிக் கிடக்கிறது! அவ்வாறு நடக்கத்தான் நடக்கும். இவ்வாறு நடக்கும் இந்த இராக்காலத்தின் பூனையுருட்டல் களைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டு அரசியல் அமைப்பைக் கீழ்மைப் படுத்த எண்ணுபவர்கள்,பகலிலேயே யானை புகுகின்ற வீட்டைக் கட்டிக் காக்க என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள்? இவற்றை ஒழிப்பது வெறும் அட்டைக் கத்திகளை வைத்துக் கொண்டு வெட்டிச் சாய்க்கின்ற திரைப்பட நடிப்பன்று. இக்கால் இத்தகைய திரைப்பட நடிப்புடன் ஒன்றி நடிக்கும் பொதுவுடைமைக் கட்சிக் காரர்களுக்கு இவையெல்லாம் புரியாத புதிர்களல்ல. இந்தியக் காடுகளில் யானை வேட்டைக்குப் புறப்பட்ட அவர்கள் இப்பொழுது சென்னைக் கோட்டையில் பூனை புகுந்து விட்டதாகக் கூச்சல் போடுவது, மக்களுக்குத் தாங்கள் இருக்கின்றோம் என்பதை நினைவு படுத்திக் கொள்வதற்காகவா? அல்லது அவ்வளவு தான் தங்கள் திறம் என்பதை மற்றவர்களுக்கு உணர்த்துவதற் காகவா? இல்லெனில் இந்தப் பொதுவுடைமைத் தலைவர்களுக் கொல்லாம் கிடைக்காத 'புரட்சிப்' பட்டம் இந்தப் புனைமுக நடிகருக்குக் கிடைத்ததைப் பொறுத்துக் கொள்ள முடியுமா, அவர்களால்? சட்டமன்றத்தில் ஆண்டே புகுந்தபின் காணாது போன கலியாணசுந்தரங்கள் எம்.சி.இராமச் சந்திரனின் குதிக்கும் நடிப்பையொட்டித் தாமும் கொதிப்படைந்தது ஏன்? பொதுவுடைமைக் கட்சிக் கொள்கைகளின் வலிமையை விடவா எம்,சி.இராவின் குற்றச்சாட்டுகளில் வலிவு மிகுதியாக விருக்கின்றது? எண்ணிப் பார்க்கவே இரக்கமாக விருக்கின்றது!

ஒரு குடியரசு நாட்டில் ஒரு வகைக் குற்றச்சாட்டாலேயே ஓர் ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியுமென்றால், அந்நிலைக்குக் கடந்த தேர்தல் குற்றச் சாட்டுகளை விடவா வலிவான புளியங் கொம்பு கிடைத்துவிடப் போகின்றது? இந்தியாவைப் பொறுத்த வரையில் சட்டத்தைக் காட்டி எவரையும் மிரட்டிவிட முடியாது. ஏனென்றால் இங்குள்ள சட்டம் ஏழைகளைக் காப்பதற்காகவோ, பொதுமக்களை ஆள்வதற்காகவோ பயன் படுத்தப் பெறுவதில்லை. அது பணக்காரர் களைக் காப்பதற்கும், அவர்களின் கைக்கூலிகளை ஆட்சியில் அமர்த்து வதற்குமே பயன்பட்டு வருகின்றது. எனவே சட்டத்தைக் காட்டி மிரட்டுவதெல்லாம் தமிழக முதலமைச்சர், கலைஞர் அருட்செல்வனார் (கருணாநிதியார்) உறுதியான உள்ளங் கொண்டிருக்கின்றார்

இல்லையா என்பதை மக்கள் உணர்ந்து கொள்வதற்காகப் பயன்படுமே யன்றி, அவராட்சியை அணுவேனும் அசைத்துக் காட்டுவதற்குப் பயன்படாது. அவராட்சி அவருடையதன்று; தமிழர்களுடையது. திரைப்படத்திற்குத் திரள்திரளாகப் போய் அட்டைக் கத்திக் காட்சிகளையும், அப்பட்டமான அருவருப்புக் காட்சிகளையும் கண்டு சீட்டியடித்துக் கைதட்டி ஆரவாரக் களிப்பால் எக்காளமிட்டுக் கொண்டு நகர்வலம் வருகின்றார்களே, அந்தத் தமிழர்களுடையதன்று. அந்தத் தமிழர்கள்தாம் இக்கால் அங்கிருந்து தம் அண்ணன் குடும்பத் தாருடன் வெளியேறி விட்டவர்களாயிற்றே! அவர்கள் மட்டுந்தாம் தமிழர்கள் – என்று நம்பிக்கொண்டுதான் ஆரியக் கூத்தாடிகளும் இந்தத் திரைப்படக் கூத்தாடியுடன் சேர்ந்து கொண்டு – நெடுங்காலத் திற்குப்பின் தமிழர்கள் ஏறி ஆட்சி செலுத்தும் இந்தத் தமிழக வரசை ஒழித்துவிட உறுதி பூண்டு நிற்கின்றனர். இந்த வகையில் தி. மு. கழகம் மிகத் தூய்மைப் படுத்தப் பெற்றதே இக்காலச் சூழல்களால் கிடைத்த பெரிய நன்மை. இனி இக்கழக அமைச்சரவையை அசைக்க எவராலும் இயலாது. அதைக் கட்டிக்காக்கின்ற பொறுப்பை உலகிலுள்ள உண்மைத் தமிழர்கள் அனைவரும் ஒருமுகமாக ஏற்றுக் கொண்டு விட்டனர் என்பதைப் பார்ப்பனீயம் அறியவேண்டும்; இந்திராவும் உணர வேண்டும்.

கலைஞரின் ஆட்சி அப்பழுக்கற்றது என்று நாங்கள் சொல்ல முன் வரவில்லை. அப்படி அப்பழுக் கற்றதோர் ஆட்சி இங்கன்று, இந்தியா விலேயே எந்த மாநிலத்திலும் இல்லை. இருக்கவும் முடியாது. ஆட்களில் எங்ஙன் அப்பழுக் கற்றவரைப் பார்க்க முடியாதோ, அங்ஙன் ஆட்சியிலும் அப்பழுக் கற்ற ஓர் ஆட்சியைப் பார்க்க முடியாது! இங்குள்ள ஆட்கள் சேர்ந்து அமைப்பதுதானே ஆட்சி! பச்சைத்தமிழர் என்றும் கை தூய்மையானவர் என்றும் ஏழைப் பங்காளர் என்றும் பாராட்டப் பெற்ற காமராசர் ஆட்சிதான் அப்பழுக்கற்றதாக இருந்தது என்று எவரேனும் சொல்ல முடியுமா? சொல்லப் போனால் இப் பொழுதுள்ள ஆட்சியை யாகிலும் எம். சி. இரா. சொல்லுகிறார் 'கையூட்டு, ஊழல் நிறைந்த ஆட்சி' என்று. எம். சி. இரா. ஒரு நடிகர். அரசியலும் ஒரு திரைப்படம் என்று கருதியிருக்கும் வெறும் கதைத் தலைவர் அவர். ஆனால் இவர் எந்தச் சொற்களால் கலைஞர் ஆட்சியை 'ஊழல்' 'கையூட்டு நிறைந்தது' என்று கூறுகின்றாரோ, அந்தச் சொற்களே காமராசருக்காக இராசாசி கண்டுபிடித்த சொற்கள் என்பதை இப்பொழுதுள்ள இந்துவும், தினமணியும், கல்கியும், துக்ளக்கும் மறந்திருக்க வழியில்லை. பின் ஏன் அவை இக்கால் எம். சி. இராவுக்காகக் கலைஞரை எதிர்த்துத் தொண்டை வறளத் தவளை

கூச்சல் போடத் தொடங்கியிருக்கின்றன என்ருல், அங்கேதான் சாணக்கியம் வேலே செய்கின்றது. பொதுவாக செயலலிதாவையும், மஞ்சுளாவையும் பார்த்துப் பழகிய எம். சி.இராவின் சுவைஞர்களுக்கு இத்தகைய அரசியல் சாணக்கியங்கள் தெரிய வழியில்லே. உண்மை யாகச் சொல்ல வேண்டுமானுல், தி. மு. கழகம் கடந்த காலங்களில் நாட்டுக்கே வேண்டாத – மக்களுக்கே ஆகாத – தமிழின வளர்ச் சிக்கே கெடுதி என்று சொல்லும் வகையில் ஏதாகிலும் குற்றங்கள் செய்திருக்கின்றது என்ருல், அக்குற்றங்களில் எல்லாம் இந்த எம். சி. இராவையும் அவரின் சுவைஞர்களேயும் வளரவிட்ட குற்றந்தான் தலேயாயது என்று தென்மொழி அன்றே கூறியது; என்றும் கூறிக் கொண்டும் இருக்கும். உண்மையான அமைச்சரவை நாடகத்திரை களுக்குப் பின்ஞல் நடக்கக் கூடாது. அதற்கு அந்த நாடகக் கதை நாயகனேயே முன்னிறுத்தி மக்கட்கு அறிமுகப்படுத்தியிருக்கக்கூடாது. அறிஞர் அண்ணு செய்த அந்தப்பிழை சேக்சுபியர் காலத்தது. தமிழக வரலாற்றில் அதற்கென ஒரு காலத்தை மட்டுமன்று; ஓரிடத்தையும் காட்ட முடியாது. புலவன் அரசஞக இருந்திருக்கிருன். அரசன் புலவ ஞக மலர்ந்திருக்கிருன். ஏன், ஓர் ஆண்டி கூட அரசன் ஆகலாம். அதற் கெல்லாம் தமிழக அரியணே இடந்தந்திருக்கின்றது. ஆனுல் ஒரு பாணனே, விறலியோ, அரசன்முன் வேத்தியல் நாடகங்களே நடித்துத் தான் காட்டினரேயொழிய வேந்தனேயே நகர்த்திவிட்டு அரியணேயேற முயன்ற கதையில்லே. அஃதில்லே என்னும் குறையிருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இப்பொழுது எம். சி. இரா. முயற்சி செய்கிருரா என்பதை, அவரை வளர விட்ட கலேஞரும் அவரைச் சார்ந்தவர்களுந் தாம் விடை கூற வேண்டும்.

இறுதியாக ஒன்று, எம்.சி.இரா. எழுப்பிய குற்றச் சாட்டுகள், சிக்கல்கள் இவற்றுக்கெல்லாம் நேருக்குநேர், சொல்லுக்குச் சொல் விடைகூறத் தென்மொழியால் முடியும். ஆனுல் அக்குற்றச் சாட்டுகள் இதுவரை பொதுவகையாகவே சாற்றப் பெற்று வருகின்றன. சிறப்பு வகையாக இன்னும் குற்றச்சாட்டு வெளியிடப்பெறவில்லே. அவை வெளியிடப்பெற்ற பின் அவை என்னென்ன உள்நோக்கங் களுடன் கற்பிக்கப்பெற்றன என்பது பற்றி யெல்லாம் தென்மொழி பிறகு எழுதும். இக்கால் நாம் கூற விரும்புவது இது. தமிழக அமைச் சரவை தமிழர்களுக்கு இன்னும் முழு நலம் செய்யாமலிருக்கலாம். அதன் அமைச்சர்கள் இன்னும் தமிழர் நலத்திலும் தமிழ் நலத்திலும் கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கலாம். ஆனுல் அவ் வத் தனேப்பெயர்களும் தமிழர்கள்.ஆரியக்கலப்பற்ற உண்மைத்தமிழர்கள். மோகன்குமாரமங்கலத்தை ஆரியக் கலப்புடையவர் என்று கூறிய

தால் பார்ப்பனர்கள் எத்துணைக் கொதிப்படைந்தனர்! துக்ளக் எந்த அளவு விடைத்துக் காட்டியது. அவர்கள் அவ்வாறு கொதிப்படைந்ததே குமாரமங்கலம் ஆரியக் கலப்புடையவர்தாம் என்பதை மெய்ப்பிக்கப்போதுமான சான்றாக அமைந்ததை அவர்கள் உணர்ந்திருக்க முடியாது. ஆனால் இப்பொழுது அவர்களும், அவர்களின் மூலவரான இராசாசியும் கலைஞரின் மேலும் அவர் ஆட்சியின் மேலும்அடைந்துள்ள கொதிப்பை அளவிட்டு விண்டுரைக்க முடியாது. ஆனால் இதுவே இக் கலைஞரின் ஆட்சி தூய தமிழர்களின் ஆரியக் கலப்பற்ற ஆட்சி என்பதையும், இது தமிழர்களின் நலத்துக்காகவே அமைந்த ஆட்சி என்பதையும், விளங்கிக் கொள்ளப் போதுமான சான்றாகும். எனவே உண்மையான தமிழர்கள் என்று தங்களை மார்தட்டிக் கூறிக் கொள்ளும் அனைவரும், எம்: சி,இராவின் ஒதுக்கல் நிலைக்கு ஒப்பாரி வைக்காமல், மெய்யாகவே தமிழர்களுக்கு நலம் செய்ய அடிப் படைகளை வகுத்துக் கொண்டிருக்கும் கலைஞரின் வலிவான ஆட்சிக்குத் துணைநிற்க வேண்டும் எனக்கேட்டுக்கொள்கின்றோம்.இப்பொழுதுள்ள நிலையில் தமிழகத்தில் கலைஞர் அருட்செல்வனார் ஆட்சியைவிட வேறு எந்தத் தமிழராலும் இத்தகைய பெரும்பான்மையுடன் தமிழர்க்கு முழு நலந்தரும் அமைச்சரவையை - இப்பொழுதுள்ள சட்ட அமைப்புப்படி- அமைத்து விட முடியாது என்பதை உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். ஆகவே, தமிழ் வாழ வேண்டின், தமிழர் தன்னுரிமை பெற வேண்டின், தமிழகம் விடுதலைப் பாதையை நோக்கி இன்னும் முடுக்கமாக நடையிட வேண்டின், கலைஞரின் கைகளை மேலும் வலுப்படுத்துக.

—பெருஞ்சித்திரனார்

தஞ்சையில் உ. த. க. மாநாடு

(31—12—72) சுள, சிலை; உம்ஙெ தஞ்சை இராமநாதன் மன்றத்தில் உ.த.க. சார்பில் தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கு மாநாடு நடைபெறும்.கா.அப்பாத்துரையார், பாவாணர் முதலியோர் குமரிநாடே தமிழன் பிறந்தகம் எனத் தக்க சான்று காட்டி நிறுவுவர்: பேரா. நீலகண்டம் [சாத்திரி] பர் [S K.] சட்டர்சி, தெ. பொ. மீ. முதலியோர் அதை மறுத்தல் வேண்டும். தவத்திருக் குன்றக்குடி அடிகள், அழகரடிகள், காஞ்சி ஞானப்பிரகாச அடிகள், பர் வ.சுப. மாணிக்கம், பேரா. ஔவை சு. துரைசாமியார், புதுப்புனைவர் கோ. து. நா. (G.D.N.), பெரும்புலவர் நீ. கந்தசாமியார் முதலியோரைக் கொண்ட எழுவர் குழு அறுதியும் இறுதியும் உறுதியுமான தீர்ப்புக் கூறும்.

அத்தீர்ப்பே இனி உலகுள்ள வரையும் நிலைத்து நிற்கும்.

மாநாட்டுச் செயலாளர் புலவர் அடல்எழிலனார்; வரவேற்புக்குழுத் தலைவர் புலவர் சரவணத் தமிழன்.

அழைப்பிதழும் நிகழ்ச்சி நிரலும் இருகிழமைக்கு முன்வரும்.

இக்கால அரசியல் சூழல் பற்றி

முதல்வரிடம் சில கேள்விகள்

கடந்த 20-11-72 அன்று காலை, தமிழக முதலமைச்சர், கலைஞர், திருமிகு. அருட்செல்வனார் (கருணாநிதியார்) அவர்களைத் தமிழக அரசுச் செயலகத்தில் ஆசிரியரவர்கள் கண்டு, இக்காலத் தமிழக அரசியலில் ஏற்பட்ட குழப்பங்களையும் ஆரவாரங்களையும் பற்றி உரையாடியதுடன், அவருக்குத் தென்மொழியின் சார்பில் வாழ்த்துக் கூறி, இக்கால் உள்ள பரபரப்பான சூழலிலும் பல எதிர்ப்புகளுக் கிடையேயும் அவர் துணிவாகவும், சோர்வுறுமலும் ஆட்சி நடத்தி வருவதைப் பாராட்டி, அவ்வாறு மேலும் துணிந்து நின்று உள நெகிழ்ச்சியின்றி ஊக்கத்துடன் தமிழர்களுக்காகவும் தமிழுக்காகவும் நாட்டுக்காகவும் போராடுமாறு, ஊக்கவுரைகள் புகன்று, அந்நிலைக்குத் தென்மொழியும் அதனைச்சார்ந்த பல்லாயிரக்கணக்கான தனித்தமிழன்பர்களும் துணையாக நிற்பார்கள் எனும் நம்பிக்கையை அளித்தார்கள். அக்கால், ஆசிரியர் எழுப்பிய இருபத்திரண்டு வினாக்களும் அவற்றிற்கு முதலமைச்சர் அளித்த விடைகளும் கீழே தரப்பெறுகின்றன. அன்று, முதலமைச்சர் அவர்கள் ஆசிரியரையும் அவருடன் சென்ற அன்பர்களையும் முக மலர்ச்சியுடன் வரவேற்று, அன்புடன் கலந்து பேசியமைக்கும் பெருமைக்குரிய முறையில் விடை தந்தனுப்பியமைக்கும் தென்மொழியின் சார்பில் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

முதலமைச்சரிடம் கேட்ட வினாக்களும் கிடைத்த விடைகளும்:

1. இப்பொழுதுள்ள அரசியல் ஆட்சி நிலையை இப்படிச் சொல்லலாமா ? அதாவது, வெளியேயுள்ள அரசியல் சிக்கல்கள் கழகத்தைத் தாக்கின எனலாமா ? அல்லது கழகத்திற்கு உள்ளேயுள்ள கட்சிச் சிக்கல்கள் அரசியலைத் தாக்கின எனலாமா ?

0 *தன் முனைப்பினால் உந்தப்பட்ட தனி மாந்தர்கள் சிலர் தங்கள் உள்ளங்களில் வளர்த்துக் கொண்ட பேராசைகளினால் ஏற்பட்ட சிக்கல்கள் என்று சொல்லலாம்.*

2. உங்களை ஒரு முழுத் தன்னதிகாரி (அதாவது ஒரு சர்வாதிகாரி) என்று கூறுகின்றார்களே, அதைப்பற்றி என்ன சொல்லு கின்றீர்கள் ?

0 *பார்க்கும் பொருளில் இல்லை; பார்ப்பவர் கண்களில் இருக்கிறது.*

3. எம். சி. இராமச்சந்திரனுக்கும் உங்களுக்கும் உள்ள மனத் தாங்கல்களை கட்சியை இவ்வளவு அளவில் தாக்கி அரசியல் அமைதி யையும் கெடுத்திருப்பதாக மக்களில் சிலர் கருதுகின்றார்களே, இதைப்பற்றி உங்கள் கருத்தென்ன ?

0 *பலர் கருத்து அப்படியில்லை. அமைதியின்மை சிலர் மனங்களில் மட்டுமே நிலவுகிறது.*

4. அரசியல் நிலையில் இராசாசியை நீங்கள் எந்த அளவில் மதிக் கின்றீர்கள் ? அவருடைய கருத்துகள் உங்களுடைய கட்சி நலனுக்கோ ஆட்சி நலனுக்கோ பயன்பட்டிருப்பதாக நீங்கள் சொல்ல முடியுமா ? அவ்வாறெனில் அஃது எந்த அளவில் என்பதை விளக்க முடியுமா ?

5. அதேபோல் அரசியல் நிலையில் பெரியாரை நீங்கள் எந்த அளவில் மதிக்கின்றீர்கள் ? அவருடைய கருத்துகள் உங்களுடைய கட்சி நலனுக்கோ ஆட்சி நலனுக்கோ பயன்-பட்டிருப்பதாக நீங்கள் சொல்லமுடியுமா ? அவ்வாறெனின் அஃது எந்த அளவில் என்பதை விளக்க முடியுமா ?

0 *(4, 5). அகவை (வயது,) பட்டறிவு (அனுபவம்,) அறிவு- இம்மூன்றையும் நாங்கள் என்றும் மதித்திடத் தவறியதில்லை. உகந்த உயரிய கருத்துகளை, ஆட்சி நலனுக்கும் கட்சிநலனுக்கும் பயன்படுத்தியே வந்திருக்கிறோம்.*

6. எம். சி. இரா, மேல் இப்பொழுது நீங்கள் எடுத்துள்ள நடவடிக் கைகளை அறிஞர் அண்ணா அவர்கள் இருந்திருந்தால் இந்தச் சூழலில் எடுத்திருப்பாரா ? அதை உறுதிப்படுத்த அவ் வகையில் ஏதாகிலும் சான்று காட்டமுடியுமா ?

0 *தனி மாந்தரா அல்லது அமைப்பா என்றால் அமைப்பே என்ற உயரிய நெறியை எங்களுக்குக் கற்பித்தவரே அண்ணாதாமே!*

அண்ணுவின் இணைபிரியா நண்பர் சேலம் சித்தையன் அவர்கள் மீதே அண்ணு நடவடிக்கை எடுத்தார் என்பதை நாடறியுமே.

7. இப்பொழுதுள்ள அமைச்சர்கள் ஏராளமான கையூட்டுகள் வாங்கிப் பல வகையிலும் சொத்துகளைச் சேர்த்துக் கொண்டார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்படப் பரவலாகக் கருத்து கூறப்படுகின்றதே, அதை எப்படி மறுப்பீர்கள் ?

0 " காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ ?
கறைச்சேற்ருல் தாமரையின் வாசம்போமோ ? "

8. திரைப்படத் துறையில் உங்கள் குடும்பத்திற்கும், எம்.சி. இராவுக்கும் உள்முகமாக ஏற்பட்ட போட்டி, பொருமைகளே இப்பொழுதுள்ள அரசியல் குழப்பங்களுக்குக் கரணியம் என்று சிலர் கருதுகின்ருர்களே அஃது உண்மையா ?

0 முடிவை எடுத்துக் கொண்டு அதற்கு ஏற்ப நெறி (நியாயங்)களைக் கற்பித்திட அலைந்து திரிவோரைப்பற்றி நான் என்ன சொல்லமுடியும் ?

9. மக்களுக்கு உங்கள் கட்சி, குறிப்பாகக் கட்சியின் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதாலேயே அவர்கள் உங்கள் மேல் கொண்டுள்ள வெறுப்பை எம்.சி. இராவுக்குத் துணையாகப் பயன்படுத்துகின்ருர்கள் என்று ஒரு கருத்து நிலவுகின்றது. இது சரியா ? சரியில்லையெனில் மக்களுக்கு நீங்கள் சொல்லும் அமைவு என்னவாக இருக்கும் ?

0 தமிழுக்கும், தமிழகத்திற்கும், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காகவும் நாங்கள் என்னென்ன வெல்லாம் செய்து வருகிருேம் என்பதனை அவர்கள் சரியாகவே உணர்ந்து (புரிந்து) வைத்திருக்கிருர்கள்.

10. இப்பொழுது எழுந்துள்ள தமிழக அரசியல் குழப்பங்கட்குத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களும் ஒரு கரணியமாக இருக்கின்ருர் எனும் கூற்றை நீங்கள் எந்த வகையில் மறுக்கக்கூடும் ?

0 " தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார் "

11. நீங்கள் கோரிவரும் மாநிலத் தன்னாட்சி என்பதை அரசியல், பொருளியல், குமுகாயவியல் முறையாக (ரீதியாக) விளக்கிக் காட்ட முடியுமா?

1) உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்.
2) வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்.
3) மேலீடு (ஆதிக்கம்) அற்ற குமுகாயம் (சமுதாயம்) அமைத்தே தீருவோம். — என்ற முழக்கங்களே தெளிவாக விளக்கும்.

12. தமிழகம் தனியாகப் பிரிவதுதான் இப்பொழுதுள்ள அரசியல் குழப்பங்கட்கும், இனி எதிர்காலத்தில் ஏற்படப்போகும் பல சிக்கல்களுக்கும் ஒரு சரியான தீர்வாக இருக்கமுடியும் என்னும் கருத்தை நீங்கள் ஒப்புக் கொள்கின்றீர்களா? ஒப்புக்கொள்ள வில்லையானால் அதை மறுத்துச் சொல்வதற்கான அடிப்படைகளை விளக்க முடியுமா?

0 கூட்டாட்சி அமைப்பில் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொண்டிட முடியும் என்று நம்புபவர்கள் நாங்கள்.

13. நீங்களும் பெரியாரும் காமராசரும் தமிழக அரசியல் அடிப்படையில் ஒன்றிணைந்து பாடுபட்டால் தமிழகம் பலவகையில் முன்னேறும் என்று நாங்கள் கருதுகின்றோம். இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

0 ஒன்றிணைந்து செயல்படுவதென்பது ஒரு வழிப் பாதையன்று.

14. கடந்த காலங்களில் தமிழக அரசின் பல முனைப்பான திட்டங்கள் இந்திய உயர்நெறி மன்றங்களினால் முறியடிக்கப் பட்டிருக்கின்றனவே, குறிப்பாக அவற்றைப் பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

0 குறிப்பிட்டுச் சொன்னால் கருத்துச் சொல்ல ஏதுவாக இருக்கும்.

15. அறிஞர் அண்ணா அவர்களின் மதுவிலக்குக் கொள்கையைத் தாங்கள் கடைப்பிடிக்காததும் ஒரு சில வழியில் அவர்கொடுத்த அரசியல் எச்சரிக்கைகளை - குறிப்பாக, சிலரை அமைச்சரவையில் பொறுப்பேற்க விடாதிருந்தமை போன்றவை- புறக்கணித்தமையுந்தாம் இப்பொழுதுள்ள அரசியல் குழப்பங்களை வருவித்துவிட்டன என்று சொல்லலாமா?

0 இப்பொழுது அரசியலில் குழப்பம் செய்வோர் அண்ணுவின் மதுவிலக்குக் கொள்கையில் முடுக்கமான[தீவிர]ஈடுபாடு கொண்டவர்கள்; அவரின் அரசியல் எச்சரிக்கைகளை வழி காட்டும் ஒளிவிளக்குகளாகக் கொண்டவர்கள் என்பது தங்கள் முடிவா ?

16. இப்பொழுதைய அமைச்சர்களில் ஒரு சிலர் தவிரப் பெரும் பாலோர் உங்கள் கட்சியை விட்டு மாறலாம் என்னும் கருத்து நிலவுகின்றது. இதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

0 இது சிலரது ஆசைக் கனவு.

17. தமிழக அரசைக் குடியரசுத் தலைவர் ஆட்சியின்கீழ்க் கொண்டு வரும்படியான ஒரு சூழல் உருவானுல் நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள் ?

0 இந்தியாவில் மக்களாட்சி [சனநாயகம்] செத்துவிடும் என்பது தங்களது எதிர்பார்ப்பா ?

18. இப்பொழுதைய நிலையில் நீங்களும் உங்களைச் சார்ந்த ஒரிரு அமைச்சர்களும் பதவி விலகி விட்டால் தி. மு. க. அமைச்சரவையே தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் எனும் ஒரு நடுநிலைக் கருத்து இருப்பதாகத் தெரிகின்றது. இதுபற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள் ?

0 "அவனிடத்திலிருக்கும் வாளையும், கேடயத்தையும் அகற்றினுலும் கருவியேந்தியவர்களை [ஆயுதபாணிகளை] அவன் களத்தில் சந்திப்பான்" - இந்தப் பாராட்டுரையில் நெளியும் நச்சு தங்கள் கண்களுக்குத் தெரிகிறதா ?

19. மறைந்த பேரறிஞர் அண்ணுவின் குடும்பத்திலிருந்து உங்கள் கழகத்திற்கு மாறுன சூழல்கள் உருவாகியிருக்கின்றனவே, அதற்குக் காரணம் சொல்ல முடியுமா ?

0 உண்மை நிலைகள் தங்கள் கருத்துக்கு மாறுபட்டல்லவா இருக்கின்றன.

20. இப்பொழுதுள்ள அரசியல் சூழலை ஒட்டு மொத்தமாகக் கணிக்கும் பொழுது இன உணர்ச்சிகளின் அடிப்படை எழுச்சிகள் வளர்ந்து வருகின்றன என்று நாங்கள் கருதுகின்றோம் ; உங்கள் கருத்து என்ன ?

0 "தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவற்கொரு குணமுண்டு; அமிழ்தம் அவனது மொழியாகும்; அன்பே அவனது வழியாகும்."

21. மொழிப்பேரறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களையும் அவர் தொண்டுகளையும் தமிழக அரசு பயன்படுத்திக் கொள்ளாமைக்குத் தனிப்பட்ட நிலையில் ஏதாவது கரணியங்கள் இருக்கின்றனவா? இல்லையென்றால் அப்பேரறிஞரின் அறிவைப் பயன்படுத்திக் கொள்வது பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

0 கனிந்த தமிழ்ப் புலமையினைத் தமிழக அரசு புறக்கணித்தது கிடையாது. அதனால் தான் பாவாணர் உலகத் தமிழ் மாநாட்டில் பாராட்ட [கௌரவிக்க]ப் பட்டார்.

22. கடந்த 12 ஆண்டுகளாகக் கடலூரிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'தென்மொழி' எனும் தனித்தமிழ் இதழ் பற்றி உங்கள் கருத்தென்ன? அவ் விதழின் அன்பர்களுக்கு நீங்கள் கூறுகின்ற சிறப்புச் செய்தி ஏதேனும் உண்டா?

0 அது மொழி உணர்ச்சியை மறைந்திடாது காத்திடத் துணிந்து தொடர்ந்து பாடுபடும் என எதிர்பார்க்கிறேன். "தமிழ், இன்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்".

10, 11—6—72 அன்று நடந்த திருச்சிராப்பள்ளி, தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாட்டு வரவு செலவு

	வரவு			செலவு	
1	நன்கொடை	1396—90	1	அஞ்சற் செலவு	116—75
2	மார்பொட்டி விற்பனை	37—95	2	போக்கு வரத்து	287—72
3	சில்லறை வரவு	1—89	3	உணவு வகை	148—93
			4	அச்சுவேலைகட்கு	310—43
			5	வாடகை, வரிகள்	294—75
			6	சில்லறைப்பொருட்கள்	68—41
			7	நாடக அரங்குவகை	190—00
			8	பல்வகைச் செலவு	19—75
	மொத்தம்	1436—74		மொத்தம்	1436—74

பெருஞ்சித்திரன்,
அமைப்பாளர்.

இறைக்குருவன்,
செயலாளர்.

த. அன்பழகன், தணிக்கையாளர்.

இந்தி எதிர்ப்பு மறவர்
ஈழத்தடிகட்கு நன்கொடை

[பட்டியல் : 4] (2-6-72 முதல் 27-11-72 முடிய) தொகை

60. பர். சாலை இளந்திரயன், புதுதில்லி (2-ஆம் முறை) 50-00
61. திரு. செயசீலன், திருவனந்தபுரம் 3-00
62. திரு. மு. பரமசிவம் 7-00
63. காவல்துறை ஒற்றர் ஒருவர், கடலூர் 4-00
64. 'தென்மொழி' கடலூர் 20-00
65. திரு. ப. துரையரசன், கைகாட்டிப்புதூர் 10-00
66. திரு. அ. செல்வன், கோவை 10-00
67. திரு. பெ. நா. சந்திரசேகரன், திருப்பூர் சிக்கண்ணு அரசினர் கலைக்கல்லூரி 10-00

அவர்வழி திரு. கோ. தேவராசன் 5-00

,, திரு. திருவாளன்மார் மு. சோமசுந்தரம், அ. விவேகானந்தன், ச. சாமிநாதன், முத்து, சுப்பிரமணியம், செல்வராசு, (உரு: 2-00 மேனி) 10-00

,, திருவாளன்மார் முத்து, துரைசாமி, அ. ஆதம், அ. சந்திரன், மு. ப. முத்துச்சாமி, சிவ. சிதம்பரம், இரா. செல்வராசன். அ. சிவசாமி, சி. சின்னப்பன், இ. கலிமுல்லாசெரிப், க. சாந்தகுமார், தாமசு, இரா. செல்வராசு, கு. தனபாலன், அ. திவாகரன், நாகராசன் (உரு: 1-00 மேனி) 15-00

68. திரு. கோ. நக்கீரன், சோளிங்கபுரம், வ. ஆ. மா. வ. 5-00
69. ,, இள. சந்திரசேகரன், சோளிங்கபுரம் 5-00
70. ,, த. மாசிலாமணி, சென்னப்பநாயக்கன்பாளையம் கடலூர் (வட்டம்) 5-00
71. ,, அ. அர. செல்லக்குட்டி, புச்சி ரெட்டிப்பள்ளி, திருத்தணி (வட்டம்) 5-00

திருமண அன்பளிப்பு

அவநாசித் தென்மொழி அன்பர் திரு. பொ. வில்லவன் கோதை (அருச்சுனன்) — செல்வி க. சரசுவதி அவர்களின் திருமணம் அவநாசியில் கடந்த துலை 9-ஆம் நாள் [25—10—72] சிறப்பாக நிகழ்ந்தது. திருமண நினைவாகத் 'தென்மொழி' யின் வளர்ச்சிக்கு உரு: 10-00 விடுத்துள்ளனர். அன்னாரின் தமிழ் நெஞ்சிற்கு நன்றி கூறி நீடுழி வாழ நெஞ்சுவந்து வாழ்த்துகின்றோம். —அமைச்சர்.

ஒரு வேண்டுகோள் !

தனித்தமிழன்பர்க்கு!

தனித்தமிழ்க்கு அரண் செய்யும் நோக்கத்துடன் சென்னையினின்று தமிழம் என்றோர் இதழ் வெளிவருகின்றது. தென்மொழியின் உறுப்பாசிரியாக விருந்த செம்பியன் துணைவி உலகமுதல்வி பொறுப்பேற்று வெளியிடும் இதழ் அது. செம்பியனின் அறிவியல் கட்டுரைகளும், மொழிபெயர்ப்புகளும் தென்மொழி யன்பர்களுக்குப் புதியனவல்ல. அளவிலும் தரத்திலும் தென்மொழியைப் போலவும், புதுமையிலும் அழகிலும் அதைவிடச் சிறந்தும் வெளிவந்து கொண்டிருக்கும் இவ்விதழைத் தென்மொழி யன்பர்கள் அனைவரும் தவறாது பெற்றுப் பயனடைவதுடன், பிறரை யும் அவ்வாறு வாங்கு விக்கவும் செய்யக் கேட்டுக் கொள்கின்றேன்.

—பெருஞ்சித்திரன்

தமிழம்.

தனித்தமிழ்த் திங்களிதழ்.

தனியிதழ் 50 காசு — ஆண்டுக்கட்டணம் உருபா: 6.00

பிற விளக்கங்கட்கு: ஆசிரியர், தமிழம்
17, நாகப்பமுதலித்தெரு—சென்னை-2.

---

0 சிறுவர்களே ! சிறுமியர்களே !

உங்களுக்கான முத்துப் பாடல்கள் ! 0
உங்கட்கு உணர்வூட்டுவன ! 0
உள்ளத்திற்கு ஒளியூட்டுவன ! 0

0 தமிழ்ச்சிட்டில் வெளிவந்த
பாடல்களின் தொகுப்பு நூல் !

0 அமிழ்தப் பேழை !
ஏராளமான எழிற்படங்கள் நிறைந்த நூல்.
வெளி வந்து விட்டது !
விலை: 3-50
பதிவஞ்சல் செலவு: 1-25

பள்ளிப் பறவைகள்

(முதல் தொகுப்பு)

ஆசிரியர் பெருஞ்சித்திரன்

கிடைக்குமிடங்கள்:

வள்ளுவர் பதிப்பகம்
19, இலட்சுமிநாயக்கன் தெரு,
இராசிபுரம் (அ.நி)
சேலம் மாவட்டம்.

ஆசிரியர்
தென்மொழி
கடலூர்-1

சில கலைச்சொற்கள்

—இல. க. இரத்தினவேல்.
(பூதநூல் விளக்குநர், பெரியார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி)

2. 0. Mathematics - கணக்கு, கணிதம்

கள்—களம் = கூடுமிடம்

கள்—கள—கண—கணம் = கூட்டம்,

கணவன் = கூடுகின்றவன்

கண—கணக்கு = கூடிய தொகை, மொத்த அளவு

கணக்கு என்பது முதன்முதற் கூட்டற் கணக்கை மட்டும் குறித்து, பின்பு நால்வகைக் கணக்குக்கும் பெயராயிற்று.

கணி—கணிதம் = கணிப்பு, பல்வகைக் கணக்கு

2. 1. One—ஒன்று

ஒல்—ஒன்—ஒன்று

—E One

ஒல்லுதல் = பொருந்துதல், ஒன்று சேர்தல்

ஒல்—ஓர்—ஒரு, ஓர்

ஒன்றுக்குப் 'பிரியாதது' (One-undivided) என்ற பொருளுண்மையையும் காண்க.

பெயரெச்சம்: ஒரு, ஓர்—mono

ஒண்ணு, ஒன்னு—L. Uni

2. 2. Two—(துமி)—இரண்டு

துமி—துவி—

—Sans. dva, OE. Twa E. Two.

ஒ. நோ: குமி—குவி

துமித்தல் = வெட்டுதல், இரண்டாகப் பகுத்தல்

ஒரு வெட்டில் ஆகக் கூடிய துண்டுகள் இரண்டே. 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற சொலவடையை நோக்குக.

Anatomy, Vasectomy முதலியவற்றில் உள்ள பின்னொட்டான tomy, தமிழ்த் 'துமி'யின் திரிபே.

இரண்டு என்னும் தமிழ் எண்ணுப் பெயரின் வேர்ப்பொருளும் இதுவேயாயிருத்தல் காண்க.

ஈர்—இர்—இரது—இரடு—இரண்டு

ஈர்தல் = ஒன்றையிரண்டாக அறுத்தல், பிளத்தல்

பெ. எ: இரு, ஈர்; di.

2 3.. Three—(திரி) மூன்று

நார்க்கயிறும், நாற் கயிறும் திரிப்பதற்குப் பொதுவாகச் சேர்ப்பது முப்புரியே. திரிக்கும் புரித்தொகை பற்றித் திரி என்னும் மூன்றும் எண்ணுப் பெயர் தோன்றியிருக்கலாம்.

ஒ. நோ: திரி—Thread

திரி—Sans. Tri. L. Tria, Gk. Treis, E. Three

பெ. எ: மு, மு; tri.

2. 4. Four—(சதுர்) நான்கு

சட்டம்—சடம்—சடல்—சதர்—சதிர்

—சடலம்—சதரம்—சதுரம்

சதுர், சதுரம் = நாற்கோணம், நாற்புறம், நான்கு

சதுரி (வினை) = நாற்கோணமாக்குதல்

ஒ. நோ. E. Square-built, a man of square frame

சதுர்—Sans. Sathur, Hind. Char—E. four.

பெ. எ: நால்; tetra

2. 5. Five—ஐந்து

கை—ஐ—E. five. ஒ. நோ: ஓலை—L. folium

'ஒரு கை விரல் ஐந்து' என்பதால் கை என்னும் சொல் ஐந்து என்னும் எண்ணைக் குறித்தது. இன்றும் வறட்டி விற்கும் பெண்டிர், ஒவ்வோர் ஐந்தையும் ஒவ்வொரு கை என்று சொல்லுதல் காண்க. 'கை' என்னும் சொல்லின் மெய்ந்நீக்கமே 'ஐ' என்பதும்

கை—ஐ—ஐது—ஐந்து—அஞ்சு—பஞ்சு

—Sans. Pancha

ஒ. நோ: அஞ்சவன்—பஞ்சவன் (பாண்டியன்)

Sans. Pancha—Gk. Pente—OE. fif —E.five.

பெ. எ: கை, ஐ; Penta.

2. 6. Six—(ஆறு)

ஆறு = வழி, நெறி, மதம்.

ஆறு என்னும் தமிழ் எண்ணுப்பெயர் மதவகை பற்றித் தோன்றியது. சாஸன என்ற வடசொற்கு மதம் என்னும் பொருளுண்டு. சாஸ்—ஷஸ் என்று திரிந்திருக்கலாம்.

Sans. Sash, L. Sex (Gk. hex) G. Sechs
OE. Siex, E. Six
பெ. எ: அறு, ஆறு; hexa.

2. 7. Seven (—ஏழு)

இன்னிசை யேழாதலாலும், ஏழ் என்னும் தமிழ் எண்ணுப் பெயர் எழுவும் இசைத் தொகைபற்றித் தோன்றியிருத்தலாலும் வடமொழியிலும் அதைப் பின்பற்றியிருக்கலாம்.

Sans. Sapta — Saptan; Sans. Sapta = ஒலி, ஓசை.
Sans. Saptan—L. Septum (Gk. hepto), Du. Zeren
OE. Seofon E. Seven.
பெ. எ: ஏழு, ஏழ்; hepta.

2. 8. Eight—எட்டு

எண்—எட்டு (எண்-வரையறை)
எட்டு— E. Eight.
எட்டு—(அட்டு)—Sans. Asta, Astan. G. Acht
Gk. Okto (L. octo) WS. Eahta
எட்டு— அட்டு — ஒ நோ: வெறுமை—வறுமை
அட்டு— அஷ்ட்ட — ஒ. நோ: வேட்டி—வேஷ்ட்டி
பெ. எ: எண், Octo.

2. 9. Nine (—தொண்டு)

தொள்—தொண்டு (ஒன்பது) = தொளை

மாந்தன் உடம்பில் ஒன்பது தொளையிருத்தலால், தொளைப் பெயர் அதன் தொகைப் பெயராயிற்று. ஒன்பதுக்கு முதலாவது வழங்கிய பெயர் தொண்டு என்பதே.

நொள்—நெள்—நெள்ளல் = பள்ளம், குழி
—நொள்—நொள்வு—நொவு—(நவு)—நவி
நவி—நவியம்
—நவம், நவன் என்றாகியிருக்கலாம்.
இதன்வழி, Sans. Navan, L. Noven, O E. Nigon E. Nine
பெ. எ: தொள், தொண்; Nona

2, 10. Ten (பத்து)

பல்—பது—பத்து—பஃது ; பல்=பல

ஒ. நோ: அல்—அது—அத்து—அஃது.

ஓரிடத்தின் மிகுத்த 'பல' என்னும் பொருளில் ஆன 'பல்'லை வாய்ப் பல்லாகக் கருதி மொழி பெயர்த்துக் கொண்டனர் போலும். வடவர் மலைச்சிலம்பாற்றைக் (சிலப்பு-மலை) காற்சிலம்பாருக்கியோர் (நூபுரகங்கை; நூபுரம்—காற்சிலப்பு) திறம் வியப்பிற்குரியதன்று.

Sans. dacana = பல், கடி

Sans dacam, L. decen (Gk. deka)

WS. tien, OE. ten, E. Ten.

2. 11. lakh, lac—இலக்கம்

இலக்கு—இலக்கம் = குறி, எண் குறி, எண், பேரெண்.

இலக்கம்—Sans. lakhsha (=a mark)—Hind. lakh

E. lakh, lac.

தமிழ்ச் சொற்பொருளையே வடமொழியும் குறித்தல் காண்க.

2. 12. Crore—கோடி

குடு—குடுமி—உச்சி

குடு—கொடு—கோடி = நுனி, முனை, கடைசி, எல்லை

கோடி கடைசி எண்ணுதலால் அப்பெயர் கொண்டது.

கோடி—Sans. Kodi—Hind. Kvor—E. Crore

2. 13. Locus—இலக்கு

இதன்வேர்: L. Locus

தமிழ் மூலம்: இல்—இலை—இலக்கு— L. Locus

இலக்கு (=குறித்தயிடம்)—Locus (a place)

ஒரு புள்ளியின் 'இலக்குப் பாதை'யை (Locus of a point) 'நியமப்பாதை' எனலாகாது.

2. 14. Calculus—கற்குழவு

இ. வே: L. Calculus—Calx

த. மு: கல் + குழவு

L. Calculus = a little stone

E. Calculus = Smallstone used in reckoning on abacus

கல்— Cal (Calx)
குழவு (= இளையது, சிறியது)—Culus
'மழவுங், குழவியும் இளமைப்பொருள'
எனவே, Calculus—'கற்குழவு' தானே !
Differential Calculus—பகு கற்குழவு?
Integral Calculus—தொகு கற்குழவு?

2 15. Peri, Perimeter – பரி, பரிதி
இ. வே: Gk. Peri (= round)
த. மூ: புரி – பரி—பரிதி = வட்ட வடிவு
Peri என்ற முன்னொட்டுக்கான தமிழ் வேர்ச்சொல் 'பரி'

2. 16. Polygon—பலகோணம்
இ. வே: Gk. Poly gonia
த. மூ: பல கோணம்

பல்லச்சு (Poly axis), பலகுருமம் (Polychrome) பலகாமி (Polygamy), பலமதி (Polymathy) பலபாதம் (Polypody) முதலான சொற்களின் முன்னொட்டும் (poly) தமிழிலிருந்தே மருவியுள்ளது.

2. 17. Axis—அச்சு
இ. வே: L. Axis
த. மூ: அச்சு
அச்சு—Sans. Aksha, L & E. Axis

X—axis, Y—axis, Z—axis என்பவற்றை முறையே குறுக்கச்சு, நெடுக்கச்சு, குத்தச்சு என்க.
தமிழ். அக் > L. குள் axilla, E. axle

2. 18. Par—புரை
இ. வே; L. Par
த. மூ: புரை = ஒப்பு, சமம், போன்ற
காண்க: தாமரை புரையும் காமர் சேவடி

2, 19 Homo—சம
இ. வே. Gk. homos
த. மூ: சமம்

சமம்— E. Same, L. Similus, Gk. Homos
(—Same, like, similar)

Homogenous—சமயின அன்றி ஓரின

Homos × heteros < எதிர்

2. 20. Equal—ஒக்க

இ. வே: L.Equus

த. மு. ஒல், ஒக்க, ஒத்த

2. 21. Iso—இசை

இ. வே; Gk: Isos

த. மு: இசை (ந்த) = ஒத்த,

இசைந்த கோணம் (Isogonia), இசைந்த பரிதி (Isoperimeter) போன்றவை மட்டுமல்லாது, Isochrome, Isogamy, Isogeny, Isohel, **Isopod,** Isotherm முதலிய பலவும் தமிழ் மூலத்தினின்றும் கிளைத்து, பொருள் நோக்கில் சற்றே மாற்றம் பெற்றுள்ளன. இங்ஙனமே, மீநிறையணு எனப்படும் Isotope முற்றிலும் தமிழ் மூலத்தது.

Iso (—இசை) + tope(தாவு = இடம்). எனினும் மொழிவளர்ச்சியில் ஆகுபெயராக்கப்பெற்று மீநிறையணுப்பொருள் குறிக்கப்படுகிறது.

2. 22. Total—தோடு

இ. வே. L. Totus

த. மு. தோடு

தோடு—தொகுதி

தோட்டம்—செடி, மரத் தொகுதி

ஒ. நோ. (செடிமரத்) தொகுப்பு—தோப்பு

தோடு—Total

தோடு - toto (entirety) E. totus (entire,) total

Gonia, Cone, Curve முதலியவற்றுக்கு 3.23—ஐக்காண்க.

[தொடரும்]

தமிழக விடுதலை இயக்கத்தின் கிளை உங்கள் ஊரில் உள்ளதா? இல்லெனில். உடனே எழுதுங்கள்!

நூற்சுருக்கம்

இசைத்தமிழ்ப் பயிற்சி நூல்-க

ஆசிரியர்: பண்ணாராய்ச்சிப் புலவர் இசைப் பேரரசு ப. சுந்தரேசனார்.
கிடைக்குமிடம்: பண்ணாராய்ச்சிப் புலவர் ப. சுந்தரேசனார்
92, பேட்டை நாணயக்காரத் தெரு, குடந்தை.
விலை: குறிக்கப் பெறவில்லை.

"இசையெனப் படுவது இயம்புங் காலை
ஒத்துணர் வொலியின் நீட்சிய தாகும்"
—நூலாசிரியர்

இசையெனப்படுவது துளைக் கருவியானும், நரம்புக்கருவியானும், கம்பி (தந்தி)க் கருவியானும், செவிப்புலனால் மட்டும் ஓர்ந்து கேட்டு உணர்ந்து கொள்ளத்தக்க ஒருவகைச் செவ்விய அணுத் திரளொலியின் நீட்சியாகும். இவ்விசை நம் தமிழகத்துப் பழங்கால முல்லை நிலத்து ஆயர் மக்களால் முதலில் குழல் வழி தோற்றுவிக்கப் பெற்றுப் பின்பு யாழ்வழி வளர்க்கப்பெற்றது. இவ்விசைத்தமிழ்க்கலை உலகில் விளங்கும் இசைக்கலைகட்கெல்லாம் மிகவும் முற்பட்டதாக உலக இசை ஆய்வாளர்களால் உறுதியாக நம்பப்பெறுகிறது. இதற்குக் கீழ்வரும் [ஏறத்தாழ 2000 ஆண்டு கட்கு முந்தையப்] பாடல்கள் சான்றுபகரும்.

" ஆடமைக் குயின்ற அவிர் துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாக "—அகம்: 32

" புதலிவர் ஆடமைத் தும்பி குயின்ற
அகலா-அந்துளை கோடை முகத்தலின்
நீர்க்கியங் கினநிரைப் பின்றை வார்கோல்
ஆய்க்குழற் பாணியின் ஐதுவந் திசைக்கும்—
அக : 225

இவையின்றிப் பெரும்பாணாற்றுப்படையில் இடையன் கரிய துளையிணையுடைய குழலைச் செய்வான் என்றும், அக்குழலில் நண்பகலில் மரபு மாறாது இனிய பாலைப்பண்ணை எழுப்புவான் என்றும், பின் அதில் சற்று வெறுப்படைந்து குமிழின் புழற்

கோட்டுத் தொடுத்த மாற்புரி நரம்பின் வில்யாழ் இசைப்பான் என்றும் காணக் கிடக்கும் செய்தியும் இசைத்தமிழின் தொன்மையை நன்கு விளக்கும்.

இங்ஙனம் தொன்மை வாய்ந்த தமிழிசை, மூவேந்தர் ஆட்சி வீழ்ச்சியுற்றதாலும், [ஏறத்தாழ 13-ஆம் நூற்றாண்டிற்குப் பின்] பிறமொழி பேசிய நாயக்க, மராட்டிய மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டதாலும்—போற்றப் பெறவில்லை. மேலும் தமிழிசைக் கலையை அரண்மனை [கூலி] இசைப் புலவர்கள் தமிழ் மொழியில் பாடியும் அதன் இலக்கணத்தைத் தமிழ் மொழியில் எழுதியும் வைக்கவில்லை. மாறாக, தமிழிசை இலக்கணத்தையே [தமிழ்நாட்டில் இருந்து கொண்டே]வடமொழியில் எழுதிக் காத்துவிட்டனர்! அதுவே பின்பு கருநாடக இசையாயிற்று. அரிபால தேவர் என்னும் வடமொழிப் புலவர் 14-ஆம் நூற்றாண்டில் தாம் எழுதிய 'சங்கீத சுதாகரம்' என்னும் இசைநூலில் வடநாட்டு இசையை 'இந்துத்தானி' என்றும் தென்னாட்டு இசையைக் கருநாடக இசை என்றும் குறித்திருப்பது[தென்னாட்டில் நிலவிய இசை கருநாடக இசையே அஃதாவது தமிழிசையே என்று] உன்னத்தக்கது. இச்செய்தியை இசைப் பேரறிஞர் பி. சாம்பசிவமூர்த்தி தம் "கருநாடக சங்கீதம்-முதல் பாகம்" என்னும் நூலில் குறித்துள்ளார். சங்கீத சுதாகரம் கூறியிருப்பது "அபிநவராக மஞ்சரி" என்னும் நூலில் ஏற்றுக் கொள்ளப் பெற்றுள்ளது. சங்கீத சுதாகரத்துக்குப் பிந்திய இசை நூல்கள் பலவற்றுள் இந்துத்தானி, கருநாடக இசைப்பெயர்கள் சுட்டப் பெறாமல் பொதுவாக இசை என்று எழுதியிருப்பது எண்ணத்தக்கது. இஃது இவ்வாறிருக்கத் தமிழிசை நாட்டுப்புற மக்களிடம் ஒருகாலத்தில் சிறப்புப் பெற்றும் ஒருகாலத்தில் நலிவு பெற்றும், பல்வேறு சூழ்நிலையில் இருந்தும் இல்லாதது போன்றும் இக்காலம்வரை தொழில் வல்லுநரால், தொழில் முறையில் மட்டும் இருந்து வருகிறது. அன்றியும் பழங்கால இசை முறை என்று கோயில்களில் 'திருக்கோயிலிசை முறை' என்ற பெயரில் தனித்து விளங்கி வந்திருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் அருட்டிரு விபுலானந்த அடிகளார் யாழைப்பற்றி ஆராய்ச்சி செய்து 'யாழ்நூல்' என்னும் இசைநூல் எழுதியிருக்கின்றார். அதில் பழந்தமிழிசையை மேனாட்டு [அறிவியல்] முறையில் நன்கு ஆராய்ந்து விளக்கியிருக்கின்றா. எட்டாம் பரிபாடலில் "ஏழ்புழை ஐம்புழை" என்று வருவன, ஏழு, ஐந்து துளைகளையுடைய குழற்கருவிகள் என்றும்; முதலில் ஐந்துதுளைக் குழற்கருவி தோன்றிற்றென்றும்; பின்னர் ஏழ்துளைக் குழற்கருவி

உருவாக்கப்பட்டதென்றும்; இதிலிருந்து முதலில் ஐந்திசை முறையே தோன்றிற் றென்றும்; பின்னர் அஃது ஏழிசை முறையாக விரிந்ததென்றும் கூறிச் செல்கிறார்.

ஐந்திசை முறையை நன்கு விளக்கியிருக்கிறார். தாரம், குரல், உழை, இளி, துத்தம் என்பனவே ஐந்திசைகள். இவ்விசைகள் எப்படித் தோன்றுகின்றன என்பதற்கு ஐந்து நரம்புகளையுடைய கட்டளையாழ் ஒன்றின் அமைப்பைக் கூறித் தெளிவுபடுத்துகின்றார். முதல் நரம்மை 81 பகுநூற்றுச் சீரடி-ப.நூசீ. [cm] நீளமுள்ளதாகக் கட்டித் தெறிக்கவேண்டும். அதில் எழும் ஒலியே தார இசை எனப் பெற்றதென்கிறார். தார நரம்பில் மூன்றில் இருபங்கு நீளம் [54 ப.நூ. சீ.] உடைய நரம்பைக்கட்டித் தெறித்தால் அதில் எழும் ஒலி உழை ஆகும். உழைநரம்பில் 2/3 பங்கு நீளம் [36 ப.நூ.சீ.] உடைய நரம்பிலிருந்து எழும் ஒலி குரல் எனப்பட்டது. இதேபோல் குரல் நரம்பின் 2/3 பங்கு நீளம் [24 ப. நூ. சீ.] உடைய நரம்பில் இளி இசை தோன்றுமென்றும்; இளிநரம்பின் 2/3 பங்கு நீளம் (16. ப. நூ. சீ.) உடைய நரம்பில் துத்த இசை தோன்றுமென்றும் கூறுகின்றார். இவ்விசை நரம்புகளின் நீளஅளவுப் பட்டியல் வருமாறு: [அளவு பகுநூற்றுச் சீரடியில்—in Centimetre]

தாரம்	உழை	குரல்	இளி	துத்தம்
81	54	36	24	16

அசைவு எண் என்பது ஓர் ஒலியலகு. இது நரம்பின் நீளம் இரட்டிக்கப் பாதியாகும் என்பதும், மும்மடங்காக மூன்றில் ஒரு பங்காகும் என்பதும் அறிவியல் உண்மை. மேற்கூறிய 5 இசைகளில் தாரம் உழை இரண்டும் மெலிவு நிலை யாகவும்; குரல், இளி இரண்டும் சமநிலை யாகவும்; துத்தம் வலிவுநிலை யாகவும் உள்ள அமைப்பொன்றை விபுலானந்த அடிகள் பின்வருமாறு விளக்குகின்றார். தாரம், உழை நரம்புகள் இரண்டும் அவ்வவற்றின் நீளத்தில் எழுப்பும் இசை மெலிவுநிலை என்க. குரல், இளி நரம்புகள் இரண்டும் சமநிலையில் இசை எழுப்ப அவற்றின் நீளம் [36,24] முறையே 72, 48 என்று இரட்டிக்கும். துத்தம் வலிவு நிலையில் இசை எழுப்ப அதன் நீளத்தை [16] நான்கு மடங்காக்க வேண்டும். அவ்வாறு செய்யின், அதன் நீளம் 64 ப. நூ. சீ. ஆகும். இப்போது நரம்புகளின் நீளத்திற்குத் தக்கபடி அவற்றை நிரற்படுத்தப் பின் வருமாறு ஒருநிலை அமையும்.

முதல் நிலை (சமநிலை)

நரம்பு நீளம்	81	72	64	54	48
இசைப் பெயர்	தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி

அசை வெண்ணை இரட்டிக்கச் செய்ய நரம்புகளின் நீளத்தைப் பாதியாக்கினுல், பின்வருமாறு மற்ருெருநிலை அமையும்.

இரண்டாம் நிலை (வலிவு நிலை)

இசைப்பெயர்	$40\frac{1}{2}$	36	32	27	24
	தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி

இவ்விரண்டு நிலைகளையும் (சமநிலை, வலிவுநிலை) ஒரு கருவியில் பெற நிரலாகப் பத்து நரம்புகளைக் கட்டலாம் என்பது தெரிகிறது. இவ்வாறுதான் பண்டைய வில்யாழின் அமைப்பு இருந்ததாம்.

தாரம், குரல், துத்தம், உழை, இளி ஆகிய ஐந்து இசைகளின் பெயர்கட்கும் காரணியங்கள் உள. தார நரம்பே முதலில் தோன்றியது என்பது பழந்தமிழிசை நூற்றுணிபு என்று விபுலானந்தர் கூறுகின்ருர். தார்+அம்—தாரம் ஆகும். தார் தாங்கி நிற்றல், தார்தாங்கிச் செல்வது தானை—என்னும் இடங்களில் தார் என்னும் சொல் முதற் படையான தூசிப் படையைக் குறிப்பதைப் போல் ஒருதுளைக் கருவியினை ஒருவர் எடுத்து வாய்வைத்து ஊதி எழுப்பும் (நரம்புக் கருவியில் முதலில் ஒரு நரம்பினைக் கட்டி அதனைத் தெறித்து எழுப்பும்) முதல் ஒலியினைத் தாரம் என்னும் சொல் குறிக்கிறது. தாரம் என்ற சொல்லை முதல் என்னும் பொருளில் திருஞான சம்பந்தர். "தாரம் உய்த்தது பாணர்க் கருளோடே" என்று கூறுகின்ருர். 'உழை' என்னும் சொல் பொதுவாகப் பக்கம் என்றும், சிறப்பாக இடப்பக்கம் என்றும் பொருள் தருவதாகக் கொள்ளலாம். அதனுல் இடத்தது என்னும் பொருளில் 'உழை' என்று பெயரிடப் பெற்றதாகக் கொள்ளலாம். குரல் நரம்பின் ஒலி மகளிர் குரல் போல இருத்தலால் அதற்குக் குரல் என்று பெயராயிற்று. (தார நரம்பு ஆடவர் குரலை ஒத்து இசைக்குமாம்) 'இளி' என்னும் இசைப் பெயர் காட்டல் (இளித்தல்) என்னும் பொருள்பற்றி எழுந்தது. துத்தம் (தாரம், குரல் முன்நிற்க, உழை, இளி பின்நிற்க நடுவில் இருப்பதால்) நடுவிசை என்னும் பொருள்பற்றி எழுந்தது. (துத்தம்–துருத்தி, திருத்துருத்தி, திருப்பூந் துருத்தி-காவிரியாற்றின் இடைக்குறையிலுள்ள ஊர்ப் பெயர்கள்.)

பழந்தமிழ்ச் சான்ருேர் குழல் ஒலிக்கு ஏற்ப யாழ் நரம்புகளை முடுக்கியும் தளர்த்தியும் இசை ஒப்புமையை நன்கு ஓர்ந்து உணர்ந்தனராம். அஃதாவது யாழிசைக்கு அளக்கும் கோல் குழலிசை என்பதை அறிந்திருந்ததையே "நரம்பின் தீங்குரல் நிறுக்குங் குழல் போல்" என்னும் பாலைக்கலி எடுத்துக்காட்டுகிறதாம். மேலும் அவர்கள் இசையை (ஒலிவேறுபாட்டை) அலகிடவும் அறிந்திருந்தனர். அலகு, மாத்திரை, சுருதி என்பன ஒரு பொருட் சொற்களென விபுலானந்தர் குறித்துள்ளார். முதல் ஐந்திசைகளில் அசை வெண்களை இக்கால முறைப்படி காணின் அவை,

இசை	தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
அலை	320	360	405	480	540

என்றிருக்கும். இவற்றின் இடை மேனிய (விகித)ங்களைக் கண்டால்,

தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
0	9/8	9/8	32/27	9/8

என்றாகும். தமிழிசை அறிஞர்கள் 9/8 என்பதற்கு அலகெண்கள் 4 எனவும் 32/27 என்பதற்கு அலகெண்கள் 5 எனவும் குறித்ததாக விபுலானந்த அடிகளார் குறித்துள்ளார். பழந்தமிழ் முறையை முறைப்படுத்தி எழுத

தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
0	4	4	5	4

எனவமைந்து கூட்டு முறையில்,

தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
0	4	8	13	17

என அமையும்.

பிற்கால இசை வல்லுநர்கள் அலகுகளைச் 'சுருதி' எனக்கூறி, தொடங்கும் இசையிலிருந்து ஒவ்வோர் இசைக்கும் எத்தனை எத்தனைச் சுருதிகள் என உணர்ந்தனர். அவை முறையே ஒன்று முதல் அறிந்து 22-ஆவது அலகில் முதல் நரம்பின் (81 ப. நூ. சீ) பாதி அள $(40\frac{1}{2}$ ப. நூ. சீ:)வில் முடிகின்ற ஒலிப் பெற்றிமையை நன்கு அறிந்துள்ளனர். இசைத்தமிழிலும் ஒரு நிலையில் 22 அலகுகளே ஒப்புக்கொள்ளப் பெற்றனவாம். விபுலானந்த அடிகளார் இசை யொலிகளில் வரும் நான்கலகினை முற்றிசை என்றும்; நான்கலகும் இரு கூறுகப் பிரிவுபட நேரின் ஓரலகுபெற்ற குற்றிசை யாகவும், மூவலகு பெற்ற ஒரு பற்றிசை யாகவும் பிரிவு பெறும் என்றும் காட்டியுள்ளார். இசையலகுச் சிற்றொலிகள் மேல் நோக்கி ஏற்றமான முறையில் அமைவதைப் பின்வருமாறு குறிக்கலாம்.

ஒரு தொடக்க இசை இயல்பாக அமைந்திருப்பின் தாரம். அதனை யடுத்து

1	2	3	அலகுகள் மூன்று நுண்ணொலிகள்	
	4	ஆம்	அலகின் ஒலி தனி (முற்றிசை)	குரல்
5	6	7	அலகுகள் மூன்று நுண்ணொலிகள்	

	8	ஆம்	அலகின் ஒலி தனி (முற்றிசை)	துத்தம்
	9	ஆம்	அலகும் தனி ஒலியே.	
10	11	12	அலகுகள் மூன்று நுண்ணொலிகள்	
	13	ஆம்	அலகின் ஒலி தனி (முதலிசை போன்றது)	உழை
14	15	16	அலகுகள் மூன்று நுண்ணொலிகள்	
	17	ஆம்	அலகின் ஒலி தனி (முற்றிசை)	இளி
18	19	20	அலகுகள் மூன்று நுண்ணொலிகள்	
	21	ஆம்	அலகின் ஒலி தனி.	

22ஆம் அலகென்பது தொடக்க இசைக்குரிய நரம்பின் (81 ப நூ.சீ.) பாதி ($40\frac{1}{2}$) அளவான நரம்பில் ஒலிப்பது. அதுவே மேனிலைத் தொடக்க இசையாகும். இங்கே 22-ஆம் அலகின் ஒலி மேனிலைத் தாரம் ஆகின்றது.

மேற்கூறிய அலகு முறைகளில் பண்டைய குழல்வழி, வில்வழி தோன்றிய முதலிசை **தாரம்**. அவ்விசையிலிருந்து நான்காம் அலகில் குரல், எட்டாம் அலகில் **துத்தம்**, பதின்மூன்றும் அலகில் உழை, பதினேழாம் அலகில் இளி என இசைகள் அமைந்திருந்தன. அதுவே முதல் ஐந்து இசைகளின் முதல் தொகுதி. முன்புகூறிய வில்யாழில், முதல் ஐந்திசைகள் இரு நிரலாக அமைந்து கிடந்தன. அவற்றிற்குரிய அலகுகளுடன் நிரற்படுத்த,

இசைகள்	தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
முதல் நிலை	0	4	4	5	4
இரண்டாம் நிலை	22	26	30	35	39

என நிற்கும்.

இசைகளின் தொகுதியே பண் ஆகும். முதலைந்து இசைகளை 5 வகையாக நிரற்படுத்தலாம். தாரம் தொடங்கி தாரம், குரல், துத்தம், உழை, இளி என்ற வரிசையில் இசைகளைக் கொண்ட நிரல் **தாரப்பண்ணும்**. இத்தாரப்பண் **ஆசான் திறம் காந்தாரம்** என்றும் பெயர் பெறும். "ஆசான்திறத்தி னமைவரக் கேட்டு" என்னும் சிலப்பதிகார அடிக்கு அரும்பத வுரைகாரர், "ஆசான்திறம்-காந்தாரம். ஆசான் என்று ஒரு பண்ணிற்குப் பெயராகவும் இசைத்தமிழிற் கூறுப" என்று கூறிச் செல்கிறார். தாரப்பண் இருந்ததைத் திருஞானசம்பந்தர் (கி. பி. ஏழாம்நூற்றாண்டில்)

"பாடுகின்ற பண் தாரமே பத்தரன்ன பண்டாரமே" எனத் திருவீழி மிழலைத் திருப்பதியத்தில் பாடியிருப்பதினின்று அறியலாம். இப்பண் இக்காலத்தில் **மோகனம்** என்று வழங்கு கிறது. இப்பண் அமைதியினைப் பழங்கால இக்கால விளக்கங்களுடன் பின்வருமாறு முறைப் படுத்தலாம்.

எண்	இசைகள்	கூட்டு அலகுகள்	இக்கால இசைப் பெயர்	பழங்காலப் பண் பெயர்	இக்கால 'இராக'ப் பெயர்
1	தாரம்	0	'சட்சம்' எனக்கொள்ள	முதற் பண்ணுகிய	
2	குரல்	4	சதுச்ருதி ருசபம்	தாரப் பண்ணும்	மோகனம்
3	துத்தம்	8	அந்தர காந்தாரம்	ஆசான் திறம்	
4	உழை	13	பஞ்சமம்	என்னும் காந்தாரம்	
5	இளி	17	சதுச்ருதி தைவதம்		
வலிவுத்தாரம்		22	தாரசட்சம்		

இதே போல் பின் வரும் பிற நான்கு பண்களையும் பட்டியலில் எழுதலாம். குரல் தொடங்கி அஃதாவது குரல், துத்தம், உழை இளி, தாரம் என்ற முறையில் நிரற்படுத்தப் பெறும் இசைத் தொகுதி **குரற்பண்ணும்.** இப்பண்ணின் செவ்விய நீர்மை அறிந்து இது **செந்திறம்** எனப் பெற்றது. இப்பண் இருந்ததை, "செந்திறம் புரிந்த செங்கோட்டியாழ்" எனும் சிலப்பதிகார அடியால் உணரலாம். செந்திறம் காலப் போக்கில் செந்துருத்தி ஆயிற்று. இதற்கு இக்காலப் பெயர் **மத்தியமாவதி** யாகும். மேற்கூறிய இசை நிரலுக்கு இக்காலப்பெயர்கள்: குரலுக்கு சட்சம் எனக் கொள்ள, பிறவற்றிற்கு முறையே சதுச்ருதி ருசபம், சுத்த மத்யமம், பஞ்சமம், கைசிகி நிசாதம், தாரசட்சம் (வலிவுக்குரல்) என்பவாகும்.

அடுத்து **துத்தம்** தொடங்கி அஃதாவது முறையே துத்தம், உழை, இளி, தாரம், குரல் என்று நிரற்படுத்தப் பெறும் இசைத் தொகுதி **துத்தப்பண்** என்றும் **இந்தளம்** என்றும் பெயர் பெறும்.

இப்பண்பற்றி திருஞான சம்பந்தர் "வண்டினம் துத்த நின்று பண் செய்யும் சூழ் பொழில் துருத்தி" என்று கூறியிருப்பது கருதத் தக்கது. இந்தப்பண் இக்கால இந்தோளம் எனப் பெறுகிறது. இத்தொகுதியிலுள்ள இசைகள் முறையே துத்தம் சட்சம் எனக் கொள்ளப் பிற, சாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், சுத்ததைவதம் கைசிகி நிசாதம், தாரசட்சம் (வலிவுத்துத்தம்) எனப் பெயர் பெறுகின்றன.

அடுத்து உழை தொடங்கி முறையே நிரற்படுத்தப் பெறும் ஐந்திசை அமைப்பில் எழும் பண் உழைப்பண் அல்லது சாதாளிப்பண்ணும். இந் நாள் இது சுத்த சாவேரி என வழங்குகிறது. உழை இசையை சட்சம் எனக்கொள்ள பிறமுறையே சதுச்ருதிருசபம், சுத்த மத்யமம் பஞ்சமம், சதுச்சருதிதைவதம், தாரசட்சம் (வலிவு உழை) என அழைக்கப் பெறுகின்றன. சிலப்பதிகாரக் கானல்வரிப்பாடல்களான திங்கள் மாலை, மன்னு மாலை, உழவரோதை, ஆகியன இப்பண்ணிற்கே உரியனவாம்.

இறுதியாக இளி தொடங்கிய ஐந்தாம் இசைத் தொகுதி தஞ்சி இக்கால் இது சுத்த தனியாசி, உதய ரவிச்சந்திரிகா, எனப் பெறுகிறது. இசைகள், முறையே சட்சம் (எனக்கொள்ள), சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், கைசிகி நிசாதம், தாரசட்சம் (வலிவு இளி) எனப்பெறுகின்றன. இத் தஞ்சிப் பண்ணில் வரிப்பாடல்கள் உள்ளன.

காந்தாரம், செந்துருத்தி, இந்தளம், ஆகிய பண்களில் தேவாரப் பாடல்களும். காந்தாரம் இந்தளப்பண்களில் திருவாய்மொழிப் பாடல்களும் நிரம்ப இருக்கின்றன, காந்தாரப்பண்ணில் பரிபாடல் களும் உள்ளன. இந்த ஐந்திசைப்பண்களை உணர உணர வில்யாழ்க் கருவி ஒருசில வகையில் உருவில் மாற்றம் பெற்றது; அஃதாவது பெரிதாக்கப் பெற்றது. இவ்வுணர்வு தோன்றிய காலமே இசை வளர்ச்சி பெற்ற சிறப்பான காலமாகும். O

தமிழ்மொழி, வரலாற்றுப் புரட்சி நூல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியீட்டுத் திட்டத்தில் நீங்கள் பெருமைமிகும் ஓர் உறுப்பினரா? இல்லெனில், இன்றே உறுப்பினராகுங்கள்!

விளக்கங்கட்குத் தென்மொழிக்கு எழுதுங்கள்

ஊர்வன உலகை ஆண்ட பொழுது

"When Reptiles Ruled the Earth"

க. இராமகிருட்டிணன், (முதுகலை - ஆங்கில இலக்கியம்).

ஒருகோடி ஆண்டுகளுக்கும் மேலாக விலங்குலகைத் தம் ஆட்சியின் கீழ் வைத்திருந்ததும், தமக்குப் பிறகு தம்மினத்தை உலகில் விட்டுச்செல்லாது மறைந்துபோனதுமான ஊர்வன வகைகளைப்பற்றியதுதான் இக்கட்டுரை. ஈண்டு ஊர்வன வகைகளின் இயல்பு, இரை, பகையைத் தாக்குந்திறன், பகையிடமிருந்து தப்பித்துக் கொள்ளும் முறை ஆகியவை நன்கு விளங்கப் பெறுகின்றன.

ஊர்வன இனங்களுக்கிடையே நிகழ்ந்தபோர் கொடுமையும் அதிர்ச்சியும் நிறைந்த ஒன்றாகும். ஊர்வன இனத்தைச் சார்ந்த விலங்கொன்று தாக்கும் முறையையும் தாக்குண்ட விலங்கு தப்பிக்கும் முறையையும் விளக்குவோம். தாக்கும் விலங்கு தாக்குதலுக்கு முன்னால் யாரும் அறியா வண்ணம் நிலைத்திணைகளுக்கிடையே மறைந்திருந்து தம் எதிரியை உற்று நோக்கிக் கொண்டிருக்கும். அவ்விலங்கு கற்பனைக்கெட்டாத ஒன்று. புலால் உண்ணும் இவ்விலங்கு தன் பின்னங்கால்களை நிமிர்த்தி 20 அடி உயரத்தில் காற்றிலே தவழ்வதுபோல் நிற்கும். எதிரிகளின் தசைகளைக் கிழிப்பதற்கு ஏற்றதாக அவற்றின் சிறிய முன்னங்கால்களின் உகிர்கள் கூர்மையாகவும் வன்மையாகவும் இருக்கின்றன. அதன் கடைவாய்ப் பற்கள் தசைக்கத்திகளைப் போன்று மிக நீளமாக இருக்கும். தக்கபொழுது ஏற்பட்டதும் அதிர்ச்சி தரத்தக்க ஒலியை எழுப்பிக் கொண்டு தம்முடைய எதிரியைத் (எதிரி அல்லது இரையை) தாக்க முயற்சி செய்யும். இந்நிலையில் தாக்குண்ட விலங்கு தப்பிப்பதே சிறந்த வழி என்பது புலனாகிறதல்லவா? தாக்குதலுக்கு அஞ்சி ஓடவேண்டிய நிலையிலுள்ள விலங்கு மிகஎளிதில் நகர முடியாத 90 சிறுகால்களையுடைய பல்லி (Lizard) இனத்தைக் சார்ந்ததாகும். இப்பல்லி இனத்தைச் சார்ந்தவிலங்கு பெரும்பாலும் நீர்நிலைகளின் ஓரத்தே காணப்படும் புற்களையும் சதுப்புநிலப் புற்களையும் உணவாகக்கொள்ளும். இப்புல்வெளிகள் ஆழம் மிகுதி

இல்லாத உள்நாட்டுக் கடலின்கண் காணப்படுகின்றன. தாக்குண்ட இவ்விலங்கு தாக்குகின்ற விலங்கைக்காட்டிலும் எடை மிகுந்த தாயினும் அச்சத்தால் நீரின் ஆழமான பகுதிக்குச் சென்று மறைந்து கொள்ளும். தற்காப்பிற்கு நீரினுள் செல்லும் பொழுது தம்முடைய கால்அடிச்சுவடுகளை விட்டுச் செல்வதால் எதிரி எளிதில் அறிந்து கொண்டு இரையைப் பின்பற்ற ஏதுவாக இருக்கின்றது. மேலும் தாக்கும் விலங்கு விரைவாகச் செல்லும் தன்மை படைத்ததாய் உள்ளது.

இங்ஙனம் ஊர்வன இனங்களுக்கிடையே ஏற்பட்ட போரின் விளைவுகளை நாம் உறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும் ஓரளவு அறியமுடியும். இப்பல்லிகளுக்கிடையே நிகழ்ந்தபோர் ஒருகோடி ஆண்டுகளுக்குமுன் நடந்திருக்கலாம். டெக்சாசு (Texas) நாட்டுப் பேராறு ஒன்றின் கரையில் காணப்படுகின்ற பழம்பெரும் இடுகாட்டுப்பாறைப் படிமானத்தின் (இடுகாடு பின்பு காலப்போக்கில் பாறைகளாக மாறின.) வாயிலாக இந்நிகழ்ச்சிகளை நாம் ஓரளவு உண்மை என்று கொள்ளலாம். அப்பாறைப் படிமானங்களிலிருந்து மேலும் விலங்கு மேய்ந்த இடங்கள், அவ்விலங்கைத் துரத்திய புலால் உண்ணும் விலங்கின் உகிர்க்குறிகள் அனைத்தும் தெரிய வருகின்றன.

பாறைப்படிமானங்களில் காணப்படுகின்ற எலும்புத்துகள் களின் துணைக்கொண்டு வல்லுநர்கள் பல இலக்கக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இறந்துபட்ட விலங்குகளின் அடை யாளங்களைக் காண்கின்றனர். எலும்புகளின் மீது காணப் படுகின்ற பற்குறிகள் விலங்கினிடையே நிகழ்ந்த போரினை விளக்குகின்றன. கடைவாய்ப் பற்கள் என்ன உணவு உட்கொண்டு உயிர்வாழ்ந்தன என்பதை விளக்குகின்றன. எலும்புகளின் அழிவு அவற்றிற்கு உண்டான நோயைத் தெரிவிக்கின்றது. உலகத் தொடக்கக்காலத்து இன்னின்ன விலங்குகள் இருந்திருக்கக்கூடும் என்ற செய்திகளை வல்லுநர்கள் ஆராய்ச்சியின் துணைக்கொண்டு ஆண்டுதோறும் அறிகிறோம்.

மாபெரும் ஊர்வன இனங்கள் ஏறத்தாழ 225 இலக்கம் ஆண்டு களுக்கு முன் தோன்றி 155 இலக்கம் ஆண்டுகள் நிலைபெற்றிருக்கக் கூடும். நூற்றுக்கணக்கான வகைகளை நாம் பல்லி இனத்தில் காண

லாம், மிகஎளிதில் நகரமுடியாதது, மூளையற்றது, தன் முடிவிற்குத் தானே வழிகோலிக் கொள்வது என்றெல்லாம் பல்லியைப்பற்றி எண்ணுகிறோம். இருந்தபோதிலும் இப்பேரச்சப் பல்லிகள் உலகை ஏறத்தாழ ஒருகோடி ஆண்டுகள் ஆண்டுவந்தன. ஆனால் மாந்த இனத்தின் அகவையோ அதனில் நூற்றில் ஒரு பாகத்திற்கும் குறைந்ததே!

பல்லி இனத்தில் பலவகை உண்டு என்று முதலிலேயே குறிப்பிட்டேன். பேரச்சப்பல்லிகள் மற்ற பல்லிகளினின்றும் மிகவும் வேறுபட்டவை. பேரச்சப்பல்லிகள் (terrible Lizard) பலவகை உருவ அமைப்புகளைக் கொண்டு திகழ்கின்றன. சிலவகைப்பட்ட பேரச்சப்பல்லிகள் கோழிக்குஞ்சைக் காட்டிலும் சிறிய உருவம் உடையனவாக உள்ளன. சில 85 கல்லெடை (Ton) நிறையுள்ளன. சில தீக்கோழி அளவிருக்கும். சில காண்டா விலங்கின் அளவை ஒத்தன. கங்காரு, ஆமை போன்ற அமைப்பை ஒத்த பல்லிகளும் உள. நகரமுடியாமலும் காலந் தாழ்த்திச்செல்லும் தன்மையுடையவுமான பல்லிகளும் உள. சில பல்லிகள் சுறுசுறுப்பாக இயங்கிக் காற்றில் துள்ளிப் பறவைகளைப் பிடிக்கும் தன்மை கொண்டனவாய் அமைந்திருந்தன.

ஊர்வன இனவகைகளில் புலால் உண்ணாத சில விலங்குகளும் உள. ஆனால் பார்ப்பதற்குத் தோற்றத்தில் புலாலுண்ணும் (எறும்பு தின்னும்) விலங்குகளை ஒத்திருக்கும். ஈண்டு ஒரு பயிருண்ணி (சாகபட்சிணி) பற்றி ஆராய்வோம். காவல் இல்லாத பரந்த மேட்டுப் பாகத்தில் இவ்வகையைச் சார்ந்த விலங்குகள் வாழ்வதனால் தம்முடைய எதிரிகளிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியவாயுள்ளன. பகைவரிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளக் கவசம் போன்ற அமைப்பைக் கொண்டுள்ளன. முதுகெலும்பின் இருபக்கத்திலும் தகடுபோன்ற நீண்ட அமைப்பைப் பெற்றுள்ளன. மேலும் குறுகிய ஆனால் வலிமையுள்ள நான்கு கத்திகள் போன்ற அமைப்பைக் கொண்ட வாலையும் பெற்றிருக்கின்றன. இவ்விலங்கு உறுதி வாய்ந்த தன்வாலை ஆட்டுவதன் மூலம் தன் எதிரிக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தும்.

இடிபல்லி (Thunder Lizard) என்று அழைக்கப்படும் ஊர்வன இனத்திற்கு நான்கு கால்களும் நீண்ட கழுத்தும் பெரிய

வாலும் பார்ப்பதற்குப் பேரச்சப்பல்லி (terrible Lizard)யைப் போல் தோற்றமும் இருக்கும். பயிருணவு உண்ணும் தன்மையுடைய இவ் விலங்கு 30 அடி உயரமுள்ள மரங்களிலிருந்து இலைகளைப் பறித்துண்ணும். அதன் சிறிய தலையும் ஒன்றோடொன் றிணைந்த நான்கு பற்களும் எதிரிகளைத் தாக்கப் பயன்படாதன. திறன்வாய்ந்த தன்வாலை ஆட்டியே பகைவரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்கின்றது. காப்பிற்குப் பெரும்பகுதிக் காலத்தை நீரினுள்ளே கழிக்கும். அவ்வண்ணம் நீரினுள் இருப்பது தன்னை எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்வதோடு மட்டுமில்லாமல் தன் உடலையும் நல்ல நிலையில் வைத்திருக்க ஏதுவாகவும் உள்ளது. தம்மைக் காப்பாற்றிக்கொள்ள உடல் முழுவதையும் நீரினுள் செலுத்தித் தம் தலையின் மேலுள்ள மூக்குத்துளை வழியே காற்றை உட்கொள்ளும் இத்தகு விலங்குகள் வாழ்ந்ததற்கு அடையாளமாக அமெரிக்க நாட்டில் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பெரும்பல்லியின் மூளையின் எடை உடலின் எடையில் பத்தில் ஒருபங்கு எனலாம். இந்த இடிபல்லியின் முதுகெலும்பின் பக்கம் வலிமை வாய்ந்த தசை காணப்படுகின்றது. (முதுகெலும்பு அதன் இடுப்பருகே காணப்படுகின்றது). முதுகெலும்பின்பக்கம் காணப்படும் இத்தடித்த தசை இரண்டாவது மூளையாகப் பயன் படுகிறது. தமக்கு இடுக்கண் வந்த காலத்து இத்தசைகள் தம் இயக்கமாகவே தம் வாலுக்கும் பின்னங்கால்களுக்கும் கட்டளை பிறப்பிக்கின்றன. அதனால் கட்டளை கிடைத்தவுடன் அது தன் வாலைத் தாக்குவதற்கு ஏதுவாக அணியம் செய்து கொள்கிறது.

'கொடுக்கும்பல்லி' (Jyrant Lizard) என்பது அதன் பெயருக்கு ஏற்றாற்போல் உலகத்திலேயே கொடிய விலங்கென்று கொள்ளலாம். எளிதாக அது நிற்கும் பொழுது 19 அல்லது 20 அடி உயரமிருக்கும். ஆனால் அது தன்னைத்தானே நீட்டிக்கொள்ளும் தன்மையுடையது. அங்ஙனம் நீளும்போது, அதன் மீட்சி எல்லை தலைமுதல் கால்வரை 47 அடி. 10 கல்லெடை (Ton) எடையுடையது. நான்கு அடி கடைவாயையுடையது. பற்களின் நீளமோ ஆறுவிரற்கடை. இவை உயிர்வாழ்வதற்கு மற்ற விலங்குகளைத் தாக்க வேண்டியிருக்கிறது.

பெரும் ஊர்வன நிறைந்த காலத்தில் உலகம் எந்நிலையில் இருந்தது? பெரும்பாலான நிலத்தின் பகுதி பாறைகளாலும் கற்களாலும் சூழப்பட்டு அமைப்பு அற்ற முறையில் காணப்பட்டது. பனிமலையும் ஆல்ப்சு மலையும் இப்பொழுது காணப்படுகின்ற உயர்ந்த நிலையில் அப்பொழுது இல்லை. விரிந்த பெரும் உள்நாட்டுக் கடல் இன்றிருக்கும் நிலப்பரப்பை மூடுவதும் விடுவதுமாக இருந்தது.

மலைகள் நிறைந்த அளவு இல்லாததால் அக்காலத்து இயற்கைப் பருவநிலை உலகமுழுவதும் ஒரே நிலையிலிருந்தது. தென்முனை (துருவம்) வடமுனைப் பகுதிகளில் மட்டும் சற்றுப் பருவநிலை மாறியிருந்தது. முனைகளின் தொலைவு இக்காலத்தைவிட அக்காலத்தில் குறைவு. அக்காலத்தில் மழைக்காலத்தில் சற்றுக் குளிராகவும் கோடைக்காலத்தில் சற்று வெப்பமாகவும் இருக்கும். இக்காலத்தில் நாம் காணும் கால மாற்றங்களை அக்காலத்தில் காண முடியாது.

பல்லி வகை விலங்குகளைத் தவிர மற்ற வியப்பான விலங்குகளும் அக்காலத்தில் இருந்தன. ஐம்பதடி நீளமுள்ள பாம்பு, ஆறடிக் கடைவாயுள்ள முதலை முதலியனவும் இருந்தன. 20 அடி நீளமுள்ள, இறக்கையுள்ள, காற்றில் பறக்கும் ஊர்வன இனங்களும் உள. இப்பறக்கும் ஊர்வன வகையைச்சார்ந்த விலங்கின் கால்கள் மிகவும் சிறியன; வலிமை அற்றன. பறக்கத் தொடங்கும்போது சற்றுத் துன்புறும் நிலையில் உள்ளன. பொதுவாக இவை மலைப்புச்சியில் வாழ்கின்றன. பறக்கும்போது எளிதில் பறக்க மலை நல்ல வாய்ப்பாகின்றது.

ஊர்வன வகைகளின் மீதுள்ள தகடுபோன்ற அமைப்பே பின்பு சிறகுகளாக மாறியிருக்க வேண்டும். சிறகு முளைக்கப் பெற்றவையே பின்பு பறவைகளாக உருப்பெற்றிருக்க முடியும். பல்லி வாழ்ந்த இடைக்காலத்திற்குப் பிறகுதான் இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்திருக்கக்கூடும். இராபின் என்றழைக்கப்படும் சிறு பறவை பல்லி வகையைச் சார்ந்த விலங்கிலிருந்து வந்திருக்க முடியும் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. வெப்பக்குருதி விலங்குகள் (பாலூட்டிகள்) பல்லி இனம் வந்தபிறகுதாம் தோன்றின எனலாம். பல்லி இனம் உலகை ஆண்ட வரையிலும் பாலூட்டிகள் சிறு உயிரினங்களாகவே இருந்தன.

குளிர்க்குருதி விலங்கான பல்லியின் உடலின் உள்ளே வெப்பத்தை ஒழுங்குபடுத்தும் தன்மை இல்லாததால் அது சுற்றுப் புறப் பருவநிலைக்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்கிறது. அவை குறைந்த அளவு வெப்பநிலையிலே வாழவேண்டியிருக்கிறது. 100 பாகை (டிகிரி) வெப்ப அளவில் (Fahrenheit) அவை (குளிர்க்குருதி விலங்குகள்) இயக்கம் குறையும் அல்லது தடைப்படும்.

மிகுந்த வெப்பம் வந்த காலத்து இவ்விலங்குகள் சிறிய ஊர்வன போல் தரையில் துளைசெய்து கொண்டு வாழ இயலாது. குளிர்காலத்தில் இவ்விலங்குகளின் இயக்கம் குன்றும்நிலை அடைவதால் அங்குமிங்கும் ஓடமுடிவதில்லை. நல்ல பயிற்சி இல்லாததால் நல்லவெப்பம் அவற்றின் உடலில் இல்லை. ஆனால் அதே போழ்து அவற்றிற்கு எவ்வளவு திறன் வெளியாகின்றதோ அவற்றை ஈடு செய்வதற்கிடான உணவும் அவற்றால் உண்ணமுடிவதில்லை. பேரச்சப் பல்லிகள் ஏன் இவ்வளவு பெரிதாக வளர்கின்றன என்பதற்கு இந்நிலைகள் விடை கூறுகின்றன. கதிரவன் ஒளியில் படும்பொழுது அவற்றின் திசுக்கள் மிகவும் குறைந்த விரைவில் குளிரடையும். வெப்பமடையும் பொழுது மிக மிகக் குறைந்த விரைவையே எடுத்துக் கொள்ளும். இவ்வாறாக அவற்றின் உடலமைப்பே வெப்பநிலை கட்டுப் படுத்தும் கருவியாக அமைந்துள்ளது.

ஒரு பேரச்சப்பல்லி எவ்வளவு நாள் உயிர்வாழ்ந்திருக்கக் கூடும் என்பதை யாரும் உறுதியாக அறிந்திலர். அதன் அகவை 100 முதல் 200 ஆண்டுகள் இருக்கலாம் என விலங்கியல் வல்லுநர் எண்ணுகின்றனர். மரங்கள் வீழ்ந்து அழிந்து நிலத்தின்கீழே எப்படி மரப்படிவுகள் அல்லது பாறைப்படிவுகள் ஏற்பட்டனவோ அப்படியே விலங்குகள் அழிந்ததனால் கீழே எலும்புப் படிவுகள் ஏற்பட்டன. எலும்பைப் பற்றிய ஆராய்ச்சியின் மூலம் நாம் மேலும் பல செய்திகளை அறியலாம்.

பேரச்சப்பல்லிகள் ஒலி எழுப்புமா? சில ஆண்டுகளுக்கு முன் பண்டாரகர் எட்வின் கால்பர்ட்டு (Dr. Edwin Cobbert) என்பவரும் இவர் நண்பர் சான் ஆசுடரம் (John Ostrom) என்பவரும் இணைந்து ஆராய்ந்ததில் பேரச்சப் பல்லிகள் தம்முடைய இடைக்காதின் (நடுக்காதின்) எலும்புகளின் துணைக்கொண்டே கேட்கின்றன என்ற உண்மையைக் கண்டனர். இவ்வாறாகப்

பேரச்சப்பல்லிகள் கேட்கும் தன்மை பெற்றபொழுது ஒலி எழுப்பும் தன்மையையும் பெற்றிருக்கக்கூடும். அவை ஒலி எழுப்பும் முறை வேறுபட்டு இருக்கலாம். மெல்லிய ஒலிமுதல் அச்சமூட்டும் பேரொலி வரையிலும் எழுப்பலாம்.

இவ்வுலகில் பல்லாண்டுகள் தம் மேலாண்மையைச் செலுத்தி வந்த அப்பேரச்சப்பல்லிகள் நிலவுலகை விட்டே அழிந்த தன்மை புரியாத பெரும் புதிராக உள்ளது. அவை முழுமையும் ஒரே காலத்தில் அழிந்திருக்க முடியாது. காலப் போக்கில்தான் அஃதாவது பல இலக்கக் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகுதான் மறைந்திருக்க முடியும். எந்தவகைபான அழிவு அவற்றைத் தாக்கியபோதும் அவை உடனே மறைந்துவிடவில்லை. அவை யாவும் மாபெரும் ஊர்வன இனத்தின் கடைக்காலத்தில்தான் (the end of the Mesozoic -era) மறைந்திருக்கவேண்டும். அவை மறைந்தபொழுது நேரடியான தம் பின் இனங்களை விட்டுச்செல்லாமல் சேய்மை உறவுகளான பறவைகள், முதலைகள் போன்றவற்றையே விட்டுச் சென்றன.

ஊர்வன (பல்லியினம்) இக்காலத்தில் இல்லாததற்குப் பல கரணியங்கள், சான்றுகளுடன் சொல்லப்படுகின்றன. அவற்றில் தரை (பூமி) மிக்க வெப்பநிலை யடைந்ததும் ஒரு கரணியம். இனப் பெருக்கத்திற்குப் பயன்படும் ஆண் ஊர்வனவற்றின் உறுப்பு மிகுந்த வெப்பத்தைத் தாங்கிக் கொள்ளும் தன்மை பெற்றதாக இருந்திருக்கவேண்டும். ஆகவே மிகுந்த வெப்பம் வந்ததால் அந்த ஆண் இனத்தைச் சார்ந்த ஊர்வன கருவுண்டாக்கும் தன்மை அற்றதாய் அமைந்திருக்கலாம். அடுத்துச் சொல்லப்படும் கரணியம் மேலே கூறியதற்கு நேரெதிரானது. அஃதாவது நிலம் மிகக் குளிர்ச்சியடைந்ததால் ஊர்வன ஈனும் தன்மையை இழந்திருக்கலாம். மழைக்காலத்தில் தவளைகளின் இயக்கம் எப்படித்தடைப்படுகிறதோ அவ்வண்ணமே நல்ல குளிர்காலத்தில் பெரும்பல்லிகளின் இயக்கமும் தடைப்படுகின்றன. இயக்கம் தடைப்படுவதால் அவை அங்குமிங்கும் செல்ல முடியவில்லை. உணவு கிடைக்காமல் நாளடைவில் பட்டினி கிடந்து மடிகின்றன.

நீண்ட இலைகளையுடைய பயிரினங்களும் புற்களும் நல் வளர்ச்சியுற்று மிகமடங்கு உயிர்வளியை (oxygeu) வெளிப்படுத்தின. இங்ஙனம் நிறைந்த அளவு உயிர்வளி காற்றில் கலப்பதால் பேரச்சப்

பல்லிகள் இக்காற்றின் முன்னே நிற்கமுடியவில்லை. மிகு அளவு உயிர்வளி காற்றில் இருப்பதால் பல்லிகள் உண்ட உணவு விரைவில் எரிக்கப்பட்டு விடுகிறது. செரித்த உணவை ஈடு செய்வதற்குத் தேவையான உணவை இவை (பல்லிகள்) உண்ண முடியவில்லை. ஆகவே காலப்போக்கில் உணவு இல்லாமல் மறைந்திருக்கலாம். பல்லி அழிந்ததற்கு மற்றொரு கரணியமும் கூறப்படுகிறது. வேறுசில (சிறிய ஆனால் உண்மையான) விலங்குகள் மிகுந்த அளவில் தோன்றிப் பேரச்சப்பல்லிகளின் கூட்டை அழித்து அவற்றின் முட்டைகளை அழித்துத் தின்றிருக்கக்கூடும்.

பேரச்சப்பல்லி இனத்தின் கால எல்லையே முடிந்திருக்கலாம். அதனால் தாமாகவே பல்லிகள் அழிந்திருக்கக் கூடும். இது வியத்தகு கரணியங்களில் மேலான ஒன்று. பெரும்பாலான விலங்குகளின் காலஎல்லை ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளாகவே இருக்கின்றன. தனியொரு விலங்கு எங்ஙனம் முதிர்ச்சியடைந்து மறைகின்றதோ அதேபோல் குறிப்பிட்ட ஓர் இனமும் (Species) கால முதிர்ச்சியடைந்து உலகிலேயே இல்லாமல் மறைந்திருக்கலாம். இந்நிகழ்வைச் சான்றுகள் பல கொண்டு நிறுவலாம்.

பல்கலைக் கழகங்களிலும் விலங்குக் காட்சிச்சாலைகளிலுமுள்ள விலங்கியல் வல்லுநர்கள் (பாறைப் படிவங்களைத் தேடி ஆராய்ச்சி நடத்துகின்றவர்கள்) பல்வேறு பேரச்சப்பல்லிகளின் வாலாற்றை நன்கு அறிவிக்கின்றனர். ஆனால் பேராசிரியர் செப்சன் (Jepsen) என்பவர் பேரச்சப்பல்லிகளைப் பற்றிய உணர்ச்சிமிக்க வியத்தகு ஆராய்ச்சிகள் இன்னும் நடக்கவிருக்கின்றன என்கிறார். O

('Readers' Digest' இல் வெளியான ஒரு கட்டுரையைத் தழுவியது)

தென்மொழி, கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா	14 உருபா
அரையாண்டுக்கட்டணம்:	5 உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	1-10

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க.

ம: 158: காலம் அழைத்துவரும்; காத்திருப்போம்!

"ஏதாவது செய்யவேண்டும், அதன் மூலம் வெளுத்த நமது எலும்புகள் இன்னும் உலுத்துப்போகவில்லை என இவ் வுலகிற்கு உணர்த்த வேண்டும்" என்னும் அவா தமிழ்க் குமுகாயத்தின் குருதியிலே ஊறிக்கிடக்கின்றது. இந்த ஏதாவது செய்யவேண்டும் என்ற நமது அவாவினை எங்கிருந்தோ வந்தவர்கள் எல்லாம் பயன் படுத்திக்கொண்டனர். எதிரிகள் யார் என்று எண்ணிப்பார்க்காமலே தமிழர்கள் தங்களுக்குள்ளேயே போரிட்டு அழிந்தனர், அழிந்து கொண்டும் இருக்கின்றனர். அன்று சேரன், சோழன், பாண்டியன் எனத்தங்களைப் பிரித்துக் கொண்டு போரிட்டு அழித்துக்கொண்ட நம் தமிழர்கள் இன்று தி. மு. க. , பேராயம், பொதுஉடைமை என்னும் இயக்கங்களின் பெயரால் தங்களையே பிரித்துக்கொண்டு உட்பகை கொண்டு ஒருவரை ஒருவர் வெறுக்கின்றனர். எங்கிருந்தாலும், எப்படி இருந்தாலும் நாம் தமிழர்கள். நம்மால் தீர்க்கப்பட வேண்டியவை சாதி, சமயம் என்னும் நிலைகள்தாமே தவிர தமிழர்களின் தலைகள் அல்ல. காமராசர் ஆனாலும் கருணாநிதி யானாலும், மதுரை முத்து என்றாலும் நெடுமாறன் என்றாலும் நாம் அனைவருமே தமிழர்கள். நமக்குப் பாதைகள் மாறுபடலாம்; ஆனால் குறிக்கோள் ஒன்றுதான்.

தமிழரின் நலமும், தமிழின் உயர்வும்தாம் நமக்குக் குறிக்கோளே அன்றி, அதை யார், எவ்வகையில் முதலில் எய்துவது என்பதில்தான் நமக்குள் போட்டியே தவிர, எங்கே அந்த குறிக்கோளை நமக்கு முன் அவன் எய்திவிடுவானோ என்ற பொறாமையும் பொச்சரிப்பும் நம்மிடையே உருவாதல் கூடாது. அதை உருவாக்குபவர்களே நமது முதல் எதிரிகள். இத்தகைய எண்ணங்களின் அடிப்படையில் பெருமையோடு உருவாக்கப்பட்டதுதான் உலகத் தமிழ்க்கழகம். மனம் திறந்து கூறுவதாயின் தந்தை பெரியாரைவிட்டு அன்று அறிஞர் அண்ணா பிரியாமல் இருந்திருந்தால் தமிழகம் இன்று ஒரு பெரும் குமுகாயம் புரட்சியைக் கண்டு தலை நிமிரத் தொடங்கி இருக்கும். ஆயின் தமிழகம் அப்பெருமையைப் பெறும் பெருவாய்ப்பை இழந்தது.

இத்தகு பேரிழப்புகளைத் தமிழகம் பெறக்கூடாது; அஃது 'உலுத்தர்களின் உடும்புப்பிடிகளுக்கு உட்பட்டு, உட்பகை கொண்டு, உயரிய பாதைகளில் இருந்து வழி திருப்பப்படக்கூடாது; இழந்துவிட்ட ஒற்றுமை என்னும் உயரிய வலிவைத் தமிழர்கள் மீண்டும் பெறுதல் வேண்டும்; என்பன போன்ற எண்ணற்ற நல்லெண்ணங்களின் விளைவாய்ப் பிறந்ததே உலகத் தமிழ்க் கழகம். உட்பகையை அழிப்பதற்குப் பிறந்த உலகத் தமிழ்க் கழகத்திலேயே இன்று உட்பகை. நச்சரவத்தின் மருந்தினில் நஞ்சு துளிர்க்கின்றது. ஏதோ செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் உந்தல்–அது சில சமயங்களில் எதை எதையோ செய்து விடுகின்றது. நடந்து வந்த பாதையிலே நலிந்த முள் ஒன்று குத்தி விட்டதற்காகப் புதிய பாதையையே படைக்கத் தொடங்குவோர் வியர்வை வருகின்றது என்பதற்காக வேறுவேலை தேடுவோர், ஆவின் நிறத்திற்காக அதன் பாலினை மறுப் போர், இவர்கள் எல்லாரும் குறிக்கோளுக்காக் கூடிய, நம்மிடையேயும் இருத்தல்கூடும் என்பதை உணரும் போது ஏற்கனவே நொந்துபோன இந்நெஞ்சம் மேலும் நோகத்தான் செய்கின்றது. இத்தகு துன்பத்திற்கு இடையேயும் நமக்கு ஒரு இன்பம் அளிக்கும் ஆறுதல்.

நாம் பட்டம், பதவியை நோக்கிப் புறப்பட்டவர்கள் அல்லர். இருக்கின்ற வேலையையும் உதறிவிட்டு வேள்வியிலே குதிக்க விரும்புவோர். அவ்வகையிலேயே அஞ்சலகப்பணியை அஞ்சாமல் தூக்கி- எறிந்த ஓர் அஞ்சா நெஞ்சனுக்குப் பின்னே அணிவகுத்து நிற்போர். நாம் ஆள்பிடிக்க அலைவதில்லை. உள்ளதைச் சொல்கிறோம். உள்ளம் திறந்து சொல்கிறோம். நாம் நிற்கும் இடம் எது என்று அறிந்து நாம் நிற்கின்றோம். அந்த இடம் நோக்கி ஆள்வோரும், ஆயிரமாயிரம் தமிழர்களும் (வேறு வழி இல்லாமல்) நெருங்கிக் கொண்டிருப்பதை நாம் முழுமையாய் உணர்கின்றோம்.

இது விடுதலைக் களம். இதில் இருந்து நாம் பின்வாங்கப் போவதில்லை. பிரிந்து செல்வோரையும் தூற்றப்போவதில்லை. ஏனெனில் நமக்குத்தெரியும் ......நம்மவர்கள் எங்குச் சென்றாலும், எதை எதிர்பார்த்துச் சென்றாலும், அவர்கள் அனைவருமே இங்கு வந்துதான் தீரவேண்டும். காலம் அனைவரையுமே இங்கு அழைத்து வந்து தன் கணக்கைத் தீர்க்கத்தான் போகின்றது. நாம் முன்னால் நிற்கின்றோம். அவர்கள் பின்னால் வந்து நிற்கத்தான் போகின்றார்கள். படைக்கு முந்துவதுதான் பெருமை. ஆகவே நாம் பெருமையோடு நின்று உரிமையோடு குரல்கொடுப்போம். 'தமிழ்நாடு தமிழருக்கே!'

—முகிலன்-வெங்காளூர்.

ம: 159: திரு." நா.பா."வும் திரு. நாகராசனும்

4—5—72 ஞமுதத்தில் திரு நா.பா.வின் விளக்கம் பொருத்தமற்றது. சமற்கிருதச் சொற்கள் கடவுட் சொற்களாகவும், தமிழ்ச் சொற்கள் கட்டைவண்டிச் சொற்களாகவும் அவருக்குத் தோன்றுவதில் வியப்பில்லை. ஏனெனில் சமற்கிருதம் பழந்தமிழைப் பார்த்துச் "செய்யப்பட்ட மொழி" யென்றும், சமற்கிருதத்தில் ஐந்தில் இருபாகம் பழந்தமிழ் வேர்ச் சொற்களே என்பதையும் அவர் அறியார். "ப.ஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடுங் கொடுங் கடல் கொண்ட" தை [சிலப்பதிகாரம் 11;19-20] நன்கறிந்த திரு. நா.பா. தமிழரின் தொன்மையை மறைப்பதற்காகப் ப.ஃறுளியாறு இற்றைப் பறளியாறே எனமுட்டுக் கொடுப்பவரன்றோ?

அடுத்து ஒருவர் நாகம் என்பதை வடசொல் எனக் கருதுகிறார். நாகம் என்பதற்கு வடமொழியில் மலை [நக-மலை] என்பது தவிரவேறு பொருளில்லை. தமிழ் நாகமே பிறமொழிகளில் படர்ந்தாடுகிறது.

நகர்—நாகம்—பாம்பு; நகர்தல்—ஊர்ந்து செல்லுதல்
English:Snake-Snicon—to creep

நகரும் [ஊரும்] உயிரி நாகம். தமிழிலிருந்து வடமொழியாளர் கடன் கொண்டதை மறைக்க 'மலையில் வாழ்வது' எனப் பொருந்தாது பொய்த்தனர்.

அரசன் என்ற தூய தமிழ்ச்சொல் பலமொழிகளில் பரவி மருவியுள்ளது. அரவணைத்து[த்தழுவி]ப்பாதுகாக்கும் உரவோன் அரசன்.

தமிழ் அரசன்–Greek: Archon, archos, arkho, arkia
E, arch; Latin Regis; வடமொழி: ராஜன்
—தெலுங்கு: ராயலு; கன்னடம்: ராயரு; E. Roy

அரசன்—வ.ராஜன்; அரசன் — அரையன்—ராயன்
ஒப்புநோக்கு: த. அரங்கம்—வ. ரங்கம்
த. அரத்தம்—வ. ரக்த

அரசு—மலையாளம்: அரசு; கன்னடம். அரசை; தெலுங்கு ராய்
ராஜன் என்பதற்கு வடமொழி 'ரஜ்' என்ற வேர் எள்ளளவும் பொருந்தாது.

நாகராசன் என்பது தமிழ்த் திரிசொல்லே; சரியான வடிவம் நாகவரசன்.

இவற்றின் விரிவையெல்லாம் 'வடமொழி வரலாறு' The Primary Classical Language of the World என்னும் நூல்களுட் கண்டு தெளிக.

தமிழ் இறைச்சொற்கள் யாவும் இடைக்காலத்தில் பொருந்தியும், பொருந்தாமலும், அருவருப்பாகவும் சமற்கிருதத்தில் மாற்றப் பட்டதற்கு நூற்றுக்கணக்கில் சான்றுகள் உள. இப்போது மீண்டும் பழைய வடிவத்தையே கொணர முயல்கின்றனர்.

தமிழ் நாட்டில் முற்றும் தூய தமிழ் வழங்க வேண்டியிருக்க ஒரு சில சொற்களை மட்டும் தமிழ்ப்படுத்தியதற்கே இவ்வளவு எதிர்ப்பா?

[இம்மடலின் படியொன்று குமுதம் ஆசிரியர்க்கு விடுக்கப் பெற்றுள்ளது]

200ந, மேழம், கஅ
30—4—72

அன்பன்,
சு. திருஞானம்.

ம; 160: தமிழர் உருவில் கி. வா. ச.

தனித்தமிழ்ப் பெருந்தகையே!

புல்லிய வணக்கம். இத் தென்றமிழ்நாட் டாரியப் பார்ப்பனர் தம் வயிற்றுப் பிழைப்புக்காகத் தமிழ் கற்றுத் தமிழுருவில் ஆரியமொழிக் காக்கந்தரும் வகையில் எழுதியும், பேசியும் வருகின்றனர். அத்தகை யோருள் திரு கி. வா. ச. ஒருவர். அண்மையில் வெளியான ஆனந்த விகடனில் 'பத்மஸ்ரீ' 'பத்மபூஷன்' 'பத்மவிபூஷன்' போன்ற ஆரிய மொழிப் பட்டங்களைத் தமிழ் மொழியில் பெயர்த்துக்கொள்ளுதல் மொழி வெறுப்பைக் காட்டுமென்றும், தேவையற்றதென்றும், 'டாக்டர்' பட்டத்தைக் 'கலாநிதி' என இலங்கையில் மொழி பெயர்த்துக் கொள்கின்றன ரென்றும் விரும்பியவா றெல்லாம் எழுதியிருந்தார். தமிழ்க்கடல். மறைமலையடிகளாரையும், மொழி ஞாயிறு. பாவாணரையும், தங்களையும் நெடிதெண்ணும் அதே தமிழ் நெஞ்சில் இத்தகைய இழிவான பார்ப்பனப் புலவர்களையும் எண்ண வேண்டியுள்ளதை எண்ணுங்கால், என் சிறுநெஞ்சு பெரிதும் நோகின்றது.

தாமொருவரே தமிழகத்தில் தமிழ்ப்புலவர் எனும் நினைப்பில் நினைத்தவாறெல்லாம் எழுதியும் பேசியும் வரும் கி. வா. ச.

போன்றோர் காதுகள் செவிடுபடும் வண்ணம் தென்மொழி இதழில் மொழிபெயர்த்தல் குறித்து விளக்கந் தந்துதவுமாறு பெரிதும் விழைகின்றேன்.

தமிழ் நலம் நாடும்,
பெரு-தமிழ்வேந்தன்-உத்தண்டியூர்.

ம: 161: அரசினர்க்கு மாறாக அய்யரின் தனிக்கட்டளை !

அய்யா!

தமிழக அரசு தனது கட்டளைக் குறிப்பில் கல்வித் துறையினர் கடிதப் போக்குவரத்தினைத் தமிழில் எழுதலாம் என்று அறிவித்தது முதல் கடந்த ஓராண்டுக்கு மேலாக எல்லா நடவடிக்கைகளையும் தமிழிலேயே இருப்பு அரசுயர்பள்ளி எழுதி வந்தது, சம்பளப் பட்டியலையும் தனித்தமிழில் எழுதி அனுப்பியது. ஏப்பிரல் சம்பளமாக வந்த காசோலையுடன் வந்த குறிப்புச் சீட்டில் சம்பளப்பட்டியல் தமிழில் எழுதக் கூடாதெனக் கையொப்பம் எதுவுமின்றக் குறிப்பிட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தார் அனுப்பியிருந்தனர். அதன் பின்பு மேதிங்கள் பட்டியலையும் தமிழில் எழுதியதைப் பொறுக்காத மேற்படி அலுவலக நேர்முக உதவியாளர் திரு. ''இராதாகிருட்டிண [அய்யர்]'' அவர்கள் 20—5—72-இல் கையொப்பமிட்டு ''பட்டியல் யாவும் ஆங்கிலத்தில்தான் எழுதப்படல் வேண்டுமெனவும் மீண்டும் தமிழில் எழுதினால் சூன்மாத ஊதியப் பட்டியல் திருப்பி அனுப்பப்படும்'' எனவும் கடுமையாக எழுதியுள்ளார். இந்த நிலையை அரசின் பார்வைக்கு அறிவித்து நல்ல முடிவு காண முயலுமாறு தங்களை வேண்டுகின்றேன்.

இன்னணம்
மு. பொய்யாமொழி
—காட்டுக் கூடலூர்

ம: 162: விடுதலை மாநாட்டுத் தலைவரின் சூளுரை!

அன்புள்ள ஐயா, வணக்கம். பொருளைத்தேடி வந்தவனுக்குப் பொற்குவியலே கிடைத்ததுபோல விடுதலை மாநாட்டைக் காண வந்தவனுக்கு மாநாட்டிற்குத் தலைமை தாங்கிடும் கிடைத்தற்கரியபெரும் வாய்ப்பினைத் தந்தமைக்கு என்றும் நன்றிக் கடன் பட்டுள்ளேன். அச்சமுள்ள நெஞ்சில் மாநாட்டின் இறுதியில் அறிவிக்கப்பட்ட செயல்திட்டங்கள் உருவாவதில்லை. இச்செயல்

திட்டங்கள் வரலாற்றில் இடம் பெறப் போவதும் உறுதி. என்னைப் பொறுத்த வரையில் என்னை எங்கே அழைத்தாலும் வர அணியமா யுள்ளேன். கையில் படை ஏந்திப் பகைவர் தலை கொண்டுவா என்றாலும் அணியமாயுள்ளேன். விடுதலைக்கு விலை உன் தலை என்றாலும் முழுவிருப்பம். இந்த உறுதிப்பாட்டிலிருந்து எந்நிலையிலும் பின்வாங்கிட நான் அணியமாயில்லை. ஊர்வலம் காவல்துறை யினரால் தடுக்கப்பட்டு நீங்கள் காவல்துறை அதிகாரிகளிடம் உரையாடிக் கொண்டிருந்த போழ்து யான், அன்புத் தமக்கையார் திருவாட்டி தாமரை அம்மை பாரின் அருகில் நின்றேன். கொஞ்சமும் அச்சமின்றி, நெஞ்சினில் துணைவரைப்பற்றிக் கவலை கொண்டிருந் தாலும் அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் நின்றநிலை "எதையும் தாங்கிக் கொள்வேன் என்னரும் நாட்டின் விடுதலைக்கே" என முழங்குவது போல் தோன்றிற்று. இப்படி மனைவி மக்கள் அனைவரை யும் நாட்டுப் பணியில் ஈடுபடுத்தி நிற்கும் தூய்மையான உணர்வை இந்தத் தமிழ்மாந்த இனம் எந்த அளவு உணர்ந்து செயல்படப் போகின்றது என்ற ஐயத்தை வருங்காலம்தான் தெளிவுபடுத்த வேண்டும். தங்கள், அன்புமறவாத, வை. தமிழ்க்குமரன்.

ம: 163: தென்மொழி வளர்ச்சி இன்றியமையாதது.

ஐயா!

வணக்கம். தமிழகம் விடுதலை பெறவேண்டும் என்று ஆண்டுபல எண்ணிவந்தேன். எண்ணம் நீறுபூத்த நெருப்பாய் இருந்து வந்தது. வங்க விடுதலைக்குப்பின் எண்ணம் மறுமலர்ச்சி அடைந்தது. 'தமிழ் வாழ்க, வெல்க' எனச் சொல்லுவதால் மட்டும் [ஆண்டு பல ஓடினும்] தமிழ்நாடு தனிநாடாகும் என் இனிய எண்ணம் ஈடேறாது எனக்கண்டேன். நாடு ஆரியப்பார்ப்பானிடம் இருந்து விடுபடும்படி துரும்பேனும் அசைக்க எண்ணம் கொண்டேன். செய்தித்தாள் வாயிலாக நடுவண் அரசு தமிழுக்கு, தமிழனுக்கு, தமிழ் நிலத்திற்கு இழைத்துவரும் கொடுமைகளை வங்க விடுதலைக்குப்பின் அறியத் துவங்கினேன். திருச்சி, தஞ்சை, சென்னை, திருப்பூர் முதலிய இடங்களில் தனித்தமிழ்நாடு சுவரொட்டிகள் காணப்பட்டதனைச் செய்தித்தாள்கள் வாயிலாக அறிந்தபோது, ஒட்டியவர்களோடு இணைந்து செயலாற்றத் துடித்தேன். ஆயினும் ஒட்டியவர் யார் என்ற கேள்விக்கு மறுமொழி கிடைக்க வில்லை. சென்ற சில நாட்களுக்கு முன்பு "இந்தியன் விரைவு" நாளிதழில் (Indian Express) திருச்சியில் நடைபெற்ற தமிழகப் பிரிவினை மாநாடு பற்றிய செய்திகள் அறிந்து உவகை கொண்டேன். தங்களது திங்களிதழ்

பற்றிய செய்திகளை அறிய முற்பட்ட போது, சில தென்மொழி இதழ்கள் கிடைக்கப் பெற்றேன். நாடு விடுதலை பெறத் தாங்கள் எழுதிய கட்டுரையைப் பயின்றேன். படிக்கப் படிக்கத் தோள்கள் புடைத்தன; நெஞ்சு விம்மியது; உணர்ச்சி மேலீட்டால் படிப்பதை நிறுத்திப் பின் படித்தேன். நாடு விடுதலைபெற வேண்டுமாயின் தங்களது இதழ் வளர்ச்சி இன்றியமையாதது. அடுத்த விடுதலை மாநாடு எப்போது, என்று, எங்கு என ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம். விரைவில் அறிவிக்க. நீங்கள் நாடு விடுதலை பெற அமைக்கும் மறவர் படையில் எம்மை முதல் தொண்டனாக ஏற்க, இன்னணம்

நாடு விடுதலையுற வேட்கை கொண்ட மறத்தமிழன்
பெ. நா. சந்திரசேகரன், திருப்பூர்.

ம: 164: எத்தனை இயக்கங்கள்?

ஒரே கொள்கைக்கு ஒரு நூறு இயக்கங்கள்! கொள்கைச் செயற்பாட்டிற்காகத்தான் இயக்கங்கள் தோன்றுகின்றனவா? 'ஆம்' என்று சொல்ல ஐயந்தான். நல்ல காலம்! இயக்கத்திற்காகக் கொள்கைகள் தோன்றவில்லை. பதவிக்காகத்தான் இயக்கங்கள் தோன்றுகின்றன போலும்! இந்நாளில் இயக்கம் தோன்ற மூன்று பேர் இருந்தால் போதுமென் றாகிவிட்டது. ஒருவர் தலைவர்; ஒருவர் செயலர்; மூன்றாமவர் பொருளர். பிழைப்புக்குத் தந்நலமும், பொழுது போக்கிற்குப் பொது நலமும் பேசுவதுதான் இவர்கள் அளக்கும் தொண்டு.பதவிக்கான இயக்கங்கள் மிகுந்தும், பணத்திற்கான இயக்கங்கள் பரந்தும், பணிக்கான இயக்கங்கள் குறைந்தும், உண்மையிலேயே அருகியும் வருகின்றன. தனிமாந்த விருப்பு வெறுப்புகளுக்கு இயக்கத்தைப் பொறுப்பாக்குவது நல்லதன்று. சொந்தக்கருத்து மாறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டுக் கொள்கையின் அடிப்படையில் தமிழரனைவரும் இணைந்து செயலாற்றாத வரையில், தமிழின விடிவுக்காலம் வரைவில் ஏற்படப்போவதில்லை.

—அரசு, அண்டநம்பி, தஞ்சை.

ம: 165: திட்டவட்டமான செயல் திட்டம்!

பாவலர் ஐயா, வணக்கம். 'தென்மொழிக் கொள்கைச் செயற் பாட்டு மாநாட்டு' நிகழ்ச்சிகளைத் தென்மொழி யிதழில் படித்து அறியும் பேறு பெற்றேன். படித்தவுடன் இது சிறுபிள்ளைகள் மணல் வீடு கட்டி விளையாடுவது போல் இருக்கிறதே என்று நினைத்தேன். பின்னர் ஆழ்ந்து எண்ணினேன். இத்திட்டம் மிகச் சீரியதிட்டம் என்பதும் உறுதியாக நிறைவேறும் என்பதும் எனக்கு நன்கு விளங்கு

கிறது. ஆனால் தாங்கள் இறுதிவரை உறுதியாக இருக்க வேண்டும். எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்! எந்தப் பெருமுயற்சியும் பலரால் செய்யப்பட வேண்டிய திருந்தாலும் திண்மையுள்ள முனைவன் ஒருவன் வேண்டும். அது தாங்களே.

இன்றுள்ள இளையோரின் ஆற்றல் மிகுந்து விஞ்சித் தீமையை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கிறது. அந்த மிகுந்த ஆற்றல் பாய்வதற்கேற்ற வடிகாலாகத் தங்கள் திட்டம் அமையும். விஞ்சும் இந்த ஆற்றல் நம் நாடு, மொழி குமுகாயச் சீரமைப்புக்குப் பயன் படட்டும். தாங்கள் எதிர்பார்த்ததற்குமேல் விரைவில் வெற்றி கிடைக்கும். கரணியம் தங்கள் திட்டவட்டமான செயல்திட்டம். இச்செயல்திட்டம் கனிந்துவரும்போது இந்நாட்டிற்குச் செய்ய வேண்டிய இன்னும் பல பணிகள் இருக்கின்றன. அவற்றையும் செய்வோம். அவ்வேளையில் தங்கள் அருகில் [உடலால்] இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஒன்றே ஒன்றை என்றும் உறுதியாகக் கடைப்பிடியுங்கள். தேர்தல்–அரசியல் பக்கம் செல்லாதீர்கள். தேர்தலில் நிற்கும் எவருக்கும் துணைபோகாதீர்கள்; பிறர் தேர்தலைப்பற்றிக் கருத்துக் கூறாதீர்கள். எந்த நிலைமையிலும் நம் உள்ளத்திலும் தேர்தல் இருக்கக் கூடாது. இலக்கு கட்டாயம் நம்மைத் தேடிவரும்.

தங்கள் அன்பன்,
—செ. பெரியநாடார், கடையநல்லூர்.

மீ: 166: அறிவியல் முறையில் குமுகாயப் புரட்சி!

விடுதலைப் பாவலரே,

புரட்சிகர வணக்கம். தென்மொழி விடை-கடகம் தி.பி. 2003 இதழைக் கண்டேன். விடுதலை உணர்ச்சி பெற்றேன். தமிழக விடுதலை அமைப்பு பல்கிப் பெருகட்டும். விடுதலை அமைப்புச் சார்பில் அரசியல் நாளிதழ் தொடங்க முயற்சி செய்வது மிகமிகத் தேவை. தனித்தமிழ் நாளிதழ் மிகமிக வேண்டற்பாலது. தி.க.வினருக்குத் தனித்தமிழ் என்றால் என்ன? அதன் பயன் யாது? என்பதை உங்கள் சொற் பொழிவு [திருச்சி]விளக்கி உள்ளது. வெறும் குமுகாய விடுதலையைத் தான் தி.க.வினர் பார்க்கின்றனர். அவர்கட்குத் தனித்தமிழின் தேவை அதன் விளைவுகளை உணர்த்தக் கூடிய அளவில் இன்னும் பல கட்டுரைகளை நீங்கள் எழுதவும்! பாவியமாகவும் படைக்கலாம்.

உங்களின் உரை நடையும், பாவியமும் என்னை மட்டுமன்று பல தமிழர்களைக் கவர்ந்துள்ளன. எனவே எம்முறையில் எழுதினாலும் பயன் தரும்.

தமிழக விடுதலை இயக்கம் முறையாக இயங்கப் போவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி. அருமையான திட்டம். நடைமுறையில் காட்டினால் தமிழகம் உலகப் புகழ் பெறும். அடிமைத்தனம் ஒழியும். வறுமை அழியும். புதுவாழ்வு பிறக்கும்.

பள்ளிக்கூடச் சான்றிதழில் 'சாதி,' மதம் யாதெனக் கேட்கப் படுகிறது. இதைத் தடுக்க இப்போதைய தமிழக அரசோ, நடுவரசோ ஒரு சட்டமும் கொண்டுவராது. 'சாதி' மதங்களைக் காப்பாற்றவே இந்த நாட்டில் சட்டமும் 'சாத்திரங்க'ளும் உருவாக்கப் பட்டுள்ளன. நமது தமிழக விடுதலை இயக்கம்தான் இத்தகு இழிவுகளை எதிர்த்துப் போராட்டம் நடத்த வேண்டும். இன்று நம்மில் பலருக்கு வேதம் தெரியாது மனு தரும சாத்திரம் தெரியாது. கீதையும் படித்திருக்க மாட்டார்கள். இராமாயணத்தில் எத்தனைப் பாக்கள் உள்ளன என்பதும் தெரியாது. மகாபாரதத்தில் கூறப்படும் உட்பொருள்களும் தெரியாது. ஆனால் 'சாதி' உணர்ச்சி நமக்குள் இருக்கிறது. இதற்குக் கரணியம் என்ன ? நம் நாட்டில் உள்ள தலைவர்களும், நம் வீட்டிலுள்ள பெரியவர்களுந்தாம் 'சாதி' மதத்தை விடாமல் கட்டிக் கொண்டு அழுவதுடன் இளைய குமுகாயத்தினர் மீதும் திணிக்கிறார்கள். தலைவர்கள் சாதி வேற்றுமையைப் பார்த்துத்தான் தேர்தலுக்கு ஆட்களை [சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர்] நிறுத்துகின்றனர். 'அரிசனங்கள்' உள்ள இடங்களில் 'அரிசன' ஆளையே தேர்தலுக்குப் போட்டியிடச் செய்கின்றனர். நீண்ட காலம் வேர் ஓடிப்போனதாகச் 'சாதி,' மத, கடவுள் தொடர்பான நடவடிக்கைகள் பழகிப் போனதாலும் சாதிமத தெய்வ பிற்போக்குத் தனங்கள் ஒழியாமல் உள்ளன. இவற்றை ஒழிக்க தலைவர்கள் தக்க சட்டமும் செய்யவில்லை. சேரி ஒன்று உள்ளவரை பறையர்கள் என்ற ஒரு தாழ்ந்த 'சாதி' அல்லது "அரிசன காலனி' [இப்போது இது நாகரிகமான போர்வை] உள்ளவரை சாதி ஒழியாது. இந்த மக்களுக்கு ஊர் நடுவில் குடியிருக்க-வீடுகள் அமைக்கச் சட்டம் செயல் படவேண்டும். கலப்புத் திருமணத்திற்குத் தங்கப் பதக்கம் கொடுப்பதாகத் தமிழக அரசு சலுகை தந்துள்ளது. அஃது எத்துணை அளவு வெற்றி பெற்றுள்ளது ? இன்றும் 75 விழுக்காடு சாதி மணங்கள் தாம் நடக்கின்றன. கலப்பு மணங்களை ஊக்குவிக்க வேறு பல பொருளியல் சலுகைகளை அளிக்க நடுவரசும், தமிழக அரசும் முன் வர வேண்டும். பள்ளிக்கூடம், அலுவலகம், அற மன்றம் வேறு

எங்கும் சாதி, மதம் என்ன என்று கேட்கவே கூடாது. இதற்கான சட்டம் செய்ய நமது தமிழ் நாடு அரசு அணியமா? மேலும், பெருஞ்சித்திரனுர் கூறுவது போலத் தமிழர்கள் இன்று பார்ப்பான் மேல் பழியைப் போட்டு விட்டு அதே சமயம் பார்ப்பனீய முறைகளைப் பின்பற்றுகிருர்கள். இதற்குக் கரணியம் என்ன? தமிழர்களுக்கு உண்மையில் சீர்திருத்தப் பற்றுதல் இல்லை. புதுமைகளை ஏற்றுக் கொண்டு நடக்கத் துணிவும் இல்லை.

தமிழர்கள் அடிமைகளாக உள்ளனர். உண்மையில் தமிழர்களுக்குத் தூய தலைவர்களும் இல்லை. பெரியார் கன்னடக்காரர் எனவே, அவரிடம் தமிழ் மொழிப் பற்றும், தமிழ் நாடு விடுதலைப் பற்றும், தமிழ் இனப்பற்றும் இருக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பதும் சரியன்று. பெரியார் தமிழைக் காட்டு விலங்காண்டி மொழி என்று கருதுகிருர். மொழி விடுதலையைப் பற்றிப் பெரியாருக்கு கவலை இல்லை. அதைப் போலவே தி.க.வினரும் மொழி அன்பு-தனித்தமிழ்ப்பற்று இல்லாமல் உள்ளனர். இந்த நிலையை மாற்றத் தென்மொழிதான் தக்க போராட்டம் நடத்தவேண்டும்.

கோயில் கட்டியவன் தமிழன்தான். இன்றும் கோயில்களைக் கட்டுபவன் அல்லது திருப்பணிசெய்பவன் தமிழன்தான். திருவாரூரில் நெடு நாட்களாக ஓடாத தேரை ஓட்டியவனும் தமிழன் தான்! கோயிலுக்குச் சென்று தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொளுத்த வழிபாடாற்றுவோனுக்குக் காசு தருபவனும் தமிழன் தான். பால் முழுக்கு (அபிசேகம்) தயிர். மோர் முழுக்குகள் செய்து தேர் விழா, தங்க மயில் ஊர்தி உலாவரல், பிற காவடி தூக்குதல், வேல் குத்திக் கொள்ளுதல், தீ மிதித்தல், கோயிலில் கடா பலியிட்டுப் பொங்க லிடுதல் போன்ற எல்லா மூடத்தனப் பழக்க வழக்கங்களையும் மேற் கொண் டொழுகுபவன் தமிழனே! இவனைத் திருத்த அண்ணுவும், பெரியாரும் ஆற்றிய தொண்டு வெற்றி பெற்றதாக நான் கருத வில்லை. இன்றும் 'ஆத்தீ'கமும், மூடப் பழக்க வழக்கங்களும் பெருகி விட்டன. வாரியார், குன்றக்குடி அடிகளார், சங்கராச்சாரியார் பிற சமய மடத் தலைவர்கள், பிற சமயச் சொற்பொழிவாளர்களின் கூட்டங்களும் குறையவில்லை. இவை யாவும் பகுத்தறிவுக்கொள்கை வெற்றி பெற்றதையா காட்டுகின்றன? மேலும், தூய கடவுள் மறுப்பாளரான மு. கருணாநிதி "கடவுள் ஒருவர் உண்டு" என்று கூறுகிருர். இவர் நிலையே இப்படி எனில் பிறமக்களைப்பற்றி நாம் கவலைப்பட்டுப் பயன் என்ன? கோயில்களை இடிக்க வேண்டா. கோயில்களை எல்லாம் பள்ளிக் கூடங்களாக மாற்றச் சட்டம் செய்ய முடியாதா? ஆலயங்களை அறிவுக் கூடமாக்க வேண்டும்,'

என்ற அண்ணாவின் கொள்கையைத் தமிழக அரசு செயலில் காட்டத் தயங்குவது ஏன்? தமிழனிடம் ஆட்சி, அதிகாரம், பதவி இருந்தும் தமிழர்களின் பகுத்தறிவுக் கொள்கைகளைச் செயல் படுத்த முடிய வில்லை, பார்ப்பானைக் குறை கூறிப் பயனில்லை. தமிழர்களிடமே பார்ப்பானைப்பற்றிய அச்சமும் உள்ளது. ஏன் இன்றுள்ள தி.மு.க. தலைவர்களிடமே முற்போக்குச் சட்டங்களைப் போட, செயல் படுத்தப் போதுமான துணிவும் இல்லை; கருத்தும் இல்லை. தனித்தமிழர்களாகிய நாம்தாம் இனிப் போராட வேண்டும். இனி பெரியாரையும், தி.க. வையும் பின்பற்றுவதில் பயனில்லை. குமுகாயப் புரட்சியை மேலும் அறிவியல் முறையில் செய்து காட்டத் தென்மொழிதான் திட்டம் போட வேண்டும். தனித்தமிழர்கள்தாம் போரிட வேண்டும். தி. மு. க. வினருக்கு இன்று குமுகாயச் சீர்திருத்தக் கொள்கையும் இல்லை. பொருளியல் சீர்திருத்தக் கொள்கையும் இல்லை. பதவியைக் காத்துக் கொள்வதே தி.மு,க. வினர் இன்றைக் கொள்கையாக உள்ளது. இனி தி.மு.க. வை நம்புவதும் பின்பற்றுவதும் குருட்டுத் தனமே. தூய பெரியாரியமும், மார்க்சீயமும் கொண்டதாகத் தென்மொழி எழுத்துகள் உள்ளன. எனவே தென்மொழி இயக்கத்தில் தமிழர்கள் ஈடுபட்டுப் பாடுபட வேண்டுமென இம்மடல் மூலம் மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பாவலர்கள் போற்றும் மாவீரரே! நீங்கள் தமிழிலக்கிய உலகில் அழியாத பாவியங்களையும், நாடகங்களையும், புதினங்களையும், கதை, கட்டுரைகளையும் படைக்க வேண்டும். இதுவரை எழுதியது போதாது. போதவே போதாது. சீனத்து அரிமா மாசேதுங் புரட்சித் தலைவனாகவும் திகழ்ந்தான். சிறந்த பாவலனாகவும் திகழ்கிறான். அது போலவே, நீங்கள் தமிழினப் புரட்சி மாபெருந்தலைவனாகவும் திகழ்ந்து பாவலருள் மாணிக்கமாகவும் திகழ வேண்டுகிறோம். வாழ்க உங்கள் ஆற்றல்! பொதுமை விளக்கும் பாவியங்களைப் படையுங்கள். மாந்த அன்பைப் பிழிந்து பரணி பாடுங்கள். ஓரிறைவனை நம்பற்க. பொதுமக்களை நம்புங்கள். புரட்சியை நம்புங்கள். பொருளியல் புரட்சிக்குப் பரணி பாடுங்கள். புரட்சி செய்வது எப்படி என விளக்கிப் பாமாலை சூட்டுங்கள். பார்ப்பனீயத் தன்மையுள்ள எல்லாச் சமயங்களையும் சாடுங்கள். எல்லாச் சமயங்களையும் எதிர்த்து அறிவுப் போரிடுங்கள். ஆண்டவன் மீது நம்பிக்கை வேண்டா. மக்கள்மீதும், விடுதலை இயக்கத்தின் மீதும் நம்பிக்கை வையுங்கள் பார்ப்பானீயத்தைக் கொல்லப் பாடுங்கள். தமிழர்களில் பார்ப்பனீயத்தைப் புகுத்தும் மூடத்தன மாந்தர்களைத் தாக்கிக் கட்டுரை வரையுங்கள்!

—தி. நா. அறிவரசு. திருப்பூர்



"அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ—முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!"

மாமரமும் வளர்ப்பு முறைகளும்.

ஆசிரியர்: உ. அஞ்சனம் அழகன். அறி. இ. (வேளாண்)

கிடைக்குமிடம்: நியூ செஞ்சுரி புத்தக இல்லம்
6, நல்லதம்பிச் செட்டித் தெரு
சென்னை-2.

விலை: உருபா: 4-00

'மாமரமும் வளர்ப்பு முறைகளும்' எனும் இந்நூல் அணிந்துரையில் வேளாண்மை இயக்குநர் திரு. அரிபாசுகர் அவர்கள் கூறுவது போல 'வேளாண்மை சார்ந்த புத்தக உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்ளும்" என்பதில் எட்டுணையும் ஐயம் இல்லை தமிழில் இதுபோன்ற பல்துறை நூல்கள் மிகுதியாகத் தோன்ற வேண்டும். நூலாசிரியர் முன்னுரையில் "அயல் மொழிகளைக் கற்று விளக்கம் தேடும் பிற நாட்டு அறிஞர்கள் தமிழையும் அதில் வந்துள்ள அறிவியற் சுவடிகளுக்காகப் படிக்கும் காலம் அண்மையி லுள்ளது' என்று கூறுவதற்கேற்பப் புதிய துறையில் சிறந்த நூல் ஒன்றையும் எழுதி வளமூட்டியிருக்கிறார்.

நூலாசிரியர் தமிழக வேளாண்மைத் துறையில் தோட்டக்கலை ஆய்வாளராகப் பொறுப்பான பதவியில் இருப்பதால் தேவையான சரியான புள்ளி விளக்கங்களுடன் தெளிவாக எழுதியிருக்கிறார்.

மா பயிரிடும் முறையைப் பழங்களினின்று கொட்டைகளைத் தெரிந்தெடுப்பது முதல், நிலத்தைப் பண்படுத்தல், கொட்டையை முளைக்கப் போடுதல், ஒட்டுக்கட்டுதல், நீர்பாய்ச்சல், பூச்சிகளிடமிருந்து பாதுகாத்தல், துணைப்பயிர் செய்தல், பழத்தைப் பறித்தல்,

பக்குவப் படுத்தல், ஏற்றுமதி செய்தல் ஈருக ஒவ்வொரு நிலையிலும் தேவையான இடங்களில் அரிய படங்களுடனும், பட்டியல்களுடனும் சிறப்பாக விளக்கிச் செல்வது பாராட்டத் தக்கது.

படங்களுடன் விளக்கியிருப்பது மிகவும் பயனுடையதாக இருக்கிறது. காட்டாக ஒரு பூச்சியைக் குறிப்பிட்டு அதன் பெயரைச் சொல்லி அதற்கு இன்ன மருந்து தெளிக்க வேண்டும் என்று கூறி விடலாம். ஆனால் ஒரே பூச்சிக்கு வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்கள் இருக்கும். எனவே குழப்பம் ஏற்படும். பூச்சியின் படத்தைப் போட்டு இந்தப் பூச்சிக்கு இந்த மருந்து என்று கூறி விட்டால் குழப்பத்திற்கே வழியில்லாது போய்விடும். அதுபோலவே ஒட்டுக்கட்டும் முறையிலும் ஒவ்வொரு முறைக்கும் பல படங்களுடன் விளக்கியிருக்கிறார்.

"ஒட்டு பொருந்திய பாகத்திற்குக் கீழ்வரக் கூடிய இலைகளை உடனே ஒடித்து விடவேண்டும். இவ்விதம் செய்யவில்லை என்றால் மரத்தின் வளர்ச்சி குன்றிவிடும்" என்றும், "நோயின்றிக் காணப் படும் எந்தக் கிளைகளாயினும் சரி எந்தப் பக்கத்தில் அமைந்திருந் தாலும் வருங்காலத்தில் காய்களைத் தரும் கருவூலம் அவை என்பதை மனத்திற்கொண்டு கத்தரிப்பை நாடவேண்டும்" என்றும், தலைக் குழந்தை பெற்ற தன் மகளுக்கு ஒருதாய் குழந்தையை எவ்வாறு கண்ணுங் கருத்துமாகப் பேண வேண்டும் என்று அறிவுரை கூறுவாளோ அவ்வளவு ஈடுபாட்டுடன் கவனமாக ஆசிரியர் ஒவ்வொரு நிலையிலும் விளக்கிச் செல்கிறார். மா பயிரிட எண்ணும் ஒவ்வோர் உழவரும் இந்நூலைக் கையில் வைத்துக் கொள்ளவேண்டு மென்று கூறினால் அது மிகையாகாது.

மாம்பழத்தின் நன்மை தீமைகளை விளக்கும் போது அது பற்றிய சித்த மருத்துவக் கருத்துகளையும் கூறியிருப்பது பாராட்டத் தக்கது. மொத்தத்தில் நூலைப் படித்து முடிக்கும் போது புதிய துறையில் சிறந்ததொரு நூலைப் படித்த மனநிறைவு ஏற்படுகிறது.

ஆனால் மொழிநடையை நோக்கும் போது மனம் சுழிக்கிறது. ஒற்றுப்பிழை, சொற்பிழை, மரபுப்பிழை, தொடர்ப்பிழை இப்படிப் பிழைகள் மலிந்து காணக்கிடக்கின்றன. தேவையான இடங்களில் ஒற்று இல்லை. தேவையற்ற இடங்களில் இருக்கிறது.

காட்டு: நாற்றுகளை __ பிடுங்கும் போது உருண்டையான மண்ணுடன் வருவதால் நடுத்தர களிமண்.........(பக். 37) பெரும்பான்மையான இடங்களில் ஒற்று சேர்த்து எழுதப் பெற வில்லை. ஒற்று தேவையற்ற இடங்கள். காட்டு:

தாய் மரத்தைப்போல் தூயப் பேறுப் பெருக்கம்........"
(பக். 35)

நோயுற்றத் தண்டை........"(பக்கம் 161)

சொற்பிழை: சென்னிறம் (பக். 12), நிலமை (பக். 36, 103), ஏனனில் (பக். 81, 87), இத்தகய (பக். 53, 149), பழக்கூள் (பக். 137), மரக்கூள் (பக். 153), எல்லுப்பொடி (பக். 107).

பக்கம் 32-இல் மட்டும், ருசி, ரசம், வாரம், சீக்கிரம், மகசூல், சாதாரணம், ஆகிய ஆறு பிறமொழிச் சொற்கள் உள்ளன. ஒரே பக்கத்தில் (பக்கம் 33) ஹிடெய்பாக், ஸ்வாசான், ஜாவா, ஜீடாங், ஹவாய், பாரிஸ், ஷிபதா, ஜோவெல்ச், ஸ்மித், புருக்ஸ், ஹடன்கென்ட், ஜாக்குலேன், கிய்ட்லிப்பன்ஸ், மிஸ்டிகாவி, ஜாப்னு, ஹனிடியு என பல சொற்கள் வடவெழுத்து நீக்கப்பெருமல் எழுதப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பக்கமாகச் சொல்வதானுல் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

ஓர் இடத்தில் 'ஆசுதிரேலியா' (பக்கம் 5) என எழுதியுள்ளார். இன்னோர் இடத்தில் (பக்கம் 78) 'ஆஸ்திரேலியா' என எழுதியுள்ளார். 'டில்லி'யைத் தில்லி (பக்கம் 166) என்று எழுதுகிருர். 'டலம்பியாவை' அப்படியே எழுதிவிடுகிருர். ஓரிடத்தில் ரத்தினகிரி (பக்கம் 22) மற்றோரிடத்தில் இரத்தினகிரி (பக்கம் 100).

'மூங்கில்துண்டு' என எழுதலாம். இன்றேல் 'மூங்கிற்றுண்டு என எழுதலாம். இரண்டையும் விடுத்து மூங்கிற்துண்டு (பக்கம் 45') என எழுதியுள்ளார்.

ஒரு ஆண்டு (பக்கம் 39, 42, 107) இரு ஒட்டு (பக்கம் 43) இப்படி மரபுப் பிழைகளும் ஆங்காங்கே காணப் பெறுகின்றன.

"சில போது தொட்டியின் அளவுக்குச் செய்த மூங்கில் கூடைகளோ அல்லது தென்னை நாரில் செய்த கூடைகளையோ

தொட்டிக்குப் பதிலாக பயன்படுத்துவ துண்டு," (பக்கம் 39) "விதைகள் பெரிதாகவும் நீள்வளைய முட்டை வடிவில் சுருங்கி அமையும்" (பக். 12) என்பன போன்ற தொடர்ப் பிழைகளும், திரவத்தில் இக்காளான்கள் வளர ஆரம்பிக்கிறது. (பக். 167) என்பது போன்ற ஒருமைப் பன்மை மயக்கங்களும் மிகுதியாகக் காணக் கிடக்கின்றன.

இங்கு ஒவ்வொரு வகைக்கும் ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகளே காட்டப் பெற்றுள்ளன. எல்லாவற்றையும் சொல்வதானால் அதுவே ஒரு சிறு நூலாகிவிடுமென அஞ்சி விடப் பெற்றுள்ளது.

சிறந்த நூலை எழுதிய ஆசிரியர் அச்சேற்று முன் ஒரு தமிழாசிரியர் துணையை நாடியிருந்தால் நன்றாயிருந்திருக்கும், நூலாசிரியர் கருத்தில் கவனம் செலுத்தலாம். தமிழாசிரியர் மொழியில் கவனம் செலுத்துவார். கருத்தும் மொழியும் மோதும் போது புதிய பல கலைச்சொற்கள் உருவாகும்.

அறிவியல் துறையில் மொழித்தூய்மை இன்றியமையாதது அன்று என ஆசிரியர் கருதலாம். ஆங்கிலத்தில் வரும் அறிவியல் நூல்களில் எல்லாம் மொழித் தூய்மை பேணப்பெறுகிறது என்பதை இங்குச் சுட்டிக் காட்டுகிறோம். கருத்தும் மொழியும் இரண்டு கண்கள் போன்றவை. "கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக் காட்சி கெடுத்திடலாமோ?"

எனினும் இங்கு சுட்டப்பெற்றிருக்கும் குறைகளைக் கண்டு ஆசிரியர் மனந் தளர்ந்து விடலாகாது. நூல்நிறை செய்வோரின் கடமை என்பதால் அவை கூறப்பெற்றுள்ளன. எதிர்காலத்தில் இவை போன்ற குறைகள் ஏற்படாவண்ணம் ஆசிரியர் கவனித்துக் கொள்வாராக. இவர்போன்ற நூலாசிரியர்களிடம் பல புதிய துறைகளில் நிறைய நூல்களைத் தமிழ்த்தாய் எதிர்பார்க்கிறாள்.

"தொண்டு செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே" –பாவேந்தர்

—குமரன்

'நூல்நிறை'க்கு விடுப்பார் நூல்களில் இரண்டு படிகள் விடுக்க.

மக்கள்!

-மெய்ம்மைப்பித்தன்

ஒரே வகையான மக்கள் !
ஒரே வகையான நடைமுறை ! பழக்க வழக்கம் !
மாறி மாறி ஏற்கப் பெறுகின்றன ;
அல்லது கைவிடப் பெறுகின்றன !
தவறுகள் திரும்பத் திரும்பச் செய்யப் பெறுகின்றன!
உயர்வுகள் என்றும் ஒரே படி!
தாழ்வுகளும் அப்படியே!

அரசுத்தனமும் ஆண்டித்தனமும் என்றும் மாறியதில்லை !
அறநூல்கள் ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லுகின்றன !
சட்ட நூல்கள் மாற்றி மாற்றி எழுதப் பெற்றாலும், குற்றங்கள்
தண்டனைகள்—என்றென்றும் அப்படியே !

ஒருவர் விருப்பம் பலரின் விருப்பமாக மாற்றப் பட்டுள்ளது.
பலரின் விருப்பம் சட்டமாகி ஒருவரின் விருப்பமாகச்
செயல்படுகின்றது! பிறகு மாறுகின்றது !

உண்ணுவதிலும் உடுப்பதிலும் பெயரும் தோற்றமும் மாறியுள்ளன-
போல் தோன்றினாலும் அடிப்படை ஒன்றே !
அன்று உண்ணப்பெற்ற மூலப் பொருள்களே இன்றும் உண்ணப்
பெறுகின்றன ! உருவும் பெயரும் மாறியுள்ளன !
எத்தனை வகை உயிர்ப்பொருள்கள் அன்றைய மக்களுக்கு
உணவாகப் பயன் பெற்றன !
அவையெல்லாம் அப்படியப்படியே !

உடை !
உடுத்து, உடுத்துக் களையப்பெறுகின்றன !
முறைகள், தோற்றங்கள், நீள அகலங்கள், வண்ணங்கள்,
பளபளப்பு—இவற்றில்தாம் எத்தனை வகை !
அத்தனையும் திரும்பத் திரும்ப— மாறி மாறி -கையாளப்
பெறுகின்றன !
பெயர்கள்தாம் புதியவை ! உருவங்கள் ஒன்றே !

மீசையிலும் தாடியிலுந்தாம் எத்தனை வகை !
அவை அப்படியே திரும்பத் திரும்பக் கையாளப் பெறுகின்றன.

இல்லற வாழ்க்கையும் அப்படியப்படியே !
அதன் ஒழுகலாறுகளும் அவ்வாறே !
கணவன் மனைவியரின் கட்டுப்பாடுகளையும், விட்டுக்
கொடுப்புகளையும் தடுத்து நிறுத்தியவர் எவர் ?
அன்பு, பகை, சினம், மகிழ்ச்சி, துன்பம், உணர்ச்சி, நுகர்ச்சி–இவை
என்றேனும் மாறியதுண்டா ?
இவை என்றும் ஒன்றுதான் !
அன்புக்கு இனிஓர் இலக்கணம் பிறக்கப் போவதில்லை.
மகிழ்ச்சி மகிழ்ச்சிதான் ! துன்பம்துன்பந்தான் !

குழந்தை வளர்ப்பு முறைகளைப் புதியன போல அறிமுகப்
படுத்துகின்றனர். ஆனால் வளர்ச்சி எப்படி ?
போர்கள், விளையாட்டுகள்—இவற்றின் தோற்ற முடிவுகள் எப்படி ?
அப்படியப்படியே !
கருவிகள் மாறியுள்ளன !
கருத்துகள் அப்படியப்படியே !
அரிசுடாடலின் அரசியல் கொள்கைகளும், சாணக்கியனின்
அரசியல் தந்திரங்களும், மார்க்சின் பொருளியல் மெய்ப்பாடுகளும்
பித்தாகோரசின்—ஆர்கிமிடிசின் கணக்கியல்களும் வழிவழியாகப்
பின்பற்றப் பெறுகின்றன !

தலைமுறை தலைமுறையாகச் செய்து வந்தவற்றையே, இம் மக்கள்
குமுகாயம் திரும்பத் திரும்பச் செய்து வருகின்றது !
ஆனால் புதியது புதியதாய்—அப்பொழுதைக் கப்பொழுது—
வேறு வேறு பெயருடன்—உருவுடன் மாறி மாறிப் பயன் படுத்தி
வருகின்றது !

மொத்தத்தில்,
கருவியியல் மாறுகின்றது ! வளர்கின்றது ! பெருகுகின்றது !
காரணவியல் ஒன்றே !
அஃதாவது அகம் ஒன்றே புறம் வளர்கின்றது; மாறுபடுகின்றது !

ஆசைகள், பாசங்கள், விறுப்பு வெறுப்புகள், ஒட்டு உறவுகள்,
நட்பு பகையுணர்ச்சிகள், கணவன் மனைவி கலந்துறவாடல்கள்,

பொது அறங்கள்—முதலிய அனைத்தும் ஒன்றே !
ஆனால் அவ்வவற்றின் உயர, அகல, நீளங்கள், நிறங்கள்,
நுட்பதிட்பங்கள், காலக்கெடுவுகள் ஏற்ற இறக்கம் உடையன !
மாற்றச் சிதைவுகட்கு உட்பட்டன !

நிலமும் அதே !
நீரும், காற்றும் அதுவதுவே !
ஒரே கதிரவன் ! ஒரே நிலவு !
ஒரே பகல், இரவு ! ஒரே வெயில், மழை !

நாட்டு எல்லைகள் மாறுபடுகிறன !
பெயர்கள் வேறுபடுகின்றன !
அரசுகள், கொடிகள், அரண்மனைகள், படைபட்டாளங்கள்,
அவற்றின் அமைப்புகள், சள்ளை சண்டைகள் அனைத்தும்
மாறுகின்றன ; மடிகின்றன ; மீண்டுந் தோன்றுகின்றன ;
துலங்குகின்றன; மறுபடியும் சரிகின்றன !

ஆனால் நிலம் பழையதே !
மண் பழையதே !
அதில் மாற்றம் இல்லை ! மாற்றவும் முடியாது !

இவை அனைத்தையும் கட்டியாளும் உயிர்களும் ஒன்றே !
உருவங்கள் பெயர்கள் உறவுகள் மட்டும் வேறு வேறு !
நீங்களும் நானும் என்றும் இருப்பவர்கள் !
ஆனால், இப்பெயரில், இவ்வுருவில், இவ்வுறவில்—இக்காலத்தவர்கள்;
இவ்விடத்தவர்கள் !
மக்கள்—தோற்றங்கள் மாறுகின்றன !
குமுகாயம் ஒன்றுதான் !
உலகமும் பழையதுதான் !

"வலம்புரி"

ஆசிரியர் **புலவர் இறைக்குருவனார்**

0 தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் அளிக்கும் செந்தமிழ்த் திங்களிதழ்
தனியிதழ் 0-25 காசு ஆண்டுக்கட்டணம் 3 உருபா

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.

வலம்புரி
மதுரை-10.

நன்றுற்றலுள்ளும் தவறுண்டு!

(தென்மொழியன்பர்களுக்கு ஓர் அறிக்கை)

தமிழ்த்தொண்டின் பெயராலும் தென்மொழியின் ஈடுபாட்டாலும், என்னொடும் நம் குடும்பத்தோடும் நெருங்கிப் பழகும் வாய்ப்பை இயல்பாய் ஏற்படுத்திக் கொண்ட அன்பர் ஒரு சிலர், அவ்வப் பொழுது என்னிடத்துப் பிறர்பற்றிய கருத்துகளைக் கேட்பதும், நான் அவர்தம் ஆர்வத்தை மதித்து, உண்மை என்று நான் கருதும் நிலைகளை அல்லது நிகழ்ச்சிகளை அவர்தம்மிடம் உரைப்பதும், தாம் அவற்றை மிகவும் நடுநிலையாளர் போலும் என்பால் அக்கறை கொண்டிருப்பவர் போலும் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, நேரம் வாய்க்கையில் அவர்க்கும் எனக்கும் நெருங்கிய தொடர்புள்ளதாக அவர் மிகைப்படுத்திக் கூற, அதை நம்பும் அன்பர் பலர் அங்காந்து கேட்கையில், என்பால் வாயவிழ்த்துப் பெற்ற அக்கருத்துரைகளை ஒன்றுக்குப் பத்தாக அவர்களிடம் கொட்டி அளந்து காட்டுவதும், இடையிடையே என்னைப் பற்றிய ஆராய்ச்சி முடிபுகளைக் கலந்து தம் உள நலன்களை விலை போக்குவதும் முன்பும், இன்றும் தொடர்ந்து நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளாக—ஆங்காங்கே நான் சென்று வருங்கால் மெய்யன்பர் சிலரின் வாயிலாகத்—தெரிய வருகின்றேன். இவை போலும் நிகழ்ச்சிகள் மேலும் தொடர்ந்தும் நடைபெறலாம். (கடந்த மாத இறுதியில் சென்னையினின்று ஓரன்பர் மிக விரிவாகவும் விளக்கமாகவும் இதுபற்றி எழுதியிருந்ததுடன், அச் செய்திகளைப் பரப்பிவருவார் பற்றியும் தெரிவித்திருந்தார்.) பொதுத் தொண்டர் தம் வாழ்க்கையில் இவை தவிர்க்கவே முடியாதவையாகும். எனவே இவை பற்றியெல்லாம் நான் என்றும் கவலைப்பட்டதில்லை; இனியும் கவலைப் படப் போவதில்லை. ஆனால் ஒன்றை உங்கட்குச் சொல்லியாகல் வேண்டும்.

நான் உண்டு கொண்டிருக்கையில் 'வந்து விட்டார்களே தமிழன்பர்கள்' என்ற ஆர்வத்தாலும் அன்பாலும், கையில் எடுத்த கவளத்தையும் வாயிலிடாது, அவர்களுக்கும் உடனே பரிமாறச் செய்து, அவர்கள் சோற்றைக் குழம்பூற்றிப் பிசையும் வரை காத்திருந்து, அவர்களுடன் ஒக்க அருந்தும் இனிய நிகழ்ச்சியின் மெய்யன்பையும் மறந்து, இதுபோல் தாங்கேட்ட மறை பிறர்க்குப் பறம்பித் திரியும் அன்பர்களைப் பற்றியெல்லாம் நான் எழுதினால் ஏடும் கொள்ளாது; நாடும் பொறுக்காது. அவை இக்கால் தேவையும் இல்லை. ஆனால் முன்னர் நான் எழுதி வந்த 'என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்' எனும் கட்டுரையில் பின்னர் முறையே அவை எழுதப் பெறும். அதுவும் கூட அன்னோரன்ன அன்பர்களை ஒறுக்க வேண்டும் எனும் நோக்கத்தாலன்று; அத்தகைய சூழ்நிலைகளான் எதிர்காலப் பொதுத் தொண்டன் ஒருவன் உணர்வு அழுந்தி உளம் நொந்து உடல் தொய்ந்துவிடாது எங்ஙன் தன்னை முன் காத்துப் பின் நிறுத்திக் கொள்ளல்

வேண்டும் என்பதையும், தம்மிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பை யேற்படுத்திக் கொள்ளும் அன்பர்களிடத்தும் ஒரோவொருகால் நண்பர்களிடத்தும் எவ்வாறு எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும் என்பதையும் உணர்த்துவதற்காகவே ஆகும்.

அண்மையில் கோவை மாவட்டத்தில் சில கூட்டங்களில் கலந்து கொள்ளும் நிலையிருந்தது. அதன்பொருட்டு அங்கு நான் செல்கையில், அங்குள்ள அன்பர் ஒருவர்-நன்கு படித்தவர்—என்னைச் சரிவரப் பார்த்தோ நெருங்கிப் பழகியோ இல்லாதவர்—என்னைப் பற்றிப் பலவாறும் தாழ்வு படுத்தி அங்குள்ள மெய்யன்பர்களிடம் தாமே வலிந்து சென்று உரைத்தவற்றையும், என்பால் மிகவும் நெருங்கிப் பழகியதாகக் கூறி நம் குடும்பச் செய்திகளைப்பற்றித் திரித்தும் இழித்தும் பொய்த்தும் பலவாறு கூறியது பற்றியும் கேள்விப்பட நேர்ந்தது. அவற்றைக் கேள்வியுற்ற என்பால் மெய்யன்பு பூண்ட அன்பர் பலரும் அவற்றின் உண்மைகளைப் பின்னர் என் வழிக் கேட்டறிந்து மிகவும் வருந்திய நிகழ்ச்சியையும், அவர்கள் கேள்வியுற்ற செய்திகளையும் விரித்தெழுதப் புகுந்தால் அத் தகவிலரின் அல்லது அவர் போல்வாரின் பொய்யுரையும் புனைவுரையும் புரையுரையும் தக்கபடி வெளிப்படுமென்றாலும், அவற்றிலெல்லாம் கருத்துச் செலுத்தி அன்ன புரைநெஞ்சினர்க் கெதிர் நின்று உரை சாற்றுவது பொதுத் தொண்டுக்கே இழுக்காகு மென்பதால் அதனைத் தவிர்க்கின்றேன். இங்ஙன் என் வாயமைவையே தம் உரைகளின் மெய்யமைவாகக் கொண்டு தருக்கி, மேலும் அவ்வழிச் செல்வோர் தம் பெயர், ஊர் இவற்றுடன் அவர்தம் போலியுரைகளும் புனைவுத் தோற்றங்களும் தக்க சான்றுகளுடன் வெளிப்படுத்தப் பெறும் என்றும் கூறிக் கொள்கின்றேன்.

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்

எனும் திருவள்ளுவர்தம் வாய்மொழி எத்தகைய பட்டறிவு சான்றது என்பதை அறிவினர் உணர்ந்து கொள்வதுடன் அவர் தாமும் பொதுத் தொண்டில் இயங்குங்கால் அவ்வழி எச்சரிக்கையாக நடந்து கொள்க.

இனி, என்னிடம் நேரிடையாக நெருங்காமலேயே பிறர்வழி, அவரவர் மனநிலைகளுக் கேற்ப, தப்புந் தவறுமாய்த் தெரிந்து கொண்ட இத்தகைய செய்திகளை, ஒருசிலர் ஊர் ஊராகப் போய்த் தென்மொழியன்பர்களிடம் கூறுவதன் வழி ஓரிரு நாட்கள் அவர்கள்-பால் தங்கியிருந்தும் அவர்கள் செலவிலேயே உண்டு உறங்கியும் பின் அங்கிருந்து ஊர் திரும்ப வேண்டுமெனவும் சில அறிக்கைகள் அடிக்க வேண்டுமெனவும் கூறிச் சிறுசிறு பொருளுதவிகள் பெற்றும் வருவதாகவும் அந்நிலைகளுக்கு ஆட்பட்ட அன்பர் சிலர்

என்பால் நேரிற் கூறி வருந்தினர். இவ்வாறு புறங்கூறிப் பொய்த் தொழுதும் அவ்வறியாமை நிரம்பினூர்தம் நிலைக்கு இரங்கி, அவர்கட்கு அறிவுறுத்தி அவர்பால் எச்சரிக்கையாக விருப்பதைத் தவிர அந்நிலைக்கு ஆட்படும் அன்பர்களுக்கு வேறு வழியில்லை. காலப் போக்கில் அவர்களே தம் அளவில் தம் தவறுகளை உணர்ந்து திருந்தும் நேரம் உண்டு. அதுவரை நாமும் பொறுத்திருப்போம்.

நன்றுற்ற லுள்ளும் தவறுண்டு; அவரவர்
பண்பறிந்து ஆற்றுக் கடை !

—எனும் பட்டாங்கை இனியேனும் கடைப்பிடிக்க!

-பெருஞ்சித்திரன்

தமிழ்த் திருமணங்கள்

1. பட்டுக்கோட்டை.

சிங்கப்பூர்த் தன்மொழி' அன்பரும் தென்மொழிப் புரப்பாளரும் ஆகிய திரு. இறைவாணன் அவர்களின் இளவல் திரு. ஞானராசன் அவர்கட்கும் செல்வி வானதி அவர்கட்கும் கடந்த மடங்கல் திங்கள் 7 ஆம் பக்கல் (23—8—72) பட்டுக்கோட்டையில் திருமணம் சிறப்பாக நிகழ்ந்தேறியது. திருமண நினைவாகத் தென்மொழிக்கு உருபா 30–00 நன்கொடையாகத் தரப்பெற்றது. மணமக்கள் பல்குநல மெய்திப் பல்லாண்டுகள் மகிழ்ந்து வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

2. திருப்பூர்.

நெடுநாளையத் தென்மொழி அன்பரும் விடுதலை மறவரும் ஆகிய உரத்தநாடு (தஞ்சை மா.வ.) திரு. ப. இளம்வழுதி அவர்கட்கும் செல்வி கலைமணி அவர்கட்கும் துலை 23-ஆம் நாள் (8—11—72) திருப்பூரில் நிகழ்ந்த திருமணத்திற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனூர் அவர்கள் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கவும், சொற்பொழிவாற்றவும் செய்தார்கள். தமிழ் நலம் பேணும் அன்பர் பலர் திருமணத்திற்கு வந்திருந்து மகிழ்ந்தனர். தென்மொழியும் மணமக்கள் நீடூழி வாழ நெஞ்சார வாழ்த்துகின்றது.

3. கருமாரம்பாளையம்-அவிநாசி

தென்மொழியின் நலனில் அக்கறை கொண்டு அன்றும் இன்றும் என்றும் தோன்றாத்துணையாக நின்றுவரும் உண்மைத் தமிழன்பர் கைகாட்டிப்புதூர் (அவிநாசி, கோவை மா.வ.) திரு. ப. துரையரசன் செல்வி; கோ. ஈசுவரி அவர்களின் திருமணத்தைத் தென்மொழி ஆசிரியர், பாவலரேறு பெருஞ்சித்திரனூர் அவர்கள் நடத்தி வைத்தார்கள். திருமணவிழா துலை 28-ஆம் பக்கல் (13—11—72) கருமாரம்பாளையத்தில் நிகழ்ந்தது. கோவை மாவட்டத் தமிழன்பர் பலர் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர். செந்தமிழ்த் துரையரசர் தம் இல்லத்தரசியுடன் இனிதே நெடிது வாழ்ந்து நலம் பெற நெஞ்சார, வாழ்த்துகின்றோம்.

மகப்பேறு

நெய்வேலித் தென்மொழி அன்பர் திரு. இரா. பெருந்தேவன் அவர்களின் துணைவியார் திருவாட்டி செந்தமிழ்ச்செல்வி அவர்கட்குக் கடந்த துலை 25-ஆம் நாள் (10—11—72) ஆண் மகவு பிறந்தது. குழந்தை நலமுடன் வளர்ந்து தமிழ் நிலத்திற்கு நன்ருற்றி நீடுழிவாழ உளமுவந்து வாழ்த்துகின்ரும்.

செய்திகள்

மறைமலையடிகள் நினைவு விழா:

கன்னி 15-ஆம் பக்கல் (1-10-72) கோவை நகர உ. த. க. கிளையின் சார்பில் மறைமலையடிகளார் நினைவு விழா 'சன்மார்க்க சங்கக்' கட்டிடத்தில் சிறப்பாக நிகழ்ந்தது. விழாவில் சிவத்திரு. ப. சு. மணியம் அவர்கள் 'அடிகளார் உணர்த்திய சிவனியம்' என்னும் தலைப்பிலும் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் 'அடிகளார் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பிலும் சிறப்பாகச் சொற்பொழிவாற்றினர். "புரட்சிப்பாவேந்தர் ஒரு பொது நிலைப் பாவலனு? இனநிலைக் காவலனு?" என்பது பற்றி வழக்குரைஞர் செ. அரங்கநாயகம் க.மு., ப.இ.,ச.இ., அவர்கள் தலைமையில் பட்டி மன்றம் நடந்தது அதில் திருவாளன்மார் இலெனின் அரங்கராசன் க.மு., புனல் நாடன் க.மு., புலவன்மார் வேங்கைமார்பன், கு.நா. அரசாங்கம் முல்லையரசன் ஆகியோர் கலந்து கொண்டு திறமையுடன் தருக்கமிட்டனர்.

புதுகை உ.த.க. கிளை ஆண்டு விழா:

துலை 12 ஆம்நாள் (28-10-72) புதுக்கோட்டை உலகத் தமிழ்க் கழகக்கிளையின் ஆண்டு விழா பேரா. கு. திருமாறன் க.மு. அவர்கள் தலைமையில் நகர் மன்றத்தில் நடைபெற்றது பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள், பேரா. கு. வெ. பாலசுப்பிரமணியன் க.மு. அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர் புதுகை வட்டாரத் தனித்தமிழ் அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தனர். இடைநேரத்தில் பாவலரேறு அவர்கள் புதுக்கோட்டை அண்ணலார் பு. அ. சுப்பிரமணியனுர் இல்லத்திற்கு நலங்கேட்கச் சென்ருர்கள். அண்ணலார் அவர்கள் அன்புடன் வரவேற்றுப் பழங்களும் குளம்பியும் தந்து விருந்தோம்பினுர்கள். அப்போது 'தென்மொழி'யின் வளர்ச்சிக்கு நன்கொடையாக உரு: 10-00 பாவலரேறு அவர்களிடம் அளித்தார்கள்.

செ. சொ. பி. பேரகரமுதலி

உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்.

உறுப்பினர் பட்டியல்

திருவாளர்கள்:-- 1. தாமரை பெருஞ்சித்திரன், கடலூர்-1. 2. மா. பூங்குன்றன், கடலூர்-1. 3. புலவர் இறைக்குருவன், மதுரை-10. 4. இறை. பொற்கொடி, மதுரை-10. 5. காளியப்பன் (நாராயணன்) நெய்வேலி-1. 6. செ. பன்னீர்ச்செல்வம், சென்னை-2. 7, த. வளங்கோ, புதுவை-1. 8. செ. சித்தார்த்தன், அறி. இ. (பி. எசி.) சென்னை-25. 9. கி. மகிழ்கோ, புதுவை-5. 10. திருநாவுக்கரசு, பொ. இ. வேலூர்-9.

11. புலவர் சா. அடல் எழிலன், திருவையாறு. 12. ந. முத்துக் குமரன், அறி. இ. ஆ. ப. குளத்துப்பாளையம். 13. திருச்சி மாவட் டத்தான், 14. ந. செங்குட்டுவன், திருச்சி-14. 15. அருண்மொழி யன், திருச்சி-14. 16. பொற்செழியன், (வே.நா. இரேணுகோபால்,) பெங்களூர்-1. 18. உணர்வுப்பித்தன், (ஆ. சொக்கலிங்கம்) திருச்சி-10. 18. உளங்கவரழகன், இராசிபுரம். 19. நாவை-சிவன். (தமிழ்மகன்) கீரனூர். 20. ச. கலியமூர்த்தி, காவேரிநகர்.

21. .... 22. சி. பூ. மணி, பெங்களூர்-21. 23. க. அப்பாத்துரை, நடுப்பட்டி. 24. ச. சின்னத் துரை, நெய்வேலி-1. 25. அன்புவாணன், (த. கோவிந்தன்) நெய் வேலி-1 26. அ. அருள்நெறி, நெய்வேலி-2. 27. ஆ. கருப்பையா, நெய்வேலி-3. 28. இரா. அப்பாவு, நெய்வேலி-3. 29. இரா. பெருந் தேவன், நெய்வேலி-2. 30. மு. அறவாழி, நெய்வேலி-1.

31. பொன்-தமிழ்மாறன் (இராமசாமி), நெய்வேலி-1. 32. தமிழநம்பி, அறங்கண்டநல்லூர். 33. புலவர் பா. வீரப்பன், ஆனை மலை, 34. நா. இளமாறன், பெகும்பகல்லாக்குடியிருப்பு, 35 க. மலர்ச் செல்வன், (தலைராசன்) மதுரை-1. 36. பர். பொ. இளங்கோ, உக்காரம். 37. செ. பெரிய நாடார், தெற்குச்சூரன்குடி. 38. சே. கு. அரசங்கோவன் மேட்டூர் அணை-1. 39. ஞா. தாமசு, மணிமுத் தாறு. 40. கே. பூபதி, பெங்களூர்-16.

41. துரை. சம்பத்குமார், க. இ. ஈரோடு-1. 42. அறவாழி, தளவாய்ப்பட்டணம். 43. இல. க. இரத்தினவேல், திருச்சிராப்-பள்ளி-1. 44. சு. திருஞானம், திருச்சிராப்பள்ளி-1. 45. ஆம்பூர் கே. ஏ. மணவாளன், பெங்களூர்-5. 46. இர. பரணன், பரணம். 47. மு. வ. பரமசிவம், நடுப்பட்டி. 48. .... 49. மு. திருநாவுக்கரசு, அண்ணாமலைநகர். 50. க. இராமசாமி, கோவில்பட்டி.

51. ஓ. பிச்சை, தெற்குத்தெரு, மேலூர். 52. இல. வேலரங்கன், சோமையனூர். 53 கெம்பீரம், பெங்களூர்-1. 54. செ பெருமாள், கடத்தூர். 55. புலவர் வ. அரிஅரன், ஒண்டிப்புதூர். 56. ந. தேவராசன், வேலூர்-1. 57. க. செகநாதன். பி.எசி. ஈரோடு. 58. இராசமாணிக்கம், காரைக்குறிச்சிப்புதூர். 59. வெ. கிழார், பெங்களூர்-21. 60. சா. பொழிலன், நெய்வேலி-2.

61. கா.சே. சாத்தப்பிள்ளை, பி. எசி. பி. டி. ஆமூர். 62. புலவர். கா. இளமுருகன், புன்செய்ப்புளியயபட்டி. 63. ப. கு. முருகவேள், புன்செய்ப்புளியம்பட்டி. 64. புலவர் நா. அருணன், எரங்காட்டுப்பாளையம். 65 பா. அறவாழி, சென்னை-7; 66 அ. வெள்ளிமலையார், திருச்சிராப்பள்ளி-8; 67 சாலை. இளந்திரையன், எம்.ஏ. எம். லிட், புதிய தில்லி-5. 68 .... 69. மூல்லைவாணன், சிங்கை; 70 ந. இராசகோபாலன், தஞ்சாவூர்–1.

71 அகத்தி கிருட்டிணன், இ. அ. (வேளாண்) சோளிங்கபுரம். 72 ஏ. கே. மணி, பி. இ, ஏ. எசு. எசு–1. பெங்களூர் 28 74 வே. ஐயனப்பிள்ளை, வேம்பனூர்; 74 வ. கௌரிநாதன், திருச்சி-14 75 எழிலரசன், திருச்சி-14 76 பொன்-தங்கவேலன், பெங்களூர்-15 77 தி. எழிலரசன், (இரமணி, மதுரை-3) 78 பொன்-மாறன், (இராமகிருட்டிணன்), மதுரை-3. 79 மறை-நித்தலின்பன், கோவை 80 தமிழக்கூத்தன், கருந்திட்டைக்குடி.

81 புலவர் ச. தமிழ்வேலன், மீஞுட்சிபுரம். 82 அ. இளங்கோ பி. எசி. பி. டி. பெருமாம்பாளையம் 83 புலவர். த. மாணிக்கம், கூகலூர் 84 புலவர் திரு. மாரி. விசுவநாதன், வால்பாறை 85 பா. வளன்அரசு. க. மு. திருநெல்வேலி-2 86 கரு. பேச்சிமுத்து, திருச்சி 14 87 அ. சாமிக்கண்ணு, அரூர் 88 கே. அரசு பெங்களூர்-21, 89 ந. சுப்பையா, அருமடல்; 90 த. சுப்பிரமணியன், செட்டிக்குளம்.

91 த. வையாபுரி, ஆனைமலை; 92 எசு. கே. எசு. காதர்' அம்பாலா; 93 இர. சு. கிருட்டிணன், கீழ்த்தென்குலம்; 94 அ. மீ. இராமமூர்த்தி, திருவாரூர். 95. வை. வேதையன். திருவாரூர். 96. த. சரவணத்தமிழன், திருவாரூர். 97. மா. இறைவன், திருச்சி-14. 98. த. அன்பழகன், கடலூர்-1. 99. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி. 100. பெ. அன்னகாமு, கெ. கல்லுப்பட்டி.

101 க. நாராயணன், பெகும்பகல்லாக்குடியிருப்பு; 102 வி. இராசமாணிக்கம், எம்.ஏ. கோயமுத்தூர் 18; 103 மு. கதிரவன் நெமலி; 104 .... 105 துரை–தெட்சிணுமூர்த்தி, மேலச்செம்மங்குடி; 106 க. சிவானந்தம் திருமலைராயன்பட்டினம்.

107 அரங்க-திருமாறன், புதூர், உரத்தநாடு; 108 க. அன்புமணி, திருச்சி 15; 109 கரி. நடவரசன், நெய்வேலி 3; 110 இரா. தமிழன்பன், வேப்பங்குறிச்சி.

111 ப. துரையரசன், கைகாட்டிப்புதூர்; 112 கோ. நிலவழகன், க. மு. சென்னை 30; 113 க. சி. அகமுடைநம்பி., பி. இ, மதுரை; 114 சு. வலங்கைப்பாண்டியன் மதுரை; 115 சி. குமாரசாமி, எல். எம். இ., மதுரை 116 பொன்-இராமானுசம்; சுத்தமல்லி; 117 நெல்லை சு. மணியன், திருச்சி 2; 118 முத்து-செல்வன், அலதூர்; 119 ஆ. ப. தொல்காப்பியன், மொ. ஆலமரத்துப்பட்டி; 120 இரா. தங்கராசன், மாரம்பாடி.

122 ப. பெரியசாமி, விருதுநகர்; 122 பழங்கரைவேள். பழங்கரை; 123 30-ஆம் அணி இந்திய வான்படைத்தமிழன்பர்கள், 124 உ.த.க. பெங்களூர் நகரக்கிளை; 125 செ. தென்னவன், கவுண்டன் பாளையம; 126 காரை-இறையடியான், காரைக்கால்; 127 …… …… 128 தே. நே. சித்திரச்செல்வி, ஆரூர் 129 புலவர் இ. தேவநேயச்சித்திரன், கீ அ. செங்கழுநீர்ப்பட்டு. 130 வே. மு. பொதியவெற்பன், செங்கழுநீர்ப்பட்டு.

131 ந. அரணமுறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். 132 த. முத்துக்குமரன்; க. இ. பாம்பூர்; 133 ஆர். வேணுகோபால், புதுவை-1; 134 இரா. செயராமன், நெய்வேலி 2 135 திருவாட்டி வேளாங்கண்ணி உரோசுமரி, தி. அத்திப்பாக்கம்; 136 தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி 1; 137 மு. இளம்பரிதி, உரத்தநாடு; 138 ப. இளம்வழுதி, உரத்தநாடு. 139 ந. இளமுருகன் அறி. இ. ஆ. ப நீடாமங்கலம்; 140 பி. என். அப்பாசி கவுண்டர், காளிங்கராயன்புதூர்.

141 சிங்கை-செங்கோடன், அம்மாப்பேட்டை, தஞ்சை; 142 இரா. தமிழ்வாணன், நாயனூர்பாளையம்; 143 அ. தங்கராசன், ஈப்போ, மலேசியா; 144 கு. அண்டிரன், நாயனூர்பாளையம் [தெ. ஆ] 145 ப. தாயம்மாள் அறவாணன், சென்னை 29; 146 ச. பாண்டியன், ஈப்போ, மலேசியா; 147 பெ. புதுமைப்பிரியன், மலாக்கா; 148 ……. ……. 149 இரா. வெற்றியரசு, நெய்வேலி1, 150 ப. நன்முல்லை, சிங்கை.

151 இரா.அருட்குவை, நெய்வேலி 3; 152 திருமலை. குமணன், சிங்கை; 153 இ. எசு. சி. மூர்த்தி, பெங்களூர் 16; 154 துரை அருண்மொழி, நெய்வேலி 1; 155 செ. மேதலைவன், நெய்வேலி 3 156 த. செகந்நாதன், அம்பலாப்படைவீடு; 157 இறைவாணன்-

நிலா, சிங்கப்பூர்; 158 ப. தண்டபானி, கான்பூர்; 159 சே. கணபதி, மலேசியா; 160 புலவர்-குமர. தன்னொளியன், கண்ணமங்கலம், (வட ஆ. மாவட்டம்)

151 ஏ. செல்வராசு, கான்பூர் 8; 162 செந்தமிழ்ச்சேய், பொறி இ. அரசூர், தெ. ஆ. மாவட்டம்; 163. அ. ப. கி. சீதாராமன். உடுமலைபேட்டை. 164. ம. துரைசாமி. பீடோங்-மலேசியா; 165 எம். ஏ. இளஞ்செல்வன், (எம். இராமு) பீடோங்-மலேசியா; 166 பெ.அரசு, மலாக்கா; 167 இரா. காளிமுத்து கோலாலம்பூர்; 168 மருத்துவர் சி. இராமச்சந்திரன், சேலம்; 169 பி. இலக்குவன், குவைத்து; 170 புலவர் கா. சு. சண்முகம், பல்லடம்.

171 புலவர் ப. சுப்பையன், நாச்சிப்பாளையம், திருப்பூர்; 172 புலவர் திருமேனி, நாகராசன். காரைக்கால்; 173 காரை-அறவாழி, காரைக்கால்; 174 மு. துரைச்சாமி, க. மா. அ. சுலுத்தான்பேட்டை, பல்லடம்; 175 க தமிழப்பன், அ. அரங்கசாமி, திருப்பூர் 2; 176 சி. அறிவுறுவோன், அம்மையகரம்; 177 திருவாட்டி இராசேசுவரி செந்தில், அம்பாலா; 178 கல்லூர் மணியம். மலாக்கா, 179 பறம்பை. தென்னவன், பறம்புக்குடி. 180 பொ. பொன்னரசன், க. இ. மேலூர்.

181 அர. இராசேந்திரன், க. இ. குளத்துப்பாளையம். பல்லடம் 182 அதியமான், சா. முருகு, ஆசிரியர், அதியமான்குப்பம், திருமுதுகுன்றம். 183 மு. பொய்யாமொழி, காட்டுக்கூடலூர். தெ. ஆ) 184 துரை-வேழவேந்தன், காட்டுக்கூடலூர். (தெஆ) 185 சி. இராசாங்கம், அறி. இளை. தஞ்சாவூர். 186 கு. பெருந்துரை; அதியமான்குப்பம். திருமுதுகுன்றம். 187 பொன். பகலவன், நெய்வேலி 3; 188 கோ. கண்ணன், நெய்வேலி 3; 189 பொன்-தமிழ்முல்லை, சிங்கப்பூர்-2; 190. சேதுகா-முத்துக்குமரன். பல்லடம்.

191 பா. சு மணியன், சில்லாங்கு-9; 192 கோ. சாந்தாலிங்கம், சில்லாங்கு-9; 193 வி. இராமாநுசம், பொறி. இ. நெய்வேலி-1; 194 இரா. ஆறுமுகன், பு புளியம்பட்டி; 195 மா. கவிச்செல்ல நடராசன், C/o 56. A. P. O; 196 இரா. விசுவநாதன், க. இ. (வணிகம்) தஞ்சாவூர். 197. அன்பு. ந. வை. இளஞ்செழியன், அம்மையன்பட்டி. [தஞ்சை] 198. புலவர் ஒ அரசு, குன்றூர்-2. 199 மு. குமாரசாமி, க. மு. மேலூர்; 200. ந. வெ. பெருமாள். அறி.இ புதுவை-1; 201 புலவர் தோ. கமலநாதன், வேலூர்-6; 202 இரா.ப. நிறையின்பன், அறி.இ. போடிமீனாட்சிபுரம்; 203 சிங்கை-மா இளங்கண்ணன், சிங்கப்பூர்-12. 204. இரெ. பரமானந்தம். தஞ்சாவூர்-1. 205. அ. சுந்தரராசு. பாப்பாநாடு. தஞ்சை.

" உருப்படியாகாதடா, தமிழா
தமிழகம் உருப்படியாகாதடா "

இதுதானு விடை! தமிழ்ச் சான்றோரே ஏழை மாணவனின் கேள்விக்கு விடை கூறுங்கள்!

— இரா. ப. அருளரசு, அழகப்பர் கல்லூரி காரைக்குடி-3.

0: 339: தென்மொழி இதழ் வரும் வரும் என ஏங்கி நிற்கின்றோம். பன்னிரண்டு ஆண்டுகளாய்த் தமிழுணர்வு எழுச்சி பெறத் தாங்கள் உழைத்த உழைப்பை மறக்கவில்லை. தமிழுக்கு நன் முறையில் தூய தமிழ் வடிவில் நல்ல ஒரு முன்னேற்றம் கண்டோம். இந் நிலையில் தங்கள் இதழ் நின்றால், உழைத்த உழைப்பு வீண்! கேடயத்தை நழுவ விட்டுவிட்டோம் எனப்பொருள். தாங்கள் மீண்டும், இதழைத் தொடர்ந்து சிறிய அளவிலாகிலும் வெளியிட வேண்டும். தங்கள் இதழை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளோம். இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் நம்மிதழ் (தென்மொழி) வெளிவர வேண்டும். தமிழ் விடாயைத் தீர்க்க பைந்தமிழ் நீர் பருகத் தாருங்கள். செய்தித்தாள் விற்பனை இடத்திற்குச் சென்றால் நல்ல இதழ் இல்லை. கை கூசுகிறது. ஏக்கப் பெருமூச்சு வருகிறது. ஆகவே தென்மொழி இதழைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

— இல. வேலரங்கன், தடாகம், கோவை.

0: 340: தமிழுக்குத தம் வாழ்நாளை ஒப்படைத்துள்ள பெருந்தகை நீவிர். அருள் கூர்ந்து தென்மொழி இதழைத் தொடர்ந்து நடத்துங்கள். இன்னும்-வரப்போகும் போராட்டங்கட்கும் உடைவாளாகவும் கேடயமாகவும் விளங்கும் தென்மொழி இதழையா தாங்கள் தொடருவதா வேண்டாவா எனக்கேட்டுள்ளீர்கள்! நிறுத்தவே வேண்டாம் மூவாயிரம் ஆண்டுகட்குப் பின்பு இப்பொழுதுதான் தமிழனுக்குத் தன்னுணர்ச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது. அதற்கு எது கரணியம் என நினைக்கிறீர்கள்! ஐயமின்றிச் சொல்வேன் நம் தென்மொழி இதழே! பொருளியல் நெருக்கடியா, சொல்லுங்கள்; ஒருவேளைக் கஞ்சியையாவது நிறுத்திவிட்டுப் பணம் அனுப்புகிறேன் அனுப்புகிறோம். அதனால் உயிர் ஒன்றும் போய்விடாது. போனால்தான் போகட்டுமே. அஃதன்றி, வேறு கரணியங்களானால், அருள்கூர்ந்து உள்ளத் தாங்கல் அடைய வேண்டாம். தொடர்க இதழ்ப்பணியினை!

— கி. பாலு, மின்பாறை, கோவை மா. வ.

0: 341: கடந்த விடுதலை மாநாட்டில் இருநூறு பேர்கள்தாம் கலந்து கொண்டனர் என்பது எனது நெஞ்சில் வேல் பாய்ச்சுவதாக உளது. அதனாலேயே நாம் கலங்கி விடக்கூடாது; தொடர்ந்து நம் கொள்கைப் பாதையில் நடையிட வேண்டும் எனத் தங்களை விழைந்து வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

— வெ.கு.பாலசுப்பிரமணியன், (இளங்கலை(வரலாறு) கோவை-18

0: 342: எள்ளை விதைப்பதற்குப் பண்படுத்தப்பட்ட நிலத்தைக் கொள்ளை விதைக்கப் பயன்படுத்திவிட்டார்களே என்பதனால் ஏற்பட்டுள்ள தங்களின் உள்ளக்குமுறலையும் என்னால்உணர முடிகின்றது. நெருஞ்சில் போன்ற முள்ளை விதைத்தவர்களையும் கண்டபின்பு-கொள்ளை விதைத்தவர்களுக்காக வருந்தித் தென்மொழியைத்

[அடுத்த பக்கம் பார்க்க]

தொடர்ந்து வெளியிடுவதா என்ற வினாவை எழுப்பியுள்ளீர்கள். அவர்கள் விதைத்த கொள்ளுக்கிடையிலே அங்கொன்றும் இங் கொன்றுமாக முளைத்து, வளர்ந்து, பூத்துக் காய்த்துள்ள - நீங்கள் விதைத்த எள்ளைப் பற்றியும் எண்ணுங்கள். பாவலர் பெருஞ்சித் திரனாரின் அயராத உழைப்பிற்கு அஃதொரு சான்று. தென்மொழி யின் வெற்றிக்கோர் எடுத்துக்காட்டு. செத்துக் கொண்டுள்ள தமிழர் களின் வாயை இறுதியாகக் குளிர்விக்கும் நீர்த்துளியாகவேனும் தென்மொழி வெளிவந்துதானாகல் வேண்டும். மறவர் படைக்குப் போர் முரசாகவும் - பின்னர் ஒலிக்கப்போகும் வெற்றி முரசாகவும் தென்மொழி திகழ வேண்டுமென்பதே என் விருப்பம்.

— **வை. வேதையன்,** திருவாரூர்.

0: 343: தனித்தமிழ் பேணுவதனையும், இனம் மொழி, நாடு விடுதலை பெற விழைந்து போராடத் திட்டமிடுவதையும் செயல் படுவதையும் உளமார வரவேற்கிறேன். இப்பணியில் நானும் எனது குடும்பமும் முழுக்க ஈடுபடுவதால் எங்களுக்குள்ள அத்தனையையும் இழக்க நேரிட்டாலும் அதற்காகப் பெருமையும் இறும்பூதும் தருக்கும் கொள்ளுவோம் என்பதைத் தங்களுக்கு மிகபபணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏனெனில் '**எந்தமிழ் மொழிவாழ்க**' '**எந்தமிழ் இனம் வாழ்க**' '**எந்தமிழ் நாடு வாழ்க**' எனும் வாழ்த்துமொழி களை ஒவ்வொரு நாளும் குறைந்தது 150 தடவைகளாவது சொல்லி இன்புறுகிறேன். இவ்வாறு வாழ்வதால் '**உலகுமீட்புறுக**' '**காப்புறுக; மகிழுறுக**' என்று 15 தடவைகளாவது சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்ளுகிறேன். இவ்வாறு சொல்லி மகிழும் நான் செய்து மகிழத்தாங்கள் வழி வகுத்துத் தருவீர்களானால் தலைவணங்கி ஏற்றுக்கொள்ளுவேன். — **தெ. சாலமோன் இராசு,** மதலைப்பட்டி.

0: 344: தாங்கள் அழகப்பர் தமிழ் மன்ற இறுதி விழாவிற்கு வந்தபின், நூலகப் பொறுப்பாளர் தென்மொழித் தொகுப்புகளை எங்களைக் கேட்டதும், பின் நாங்கள் பாசறைவழி அவற்றை வாங்கிக் கல்லூரி நூலகத்திற்குக் கொடுத்ததும் அறிவீர்கள். அதன் பின் எவரோ மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்தாராம். தென்மொழித் தொகுப்புக்களை வைக்கக்கூடாதென்று கட்டளையாம் இஃது என் செவிக்கு எட்டிய செய்தி;என்ன இருந்தாலும் உங்களுக்கு நூலகத்திலிருந்து அஞ்சல் வரும். அவற்றை அங்கு வைப்பதிலிருந்து எடுத்துவிட தாங்கள் உதவமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

— **விடுதலை மறவன்,** காரைக்குடி.

0: 345: 'தென்மொழி'கிடைத்துப் பெருமகிழ் வெய்தினேன். அதில் ''**ஈழத்தடிகளுக்கு இரங்குங்கள்**'' என்ற தங்களின் பரிவான வேண்டுகோள் இடம் பெற்றிருப்பதற்காக மட்டும் நான் மகிழ்ச்சி அடையவில்லை. தமிழன்பர்கள் இரண்டு திங்கள் '**தென்மொழி**' இல்லாது தவித்த குறை நீங்கிற்றே என்பதுதான் என் மகிழ்ச்சிக்கு முதற்காரணியம். -**ஈழத்துஅடிகள்**-காஞ்சிபுரம்-3

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.